கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

ஏப்ரல் 2. 1955 4 அணா

கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

இதனுள்

கார்ட்டூன்	2
கண்டன நாள் (சலியங்கம்)	3
தாமரையாள் சொன்ன கதை	6
திருக்குறளுக்கு அவமானம்	10
நரபலி	13
ஹெலிகாப்டர்	
காதல் உள்ளம்	[illegible]
அக்கினிக் கோபம்	37
குந்தவை	44
பஸ் ஸ்டாப்பிங்	47
இன்பக்கண்ணீர்	50
சரியான பரீட்சை	56
இலட்சியக் கனவு	66
திரை அரங்கம்	

நிதி மந்திரி சுப்பிரமணியத்தின் கூற்று

சென்னை, மார்ச் 24—

"இலங்கையிலிருந்து குடியுரிமை மறுக்கப்பட்டு சென்னைக்குத் திரும்புகிறவர்களுக்கு நிவாரணமளிக்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளுவது இப்போது தேவை இல்லை" என்று சென்னை அரசாங்கம் கருதுவதாக மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.



கலை மன்றம்

ஆசிரியர்: பால்வண்ணன்

சென்னை | 2—4—55 | சனி

கண்டன நாள்

ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்கும் முகத்தால் 20-3-55 அன்று சென்னை மாநிலம் முழுவதும் கண்டன நாளைக் கொண்டாடியது திராவிட முன்னேற்றக் கழகம். ஐந்தாண்டுத் திட்டம் வடவருக்கு மகிழ்ச்சியளிக்கும் திட்டமாகவும்—நமக்குத் துன்பம் தரும் திட்டமாகவும் அமைந்திருக்கிறது, என்ற உண்மைகளை நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கி திராவிடத்திற்குத் தீங்கு தரும் தீய திட்டமாகிய ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்கிறோம்.

பணம் கொடுப்பது நாம். பயன் பெருவது வடநாடு! இந்த நிலை சரியா? என்ற கேள்விக் குறியை எழுப்பும் எழுச்சி நாள்தான் மார்ச் 20. இந்த மகத்தான கண்டன நாள் வெற்றிகரமாகத் திராவிட மெங்கும் கொண்டாடப்பட்டது. மக்களும் ஐந்தாண்டுத் திட்டத்தின் அலங்கோல நிலையை நன்கு புரிந்து கொண்டு வடவர் செய்யும் சூழ்ச்சியை உணர்ந்து விட்டனர். இந்த அரிய காரியத்தை நல்ல முறையில் நாடெங்கும் கொண்டாடிய தோழர்களை நாம் பாராட்டுகிறோம்.

சாதிப் பள்ளிகள்

சாதியின் பெயரால்—மதத்தின் பெயரால்—வகுப்பின் பெயரால் நடைபெறும் பல சபைகளும், சங்கங்களும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதை நாம் கண்டதில்லை. அந்தந்தச் சாதியார் அந்தந்தச் சாதி மக்களுக்கு மட்டும் உழைத்து வரும் போக்கு நல்ல போக்கல்ல என்பது மட்டுமல்ல, நல்லவர்கள் விரும்பாத விபரீதப் போக்குமாகும். இந்த நிலைமை எங்கு உருவானாலும் நாம் அதனைக் கண்டிக்

கின்றோம். இந்த வகுப்புணர்ச்சியும் சாதி வெறியும் கொண்டு சுய நலத்தில் நாட்டம் கொள்ளும் முறை திராவிடத்தை விட்டு ஒழிய வேண்டும். அப்போதுதான் நமது இலட்சியமாகிய ஐக்கிய திராவிடம் அமையும். அதில் மக்கள் மாக்களாக வாழ்வர்; சாதிகளாக ஒருநாளும் பிரிந்து வாழ மாட்டார்கள்; இதனை நாம் பலமுறை எடுத்துக் கூறி வருகிறோம்.

இந்த வகுப்பின் பெயரால்—சாதியின் பெயரால் கல்வி நிலையங்கள் அமைவது என்பது கண்டிக்கத்தக்கதாகும்.

மதச் சார்பற்ற சர்க்கார் என்று கூறிக் கொள்ளும் காங்கிரஸ் அரசாங்கம் மதம்—சாதி இவைகளின் பெயர்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு உதவி செய்வது சரியல்ல. குறிப்பிட்ட சாதிகளின் பெயரால் நடத்தப்பட்டு, அந்தச் சாதியினருக்கே சலுகைகள் கொடுத்துகொண்டு வந்தால் மற்றவர்களை அலட்சியப்படுத்துவதாகும் வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்குவதாகும். இதனைத் வகுப்புவாதம்—என்று குறை கூறுகிறோம். பள்ளிகளில் படிக்கதான் நாம் விரும்பும் மாணவர்களுக்கு எந்தப் பேதமும் இன்றிப் பாடங்களைப் போதிக்கவேண்டும்.

இந்த நல்ல காரியத்தைப் பம்பாய் அரசாங்கம் செய்யும் என்ற செய்தி பத்திரிகைகள் கூறக் கேட்டு ஓரளவு மகிழ்கின்றோம். பம்பாய் அரசாங்கம் இனிமேல் சாதி வகுப்புப் பள்ளிகளுக்கு உதவி செய்வதை நிறுத்திக் கொள்ளும் என்று தெரிகிறது. இருந்தாலும் சாதிப் பள்ளிகளை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு "பிராவிடண்ட்" நிதிக்கு சர்க்கார் பங்கு தராது என்றும் நாம் அறிகிறோம். இதுபோல சிறு முன்னேற்றங்களைப் பம்பாய் அரசாங்கம் செய்து வருகிறது இந்த முறைகளையாகிலும் சென்னை உணரவேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம்.

இந்தச் சிறு முன்னேற்றங்கள் செய்து விடுவதால் கல்வி நிலை உயர்ந்து விடும் என்றோ—நூற்றுக்கு நூறு பேர்கள் படித்து விடுவார்கள் என்றோ நாம் நினைக்கவில்லை. பேரிருளில் இருப்பவன் கண்களுக்கு ஒரு சிறு நெருப்புப் பொறி காட்டும் ஒளியைத்தான் இந்த முன்னேற்றங்கள் காட்டும். ஆனால் நாம் விரும்புவது சூரியனை. அந்த நிலைமை வரும்வரையில் இந்த நிலைமையாவது இருக்கட்டுமே என்பதுதான் நமது எண்ணம்.

மேலும், போபால் மாநிலத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் ஆரம்பக் கல்வி இலவசமாகத் தருவதாக அந்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்று அந்த நாட்டின் முதலமைச்சர் டாக்டர் எஸ். டி. சர்மா சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார். இதுவும் ஓரளவு போற்றப்பட வேண்டியதே

யாகும். இந்த முறையைச் சென்னை அரசாங்கம் பின் பற்றினால் ஓரளவு நமது நாட்டில் கல்வி நிலை சற்று உயரலாம் என்று கருதலாம்.

மேலும் நமது மந்திரிமார்களுக்கும் இப்போதுதான் தமிழ் மொழியின்மீதும், ஆரம்ப ஆசிரியர்கள்மீதும், நெசவாளர்கள்மீதும், உழவர்கள்மீதும் அக்கரை ஏற்பட்டிருப்பதாகப் பேசிக்கொண்டு வருகிறார்கள். இவை எல்லாம் உண்மையிலே நன்மைகள் செய்வனவாய் இருக்கவேண்டும். உதட்டுப் பேச்சுகளுடன் நின்றுவிடக் கூடாது என்றும் நினைவுப்படுத்துகிறோம்.

நல்ல காரியங்களைச் செய்யுங்கள்! நல்ல பெயருடன் இருங்கள்! அறிவை வளர்த்து அறியாமையை அழியுங்கள்! என்று கூறுகிறோம்.

சாதி—மதம் இவைகளின் பெயரால் எந்தப் பொது நிலையங்களும் இருக்கக் கூடாது? அதற்கான நடவடிக்கைகளைச் சென்னை அரசாங்கம் நிச்சயம் எடுக்க வேண்டும். அப்போதுதான் மதச் சார் பற்ற அரசாங்கம் என்று சொல்லிக் கொள்வதில் கொஞ்சம் பொருளிருக்க முடியும்.

லைலா - மஜ்னு

ஊடுருவி

லைலா மஜ்னு. இதுவும் உலகு புகழ் காதல் கதையே-அரேபியநாட்டில் நடந்த இந்தக் கதையினை தமிழகத்தில் அதன் இயல்பும் கலையும் குறையாமல் கன்னித் தமிழிலே தருகிறார் ஊடுருவி அவர்கள். இது வசன நடையில் இயற்றப் பெற்ற காவியம் வர்ணனைகள், உரையாடல்கள் மிக உயர்ந்த முறையில் எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

விலை ரூ. 1—0—0

தனிப்பிரதிக்கு ரூ. 1 M. O. செய்யவும்

கலைமன்றம், சென்னை-1

தாமரையாள் சொன்ன கதை

மானவிழி

அந்தி வானம் பொன்நிறத்தைப் பூவுலகில்பூசிக் கொண்டிருந்தது. ஓங்கி வளர்ந்த மலைகளை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தன மேகங்கள். குளிர்ந்த தென்றல் குலுக்கி விளையாடிக்கொண்டே அதனிடமிருந்தமணத்தைத் திருடிக் கொண்டு வந்து, சோலையில் உலாவ வந்த மக்களுக்குக்கொடுத்துக்கொண்டே சென்றது. நானும் தென்றல் தந்த மணத்தை அனுபவித்துக் கொண்டே நடந்தேன். அங்கு பச்சைப் பட்டுடை அணிந்த மலர்க் கொடியொருத்தி என்னைக் கண்டு 'களுக்' என்று சிரித்தாள். நான் திரும்பினேன். "முல்லைமலர்" என்று தன் பெயரைச் சொல்லாமல் சொல்லினள்.

மேலும் நடந்தேன். பச்சைப்பட்டுடைகள் அணிந்த மலர்ப் பெண்கள் பலரைக் கண்டேன். களிப்புக் கடலில் மூழ்கிகிடந்தனர் அவர்களைச் சுற்றி வண்டுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சிலமலர்கள் தேனீக்களுக்குத் தேன் கொடுத்துக் கொண்டிருந்தன. சிலதேனீக்கள் மது குடித்த மயக்கத்தால் ஆனந்தப் பண் இசைத்துக் கொண்டிருந்தன. இந்த இன்பக் காட்சியைக் கண்டேன். இன்பம் என் இதயத்தையும் தழுவியது.

மேலும் நடந்தேன்.

ஆனந்த நடனமாடும் அழகி ஒருத்தியைக் கண்டேன். அந்தத் தோகையின் எழிலை என்னென்று இயம்புவேன். நீண்ட கழுத்தும், நீல நிறமும், உச்சியில் ஒய்யாரக கொண்டையும் கண்டு உள்ளம் பூரித்தேன். அவள் உடல் முழுவதும் மரகதப் பொடி கலந்திருந்தது. பிறையைச் சிறியளவில் ஆக்கி அந்த ஆட்டக்காரியின் அழகு உடம்பில் இயற்கை பதித்திருந்தது. பார்த்தேன். இந்த இன்பவல்லியை நோக்கி யார் நீ என்றேன். "மயில்" என்றாள் அந்தத் தோகை.

மலர்க்கொடிகள் மலிந்து கிடந்த அந்த மலர் வனத்தின் எழிலைக் கண்களால் திருடி உள்ளத்தால் உண்டேன்.

என் கால்கள் மேலும் நடந்தன.

வட்ட வடிவமான குளம், அதிலே நீந்தி விளையாடும் சிறு மீன்கள்-பளிங்கொத்த நீர் வெம்மையைத்தணிக்கும் குளிமை, இவைகளுடன் தோற்றமளித்த அந்த தடாகத்தின் நடுவே தையல் ஒருத்தி ஒய்யாரமாக நின்றுக் கொண்டிருந்தாள்.

நிமிர்ந்து நோக்கினேன்.

தலைகுனிந்த வண்ணம் நின்ற அந்தத் தையல் முகம், குவிந்திருந்தது.

கூர்ந்து கவனித்தேன்.

வாட்டம் தெரிந்ததுடன்—சிவந்தும் இருந்தது.

என்னை ஆச்சரியம் விழுங்கியது. மலர் வனத்து மலர்க் கொடிகள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருக்க, மாது இவள் மட்டும் வாடியிருக்கக் காரணம் தெரியவில்லை. நெருங்கினேன். "மாதே நீ யார்? வாட்டம் வந்து உன்னை வருத்தக் காரணம் என்ன?" என்றேன்.

"என்பால் அன்புள்ளவரே, கேளுங்கள். எனக்கும் இங்கு வாழும் மற்ற மலர்க்கொடிகளுக்கும் தலைகீழ் மாற்றம் உண்டு. காலை முதல் மாலை வரையில் என் முகம் மலர்ந்திருக்கும். என் காதலன் என்னைவிட்டுப் பிரியாமல் இருப்பான். இன்பம் தருவான். ஆனால் மாலையிலே அவன் மறைந்துவிடுவான. நான் வாடுவேன்—வதங்குவேன். என் காதலன் தோன்றி எனக்கு இன்பம் அளிக்கும் நேரத்தில் இங்குள்ள மலர்க்கொடிகள்வாடியும், வதங்கியும், தலைகவிழ்ந்தும் கிடக்கும். ஆனால் நான் மகிழ்ச்சியோடு மணாளனுடன் இருப்பேன். மாலை வந்து விட்டது, மணாளன் மறைந்து விட்டான். வாட்டம் என்னைப் பிடித்துக் கொண்டது. நாளைக் காலை என் கணவன் வரும் வரை இப்படித்தானிருப்பேன்" என்று கூறி முடித்தாள்.

"விசித்திரமான மாதே உன் பெயர் என்ன?" என்றேன்.

"தாமரை" என்றாள்.

"உன் கணவன் பெயர்" என்றேன்.

"சூரியன்" என்றாள்;

இந்த விசித்திரமான தம்பதிகளை வாழ்த்திவிட்டு வீடு திரும்பினேன்.

முகப்புச் சித்திர வரலாறு

கவிஞர்
வாணிதாசன்

கவிஞன் என்றால் மக்களிடையே புதுமைக் கருத்துக்களைப் பரப்பி, நாட்டில் அறிவுமணம்—வெறும் அறிவுமணமல்ல, பகுத்தறிவு மணம் வீசச் செய்யும் புரட்சியாளனாகத் திகழவேண்டும். கவிஞன் எழுத்துக் கடிமையாகிக் கிடக்கக் கூடாது; எழுத்து அவனுக்கு அடிமையாகிக் கிடக்கவேண்டும். அப்படி அடிமையாகாத எழுத்துக்களுக்கும், அதன் கூட்டுறவில் பிரசவமாகும் எண்ணங்களுக்கும் அரசாங்கம் தடைபோட்டு, நம்மை அதிர்ச்சியாக்குகிறதென்றால், அதற்குப் பேறு வைத்தியம் பார்க்கத் துணிவதுதான், பெருங் கவிக்குரிய இலட்சணம். இம்முறையிலே நம் நாட்டில், அன்று **பாரதியார்;** இன்று **பாரதிதாசன்;** அவர் பரம்பரையில் தோன்றியவர்கள் பலர்; அவர்களுள் ஒருவரான தோழர் கவிஞர் வாணிதாசன்!

கவிஞர் வாணிதாசன் எண்ணியதை எடுத்துக் காட்டும் எழுத்துச் சிற்பி. அவர் கவிதைகளில் தமிழ் துள்ளும்! இசை நடமிடும்!! இனிமை தவழும்!!!

1915 ஜூலை திங்கள், **22-ஆம்** நாளில் தமிழகத்தில் தோன்றினார் கவிஞர் தந்தையார்—திருக்காடு (நாயுடு). தாயார்—துளசியம்மை.

கவிஞர் வாணிதாசன் அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் தமிழ்ப் பயின்றவர். அதன் பயன் தான் இன்று கவிஞர் படைப்புகளில் புரட்சிமின்னுகிறது. மல்லிகை வனத்திலே வாழ்ந்தவருக்கு மணத்தின் பெருமையைப் பற்றி எழுதத் தானா கடினம்?

கவிஞர் வாணிதாசன், பிரஞ்சு மொழியில் பட்டம் பெற்றவர். பிரஞ்சுக் காவியங்கள் சிலவற்றைத் தமிழிலே மொழிபெயர்த்திருக்கிறார். அவைகளிலே ஒன்றுதான், நம் 'கலைமன்றத்தில்' வெளியாகும் 'காதல் உள்ளம்'

தமிழாசிரியராகப் பணியாற்றும் வாணிதாசன் அவர்கள், பிரஞ்சுப் பட்டம் பெற்றார் என்றால், புதுவைதான் அவரை வளர்த்த பூமி. புதுவை அவரைத்தானா வளர்த்து நாட்டிற்குத் தந்திருக்கிறது......? அன்றும், இன்றும் இலட்சியக் கீதம் பாடிய அநேகரைத் தந்திருக்கிறது.

நம் இயக்கக் கொள்கைகளைக் கவிதைகள் மூலம் பரப்பி வரும் கவிஞர் வாணிதாசன் இன்னும் பல புரட்சிக் கருத்துக்களை நாட்டில் நடமாடவிட்டு, திராவிடத்தைத் தித்திக்கும் தமிழ்ச் சோலையாக்குவார் என்று நம்புகிறோம். வாழ்க கவிஞர்! வளர்க அவர் தம் நல்லெண்ணம்!!

இளம் எழுத்தாளர்கட்கு ஓர் அரிய வாய்ப்பு!

மேதினச் சிறுகதைப் போட்டி

100-ரூபாய் பரிசு

முதற் பரிசு: ரூ. 75 — இரண்டாம் பரிசு: ரூ. 25

நிபந்தனைகள்:

இப்போட்டியில் 18-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

கதையைத் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

'கலைமன்றம்' இதழில் 8-பக்கங்களுக்குக் குறையாமலும், 16-பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதியனுப்ப வேண்டும். (அதாவது, புல்ஸ்கேப் பேப்பரில் 10-பக்கங்களுக்குக் குறையாமலும், 18-பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதினால் போதுமானது.

நல்ல மையினால், அடிக்காமல், இலக்கணப் பிழையின்றி அனுப்பப்படும் கதைகளையே பரிசீலனைக்கு ஏற்கப்படும்.

கதையில் முழுக்க முழுக்கப் புதுமை இருக்க வேண்டும். விபசாரம், ஆபாசங்கள் போன்ற புளித்துப் போன பழைய பாதைகளையே திருத்தி யமைத்து எழுதுவதும் கூடாது. சமூக சீர்திருத்தக் கதையாக இருக்க வேண்டும்.

அனுப்பப்படும் கதைகள் எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவராததாக இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்பையோ, தழுவலையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். அனுப்பப்படும் கதைகள் திருப்பியனுப்பப்பட மாட்டாது. தங்களிடமும் ஒரு நகலை வைத்துக் கொள்வது அவசியமாகும். இதற்கான கடிதப் போக்குவரத்துக் கூடாது.

கதையின் தலைப்பிற்கு மேல், 'போட்டிச் சிறுகதை' என்று குறித்து, அதன் கீழ் முகவரி விளக்கமாக எழுதி, 15—4—'55 தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்குமேல் வரப்படும் கதைகள் கவனிக்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு கதையினுடே எழுத்தாளர்கள், தங்களின் சொந்தக் கற்பனையென்றும் எதிலும் கையாண்டது கிடையாதென்றும் உறுதிப் பத்திரம் எழுதியனுப்புதல் முக்கியம். அல்லாதவைகள் ஒதுக்கப்படும்.

ஐவர் கூடிய குழுவின் தீர்ப்பே முடிவானது. ஐவரின் பெயர்களையும், போட்டி முடிவு நாளன்று தெரிவிக்கப்படும். முடிவு நாள் 1—5—55. பரிசு பெறாத கதைகளுள், ஓரளவு நல்லகதைகளாக இருந்தால், கலைமன்றத்தில் பிரசுரிக்க ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறு கதைப் போட்டி ஆசிரியர்:

கலைமன்றம்

த. பெ. எண். 275 — சென்னை-1.

திருக்குறளுக்கு அவமானம்

"வம்பன்"

"வாடா வம்பா! என்ன இந்தப் பக்கத்தில் காணுவதே இல்லையே!" என்ருன் என் நண்பன் கந்தன்!

"எங்களுக்கு ஓய்வா இருக்கிறது? நினைத்த போதெல்லாம் வருதற்கு" என்றேன் நான்.

"நீ பாடுபட்டுத்தான் உலகம் பாலைவனமாக இருப்பதுமாறிப் பசுஞ் சோலையாகப் போகிறதாக்கும்" என்ருன் கிண்டலாக. நான் பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பது அந்த வைதீகத்திற்குப் பிடிக்காது. என்ன செய்வது. தெளிந்த நீரோடைகள் இருந்தாலும் சேற்றிலே வீழ்வதைத் தானே பன்றிகள் விரும்புகின்றன. என்று எண்ணிக்கொண்டு அமைதி பெறுவேன் நான்.

"வம்பா! என்னடா பேசமாட்டேன் என்கிருய்! இந்த உலகிற்கு உன்ஞல் என்ன செய்ய முடியும்? வசிஷ்டர் போன்ற ரிஷிகளும், வியாசர் போன்ற முனிபுங்கவர்களும் செய்யாததையா நீ செய்யப் போகிருய்." என்று ஜம்பம் அடித்துக் கொண்டான். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. "அவர்கள் எல்லாம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களா? தமிழர் கலாச்சாரம் தெரிந்தவர்களா?" என்றேன் உள்ளே எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டே.

"அடமுட்டாளே! அவர்களை விட்டுவிடு திருஞான சம்பந்தர் தேவாரமும், சுந்தர்மூர்த்தி சுவாமிகள் பாடல்களும் திருவாசகத் தேனையும் பருகிப் பார் உன் மூளை கோளாறு தீரும்" என்ருன் வெற்றி கொடியை தலையே பொறுத்தி கொண்டவன் போல!

"அட பிரஸ்பதியே! உன்ஞல் அறிமுகம் செயயப்பட்டவர்களில் ஒருவர் கூட தமிழர் பட்டியலில் சேரவில்லை. சம்பந்தர்—சுந்தரர்—

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதியவை

கசந்த கரும்பு	ரூ. 1	8	0
சிலந்திக் கூடு	1	0	0
மனைவி	0	12	0
கொலைகாரி	0	12	0
அவள் வாழ்வு	0	8	0

கலைமன்றம்—சென்னை-1

மணிவாசகர் அவ்வளவு பேரும் அவாள் பரம்பரையப்பா அவாள் பரம்பரை!" என்றேன். "இன்னும் அந்தத் துவேஷ புத்தி உன்னை விட்டுப் போகவில்லையே ஏனடா இப்படி கெட்டுப் போகிறாய் அதுதான் போகட்டும் திருவள்ளுவர் தமிழர்தானே" என்றான்.

"ஆமாம்! சந்தேகமில்லை!" என்றேன்.

"அப்படிவா வழிக்கு திருக்குறளை விட சிறந்த நூல் உண்டா?"

"நிச்சயமாகக் கிடையாது நீதி நூல்களில்"

"அந்த நூலை உன்னைப் போலவே 'அவாள்' என்று சொன்னாயே அவர்களும் ஒத்துக்கொள்கிறார்களே அப்படி இருக்கு உங்களுக்கு மட்டும் ஏனப்பா இந்தப் பிரிவினைப் புத்தி!" என்று கேட்டு விட்டான். நல்ல வேளையாக என் கரத்திலே ஒரு பத்திரிகை இருந்தது அவன் கொட்டத்தை அடக்க! உடனே மிகவும் தெளிவுடன் "வைதீக சாம்ராஜ்ஜியத்தில் பணம் வாங்காமல் வாதாடும் வழக்கறிஞரே! திருக்குறளை அவாள் போற்றுகின்றனர் என்று தானே கூறுகிறாய் இதனை படி" என்று பத்திரிகையை அவனிடம் நீட்டினேன். அவனும் வாங்கிப் படித்தான். அதில் "**தமிழ் வளர்த்த மதுரையில் திருக்குறளுக்கு அவமானம்**" என்று கொட்டையெழுத்தில் அச்சிட்டிருந்தது. தொடர்ந்து படித்தான். அதன் சுருக்கமாவது:— திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் தம் சொந்த செலவில் 1330 திருக்குறள் பாக்களையும் மதுரை மீனாட்சி அம்மையார் கோயிலில் சலவைக் கற்களில் பொறித்து வைப்பதாகக் கூறுகிறார். இந்த நிகழ்ச்சியைப் பற்றி கோயில் ஆலோசகக் குழு பரிசீலனை செய்தபோது "**ஒரு சிலர்**" எதிர்க்கிறார்களாம். ("**ஒரு சிலர்**" மறந்துவிடவேண்டாம். அந்த ஒரு சிலர் யாராக இருக்கமுடியும் என்பது நமக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை.) அவர்கள் கோயில் தமிழ் நுழைவதையே விரும்பவில்லை. திருவள்ளுவரின் திருக்குறள் கோயிலுக்குள் வரக்கூடாது என்று கூறுகின்றனர். இது சம்பந்தமாக மதுரையில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது" இந்தச் செய்தியைப் படித்து முடித்த கந்தனின் முகம் வாடியேவிட்டது.

"வம்பா! இப்படிக்கூடச் செய்வார்களா?" என்றான் நம்பிக்கைக்குப் பாத்திரமான, ஆனால் வைதீகக் குடுக்கையான அவன்!"

"கையிலே பத்திரிகையை வைத்துக் கொண்டுகூட சந்தேகப்படுகிறாயே அதுவும் எங்கள் கட்சிப் பத்திரிகையா எழுதியிருக்கிறது நீ சந்தேகமுற. தேசீய வார இதழ் தரும் செய்தியப்பா இது!" என்றேன்.

"இவ்வளவு மோசமாக இருப்பார்கள் என்று நான் கருதவில்லை வம்பா! இப்போதுதான் எனக்கும் கொஞ்சம் புரிகிறது. ஏன் அன்

னியக் கொள்கைகளை நீ வெறுக்கின்றாய் என்று! திருக்குறள் உலகம் போற்றும் ஒப்பற்ற நூல் அகில உலகத்தில் அதற்கு ஒரு தனி மதிப்பு இருக்கிறது. வள்ளுவர் பிறந்த நாட்டில் பிறந்தவன் என்று கூறிக்கொள்வதில் இன்றுள்ள அறிஞர்கள்—தமிழர்கள்—புலவர்கள்—அரசியல் நிபுணர்கள் ஆசிரியர்கள் அவ்வளவு பேரும் பெருமை கொள்கின்றனர். ஆனால் அந்த அற்பர்கள் குறளுக்கு அவமானத்தை உண்டு பண்ணுகின்றனரே! "தோழா! என்னால் பொறுக்க முடியவில்லையே!" என்றான்.

"கந்தா! 'பெரிய புராணமும்', திருக்குறளும் இங்கு ஏன்?" என்று கேட்டார்களாம் பெரிய புராணத்தை எழுதியவன் ஒரு தமிழன். தமிழன் எழுதிய நூல்களையே அவர்கள் வெறுத்து வருகிறார்கள் இதனை நீ நன்கு உணர வேண்டும். கண்டாரைப் பழித்துப் பேசி பகைமை உணர்ச்சியை உண்டாக்குவதல்ல எங்கள் பண்பு. அறிவுள்ளவனை முட்டாள் என்று கூறும்போது எப்படி உண்மை தெரிந்தவன் எதிர்கின்றானோ அது போலத்தான் தமிழின் பெருமையை உணர்ந்த தமிழர்கள் தமிழர்களுக்கு நல்ல உணர்ச்சியை உண்டாக்குகின்றனர். இந்தப் பணியில்தான் நானும் ஈடுபட்டிருக்கின்றேன். இதனை நீ உணர வேண்டும்! உன்னை நான் பகைத்தது கிடையாது! ஆனால் நீ என்னை கிண்டல் செய்தாய் கேலி மொழிகள் கூறினாய்—அலட்சியப் படுத்தினாய். அமைதியாகவே இருந்தேன். நீ திருந்துவாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. பொய் எவ்வளவுதான் அழகான போர்வைக்குள் பதுங்கி இருந்தாலும் உண்மையின் முன் நிற்கும் ஆற்றல் அதற்குக் கிடையாது. இன்றுதான் உண்மையை உன்னால் உணர முடிந்தது அல்லவா?" என்றேன்.

"வம்பா! உண்மையை உணர முடிந்தது மட்டுமல்ல-திருக்குறள் வேண்டாம் என்று கூறும் கொடியவர்களை எதிர்க்கவும் துணிந்துவிட்டேன்" என்றான்.

"அவன் மனமாற்றம் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது அவனுக்கு ஆறுதல் கூறி அமைதியுறச் செய்து அறிவியக்கத்தின் தூதுவனாக்கினேன். இன்னும் அவனைப் போன்றவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களும் விரைவில் வருவர் நம் பாசறைக்கு. ஆயுதப் போர் புரிய அல்ல—அறப் போர் புரிய. அந்த நல்ல நாளைத் தான் நான் எதிர்பாத்துக் கொண்டிருக்கிறேன். அடிக்கடி உங்களை வம்பன் சந்திப்பான் என்பதை தெரிவித்துக்கொண்டு விடைபெற்றுக்கொள்ளுகிறேன், வணக்கம்.

எழுத்தாளர்கட்கு......

நம் காரியாலத்திற்கு நாளொன்றுக்குப்பல கதைகள் வந்து குவிகின்றபடியால், அவைகளை உடனுக்குடன் கவனித்து முடிவு கூறுவதை நிறுத்திக்கொண்டோம். இத்துடன், எக்காரணத்தை முன்னிட்டும் கதைகளைத் திருப்பியனுப்ப முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிறந்த சிறுகதைகளாக இருப்பின், அவைகளுக்கு உடன் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்.

காட்சி—3

[தென் கலிங்கத்து மன்னன் வீமதேவன், கொலுமண்டபத்தில் வீற்றிருக்கிறான். பக்கத்தில், அமைச்சர் குணசாகரர், கபால கேசரி, மற்றும் பல பிரதானிகள் அமர்ந்திருக்கின்றனர். எதிரே படைத்தலைவன் பரிமளதேவன் அடலேறுபோல் நின்றுகொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் பாவை பத்மினி பரிதாபத்திற்கு முகமன் கூறிக்கொண்டு நிற்கிறாள். அவையில் ஒரே அமைதி தாண்

டவமாடுகிறது. பரிமளதேவன் ஒருமுறை எல்லோரையும் சுற்றிப் பார்க்கிறான். அவன் கண்களிலே தீப்பொறி பறக்கின்றது.]

பரிமளதேவன்: ராஜப்பிரதானிகளே! கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் கொற்றவன்தான், கொலுபொம்மையாகிக் கிடக்கிறார் என்றால், கொதிக்கும் என் இதயம் புரட்டிச் சொன்ன எங்கள் காதற் கதையைக் கேட்டும், உங்கள் காதுகள் மௌனம் சாதிப்பதின் மர்மமென்ன? மாரப்பன் மகள் பத்மினி என்ற ஒரே காரணத்திற்காக நான் மணந்துகொள்ளக் காதலித்தது தவறா? மாரப்பன் ரணகளத்திலே மரணமடைந்த மாவீரன்! அவன் மகள் மட்டுமென்ன மனிதப் பிறவிதானே? படைத்தலைவனுக்கு வாழ்க்கைப்படும் தகுதி, இந்தப் பாவையிடத்தில் இல்லையென்று சொல்லுகிறார் மன்னர், தொல்லை கொடுக்கும் தோரணையில் தன் நாடி நரம்பைத தட்டி விட்டிருக்கும் நரபலி தாசரின் நாவசைவின் காரணமாக! நன்றாக இருக்கின்றதா நல்லவர்களே? ஒன்றாக ஏன் ஊமையாகிக் கிடக்கின்றீர்? உண்மையை எங்கு வேண்டுமானாலும் உள்ளத்தில் பயம் நீக்கிக் கூறலாம்! முதலில் தீங்கிழைத்தாலும், முடிவில் நன்மையே விளைவிக்கும்! சிந்தித்து முடிவு கூறுங்கள் சீமான்களே!

பத்மினி பலியிடப்பட வேண்டியவள்தானா?

கபாலகேசரி: உன் பதட்டம் உன்னையும் பலிகேட்டுவிடும்! இது கொலுமண்டபம் என்பதை மறந்து, கொற்றவனைக் கொலுபொம்மை என்கிறாய்! கூசாமல் கூறிய உன் நாவைக் கூறுபோட்டாலும் பாவம் நீங்காது! மரியாதை கெட்ட மமதைக்காரன்! பத்மினி பலியிடப்பட வேண்டியவளே!

பரிமளதேவன்: கணக்குத் தீர்க்கும் நேரம் வந்துவிட்டதடா கபாலகேசரி, உன்கணக்குத் தீர்க்கும் நேரம்வந்துவிட்டது. காலம் நெருங்கு முன், உன் கயமைத் தனத்தின் காரணத்தைத் தெரிந்துகொள்! அது, ஓலமிடுமுன் உன் உயிருக்கு உபதேசம் செய்துகொள்! உன் வேளை சமீபத்தில் தான் விளையாடிக் கொண்டிருக்கிறதடா, வெத்து மனிதனே விளையாடிக் கொண்டிருக்கிறது! விபரீத புத்திக்காரனே! ஆண்ட பூமிக்கு வேண்டப் படாதவனே! அழிவுகாலம் நெருங்கிவிட்டதடா, கொடும் பாவியே, அழிவுகாலம் நெருங்கிவிட்டது!

[பரிமளதேவனின் கோபம் உச்ச நிலையடைந்ததை எண்ணி எல்லோரும் பயத்தால் முணுமுணுத்துக் கொள்ளுகின்றனர். கபாலிகேசரியின் புருவங்கள் நெளிகின்றன. வேந்தன் வீமதேவன் கொதிப்படைகிறான்.]

கபாலகேசரி: (கோபமாக) மன்னவனே!

வீமதேவன்: முட்டாளே! மூடுவாயை! மூர்க்கத்தனத்தை முடங்கல் விடாமலே வரவழைத்துக் கொண்ட மூடனே! முனிபுங்கவர் கபாலகேசரி யென்பதை மறந்து, முட்டாள் தனமாக உளறிக் கொட்டிவிட்டாய் மோசமான வார்த்தைகளை! யாரங்கே! இந்த வெறிபிடித்த நாயை விருந்தாக்குங்கள் நம் பாதாளச் சிங்கத்திற்கு!

[நான்கு போர்வீரர்கள் பரிமள தேவனை நெருங்குகிறார்கள். பரிமளதேவன் வாளை உருவிக் கொண்டு.]

பரிமளதேவன்: நெருங்காதீர்கள்! நெருங்கினால், நொருங்கி விடும் உங்கள் விலா எலும்புகள்! இம்...!

கபாலகேசரி: இம்...! என்ன ஆணவம்?

பரிமளதேவன்: ஆணவம் யாருக்கடா ஆண்டிப் பயலே! அண்ட வந்த ஆண்டி, உனக்கு, அரசபோகம் கிடைத்து ஆட்டி வைக்கும் சக்தி யேற்பட்டதென்றால், இந்தப் பொன்னாட்டில் பிறந்து, பொழுதோடு வளர்ந்து; போற்றர்கரிய மன்னவரின் போர் வீரனாக அமர்ந்து, பலநாடுகளைப் பிடித்து இன்று படைத்தலைவன் ஸ்தானத்தில் நிற்கும் எனக்கெத்தனை ஆணவம் இருக்கும்—இருக்க முடியும்?

வீமதேவன்: பரிமளதேவா, என் கோபத்தை அதிகமாகக் கிளறி விட்டாய்! உன் வீரம் இந்த நாட்டின் பலகாரணங்களுக்கு உபயோகப்பட்ட ஒரே காரணத்திற்காக இதுவரை பொறுமை சாதித்து வந்தேன். பொறுமையை உன் பொல்லாத புத்தியால் போக்கடித்துவிட்டாய்! நான் குருதேவருக்குக் கொடுத்த வாக்குதத்தத்தைத் தவறமாட்டேன்! மீண்டும் கூறுகிறேன், பரிமளா! பத்மினி ருத்ரமூர்த்திக்குப் பலியாவதால்,

தென்கலிங்கம் செழிக்கும். உன் காதற் கதையைக் கேட்டேன். எனினும், கடவுள் சத்தியத்தை மீறமாட்டேன். வீரனே! உன் வெற்றிததோளங்களுக்கு வெகுமதி தரத் திட்டமிட்டேன்! என் திட்டத்தை விளக்கின் சிட்டமாக்கி விட்டாய்! உன் எதிர்கால வாழ்க்கைக்குத் தக்க ஏந்திழையாளைத் தர ஆசைப்பட்டேன்! அந்த ஆசை பகலேக்கண்ட பனித்துளிகளாகிவிட்டது! கடைசியில், ஒரு சாதாரணப் போர் வீரன் மகளுக்காகப் போக்கிக் கொள்ளப் பார்க்கிருய், போற்றற்கரிய உன் வாழ்வை! பொல்லாதவனே! என்னையும், குருநாதரையும் ஏசிவிட்டாய், உன் தூசுபடிந்த அறிவால் துச்சமாக மதித்துவிட்டதால்! உன்னை என் எதிர்காலமாக மதித்தேன்; இப்போது சதிகாரனுக மதிக்கிறேன்! சண்டாளா! நான் கொலுபொம்மை — குருநாதர் கொடும்பாவி! நாவுக்குத் திமிர் கொடுத்தவனே, அதற்குக் காரணமான உன் காதல் நாயகியை நாளை உதயத்தில், பலியிடப் போகிறேன்—நீ, என்னை நன்றி கெட்டவன் என்று நினைத்தாலும் பாதகமில்லை!

[கொலுமண்டபத்தில் ஒரே குழப்பம். எங்கும் முணுமுணுப்பு.]

பரிமளதேவன்: ஆ...! மன்னவனே! பாதகமில்லை யென்று சொல்லுமளவிற்கு சாதகமாக்கிக் கொண்டான் இந்தப் பாதகன் பச்சைரத்த வெறியன்! பத்மினி! என் பதுமையே! நீ பலியிடப்பட வேண்டியவளாமே...!

[பத்மினி மூர்ச்சையாகிக் கீழே விழுகிருள். பரிமளதேவன் அவளைத் தூக்கச் செல்லுகிருன்]

கபாலகேசரி: இம்...! நெருங்காதே! இனி அவள் உன்னுடையவளல்ல! யாரங்கே. நெருங்கவிடாதீர்கள்! இவனையும் பிடித்துச் சிறையில் வையுங்கள்!

[போர்வீரர்கள் பரிமளதேவனை நெருங்குகின்றனர்.]

பரிமளதேவன்: நன்றி, இன்றுதான் தன் முழுச் சொரூபத்தைக் காட்டி விளையாடத் தொடங்கி இருக்கிறது. நல்லவர்களே! நான் வருகிறேன். சூழ்ச்சியின் போர்வையுள் பதுங்கி—சூதுக்காரனின் பேச்சிலே மயங்கி—சொந்த புத்தியைக் கந்தலாக்கிக்கொண்டாய்! நாளைக் காலே அதன் பிரதிபலிப்பைக் கட்டாயம் அறிந்தே தீருவாய், செங்கோலேந்தியே, அறிந்தே தீருவாய்! ஆணவக்கார நரபலிதாசனே! உன் கபாலிகக் கூட்டத்திற்குச் சந்தர்ப்பத்தைத் தேடித்தர, செங்கோலைச் சிந்துபாட வைத்து விட்டாயே, — நாளையச் செங்குருதி எங்கிருந்து கொட்டப் போகிற தென்பதை உன்னால் பார்க்க முடியாவிட்டாலும், முன்னால் உணரத்தான் போகிறீர்! நீதி கூறும் அமைச்சர்களே! நீங்களும் தன் நிதானத்தை வலிய வரவழைத்

சந்தா விபரம்	
உள்நாடு	
வருடச் சந்தா	12—0
ஆறு மாதச் சந்தா	6—0
வெளிநாடு	
வருடச் சந்தா	13—0
ஆறு மாதச் சந்தா	6—8

துக் கொண்டீர்! ஆனால், நாளைய கலிங்கத்தின் நிர்மூலம் என்ன வென்பதை நினைக்க மறந்துவிடப் போகிறீர்கள்! அவை பிரமுகர் களே! கட்டியங் கூறவல்ல, நீங்கள் கொலு மண்டபத்தில் காலடி எடுத்து வைப்பது! காரண, காரி யங்களைக் கண்டு காவலனுக்கு எடுத்துக் கூறத்தான்! ஆனால், கபோதியின் விஷயத்தில், ஏனோ நீங்களும் கண்மூடிகளாகிக் கிடக் கின்றீர்! அதன் விளைவு, நாளைய கலிங்கம் மண்மூடிப்போகப் போகிறது! ஆண்ட அரசமண்ட பமே! ஆயிரமாயிரந் தூண்களின் ஆதரவு தேடி நிற்கும் அரண் மனையே! நீ நாளைய உதயத்தைப் பார்ப்பாய் என்பது உனக்கே சந் தேகம் என்றால், என் பைங்கிளி பத்மினியின் பலிக்குப் பிறகு நீ எப்படி, யாருக்கு எடுத்துரைப் பாய்? பரவாயில்லை......... நாளை பரிமளதேவன், வஞ்சத்தின் வத னத்தில் திகழ்வான்! நெஞ்சத் தில் நெருப்பை ஏற்றிககொள் வான்! அஞ்சாத பாசறைச் சிங்க மென்று அழிவுப் படலத்தின் அஸ்திவாரமாகப் போகிறான்' கலிங்க நாடே, அழிவுக்காரனைப் போகிறான். கண்ணே பத்மினி கண்ணுளா என்றழைக்கும் வாய் நாளை மண்ணுளப் போகிறது, கழுத்துத் துண்டிக்கப்படும் காரணத்தால்! கட்டித் தழுவியக் கரங்கள், நாளை வெட்டி விருந்தாக் கப்படும்! எனினும் அஞ்சாதே எழிலே, அஞ்சாதே! வருகிறேன்!

[வேகமாக வெளியேறுகிறான். பலர் பிடித்தும் முடியாமல் போய் விடுகிறது]

மூன்றும் அங்கம்

காட்சி: 1

[தென்கலிங்கத்துத் தெற்குச் சாலையில், பரிமளதேவனின் பரி தாப நிலைமையும், தனேப் போன்ற போர்வீரன்—மாரப்பன் மகள் பத்மினியின் பலி விஷயத் தைப் பற்றியும் கேள்விப்பட்ட போர்வீரர்கள் சிலர், நின்று பேசிக்கொண் டிருக்கின்றனர். அவர்கள் இதயங்கள் எரிமலைக ளாகிக் கிடக்கின்றன.]

போர்வீரன் 1-: படைத் தலைவ ருக்கு என்னதா னிருந்தாலும் இப்படிப் பரிதாபகரமான சம் பவம் நிகழக் கூடாதய்யா!

போர்-2: பத்மினி தங்கமான பெண்! பாவிப்பயல் எங்கிருந்து வந்தானே, அவளைப் பலிகொடுப் பதற்காக!

போர்-3: கபால கேசரியாம், கபாலகேசரி! களவாடிப் பயல்! பெயரைப் பார், இருண்ட குகைக்குக் கறுப்பு வர்ணம் பூசி யது போல்!

போர்-4: கலிங்கத் துக்குக் காலம் முடியப் போவதால் தான், கபாலகேசரி, கண்ராவிக் கேசரியெல்லாம் வந்து, கண்ட தைச் சாதிக்கப் பார்க்கிறார்கள்! வேந்தர் வீமதேவருக்கு இந்த வீணை புத்தி ஏன்தான் வந் ததோ? கலிங்கத்தில் வால் நட்சத் திரம்தான் முளைத்திருக்கிறது!

போர்-1: படைவன்மை மிக்கவர் பரிமளதேவன். அவர் சாதித்த காரியங்கள் எத்தனையோ! அப்படி இருந்தும், அந்த நரபலி தாசன் பேச்சுதானே நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது!

போர்-2: நன்றி என்பது, வெறும் வார்த்தையளவில் தானப்பா, நடமாடுகிறது! வேந்தருக்கு மட்டுமென்ன, விலக்கா?

போர்-3: மகேந்திரகிரிப் போரில் மார்பு பிளந்து மாண்ட மாரப்பனுக்கு, மகள் பத்மினியைப் பலிதருவதன் மூலமாக நன்றி செலுத்த எண்ணுகிறார் போலும் மன்னர்!

போர்-4: அதோ! படைத்தலைவர் பரிமளதேவர்!

[பரிமளதேவன் வேகமாகக் குதிரைமீது வருகிறான். தன் நண்பர்களைக் கண்டதும் குதிரையை விட்டிறங்குகிறான். அவன் இதயம் குமுறிக்கொண்டிருக்கிறது.]

போர்-1: சேதியென்ன சேனாதிபதியாரே!

பரிமளதேவன். பத்மினி பலியாகப் படவேண்டியவள் தானாம்! மாரப்பனின் மனச்சாந்திக்கும் அதுதான் மார்க்கம் என்கிறான் மதோன்மத்தன் கபாலகேசரி!

[எல்லோரிடையேயும் முணுமுணுப்பு எழுகிறது.]

தோழர்களே! இந்தச் சமயத்தில் உங்கள் ஆதரவை—அலண்டு விடாத மனப்பான்மையை எதிர்பார்க்கிறேன். என்ன சொல்லுகிறீர் என்னரும் தோழர்களே?

எல்லோரும்: உத்தரவிட்டால் உடனே காத்துக் கிடக்கிறோம்.

அது மட்டுமல்ல, கபாலகேசரியின் தலையைக் கபால்மூர்த்தியையே கபாலமாக ஏந்தச் செய்கிறோம, உயிருள்ள கடவுளாக இருந்தால்.

பரிமளதேவன்: நல்லது தோழர்களே! உங்கள் நன்றிக்கும். உறுதிக்கும் என் வணக்கம்! முதலில், நாகநாதன் இப்படி வரட்டும்.

[போர் வீரர்களில் ஒருவனை நாகநாதன் அருகே வருகிறான்.]

நாகநாதா! வேங்கை நாட்டுக்குச் செல்லும் பாதை தெரியும் தானே?

நாகநாதன்: என்ன சேனாதிபதியாரே...! என்னைப்பார்த்து அப்படி கேட்கிறீர். தங்கள் நண்பர் விக்ரமச் சோழரிடம் தானே அனுப்ப எண்ணுகிறீர்?

பரிமளதேவன்: புத்திசாலிப் போர்வீரனடா நாகநாதா, நீ. யுக்தியும், வீரமுமில்லாதவன் யுத்தத்திற்குப் பயனற்றவன். அவன் வாள் சுமப்பதைவிட, மற்றவன் தாள் சுமக்கலாம்! அதுசரி, நாகநாதா, (இடுப்பிலிருந்த ஓலைச் சுருளை எடுத்துக்கொடுத்து) இதை மிகமிகக் கவனக் குறைவில்லாமல், விக்ரமனிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேங்கை நாட்டுப் பாதையில் வேதனை ரூபங்கள் பல உலவுகின்றன. உன் ஞாபகத்தைச் சற்று தூங்க விடுவாயானால், அதுவே கடைசித் தூக்கமாகவும் முடிந்துவிடும். மேலும், நாகநாதா! விக்ரமன் உன்னுடனே புறப்பட்டாலும் புறப்படுவான். படையை எல்லைப் புறத்தில் பதுங்கவைத்துவிட்டு, பக்குவமாக என்னிடம் வந்து பதிலைத் தரவேண்டும். என்ன, புரிகிறதா?

நாகநாதன்: ஆகட்டும் சேனாதிபதியாரே! நாகநாதன் ஒரு காரியத்திலீடுபட்டு, நழுவியது கிடையாது. உயிரைப் பணயம் வைத்தாவது, உறுதியாகக் காரியத்தை முடிப்பான். காட்டாற்று வெள்ளத்திற்கு அணைபோட முடியாது, சேனாதிபதியாரே!

பரிமளதேவன்: நல்லது நண்பனே! வெள்ளி முளைப்பதற்குள், விஷயம் முடிந்தாகவேண்டும். அதுவரை விழித்த கண்களோடு தானிருப்பேன்.

[நாகநாதன் வணங்கிச் செல்கிறான்.]

காட்சி: 2

[தென்கலிங்க வேந்தன் வீமதேவன், ருத்ரமூர்த்திக் கோயிலுள் கைகட்டி, வாய்பொத்தி பயந்து நின்று கொண்டிருக்கிறார். கபாலகேசரி, அமர்ந்து ருத்ரமூர்த்திக்கு மந்திர உபதேசம் செய்கிறார். ஏனையோர், உள்ளம் கொதித்தாலும், செய்வதென்ன வென்று புரியாமல் நிற்கின்றனர். பத்மினியைக் குளிப்பாட்டி, ஈரப்போர்வையுடன், மாலையணிவித்து அழைத்து வருகிறார்கள். எல்லோர் கண்களிலும் நீர்த்திவலைகள். வானத்தில் முளைத்த வெள்ளியும் கூட, கண்சிமிட்டி அழுவதுபோல தெரிகிறது. கபாலகேசரி, உதய சூரியனை எதிர்பார்க்கிறார்.]

கபாலகேசரி: ஏ, ருத்ரமூர்த்தி! எத்தனையோ நாட்களாக என் சுந்தரக் கனவில் உன் சுய ரூபத்தைக் காட்டி, சோதித்திருக்கிறாய், சொர்ணபிம்பம் போன்ற ஓர் மனித உருவை நரபலி தரவேண்டி! இப்போது, இதோ! அங்க லட்சணமுடைய அழகுப் பாவை, பத்மினியை, மன்னரின் சார்பாக அவரின் வெற்றியின் காரணமாக

காணிக்கை யாக்குகிறேம், களிப்பு நிறைந்த இதயத்தோடு! கபால மூர்த்தி! கண்ணீரைப் பன்னீராக் கிக்கொள்ளுங்கள், கன்னி ஒருத்தி யின் பலியின் காரணமாக! புழுங் கிய இதயத்தில் பூரிப்பேற்றிக் கொள்ளுங்கள், பூங்கொடி யொருத்தியின் பலியின் காரண மாக! எதிபார்த்த எண்ணத்தில் இனிப்பைத் தடவிக் கொள்ளுங் கள், எத்தனையோ தேயாத சந் திரன்கள் ஏககாலத்தில் உதித்தது போல் காட்சிதரும் ஏந்திழை யாளின் பலியின் காரணமாக! ஏற் றுக்கொள்! ருத்ரமூர்த்தியே, ஏற் றுக்கொள் ஹஹ்ஹா!! ஹா !!

[இது சமயம் ஒரு போர்வீரன் ஓடி வருகிறுன்.]

போர்வீரன்: மன்னவா! வேங்கை நாட்டு இளவரசர், விக்ரமசோழர் வேங்கை போல் சீறி வருகிறுர், பெரும்படைக ளுடன். விடிவதற்குள் தென் கலிங்கம், மண்கலிங்கமாய்விடு மென்பதில் சந்தேகமேயில்லை மன்னவா!

[வீமதேவன் குழப்பத்தால் கூத்தாடுகிறுன். கபாலகேசரி, நிலைமையைச் சமாளிக்க]

கபாலகேசரி: பயப்படவேண் டாம் மன்னவா! ருத்ரமூர்த்திக் குப் பாவை பத்மினி பலியிடப் பட்டுவிட்டால், உடனே பிரத்தியச் சியமவார், வேங்கை நாட்டுப் படை வேதனையடைந் தோடும்! கபால மூர்த்தியின் கண்பட்டாலே போதுமே! வேங்கைப்படை டலம், புயலில் அகப்பட்ட தாழைக்குடை பலமாகப் போய்விடும் கொற்ற வனே!

ஆங்கில ஏடுகள்

ஆசிரியர்: A. S. வேணு அவர்கள் எழுதியவை.

Dravidasthan

[வடக்கு, தெற்கின் வரலாற்று உண்மையை வகையாக எடுத் துக் காட்டும் ஆராய்ச்சி ஏடு.]

Life of Annadurai

அறிஞர் அண்ணவின் வாழ்க் கையைச் சித்தரிக்கும் வர லாற்று ஏடு.]

Verdict on Verdict

[தென்னுட்டு தி.மு.க.வின் ஜூலைப் போராட்டத்தின் விளக்க ஏடு.]

வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு

கலைமன்றம்

சென்னை-1

[வீமதேவன் செவியில் கபால கேசரியின் வார்த்தைகள் ஏறமறுக்கின்றன.]

வீமதேவன்: (போர்வீரனை நோக்கி) பரிமளதேவன், எங்கிருக்கிருன்?

போர்வீரன்: வேங்கைப் படைகளைத் தாங்கி வருகிருராம்!

வீமதேவன்: ஆ...!

கபாலகேசரி: அதைரியப்பட வேண்டாம், வீரன் வீமதேவனே! பத்மினியின் பலி முதலில் முடியட்டும், பிறகு பார், என் கபால மூர்த்தியின் கருணையை!

[சிரிக்கிருர்]

வீமதேவன்: (பெருமூச்சுடன்) ஆகட்டும் குருதேவா!

[பத்மினி, பலிபீடத்திற்குக் கொண்டுவரப் படுகிருள். கொலையாளிகள் தயாராக நிற்கின்றனர்.]

கபாலகேசரி: நடக்கட்டும்!

[கொலையாளிகள் வெட்ட முனைந்தபோது, இருவர் முதுகிலும் இரண்டு கட்டாரிகள் ஓடி வந்து குத்திக் கொள்கின்றன. இருவரும், 'ஆ' என்ற அலறலுடன் கீழே சாய்கிருர்கள்.]

என்ன! என்ன நடந்தது!

[பரிமளதேவன் அங்கு உருவிய வாளுடன் வருகிருன்]

பரிமளதேவன்: நடந்துவிடவில்லையடா நாசகாரா! நடத்தப்பட்டது! நச்சுப்பாம்பே! நரபலி தாசனே! நான் யார் என்பதை இன்னும் கொஞ்சம் நாழிகையில் நீ மட்டுமல்ல, மன்னனும் புரிந்து கொள்வான்!

கபாலகேசரி: ஏ, ருத்ரமூர்த்தி! ஏன் இன்னும் பேசாமலிருக்கிருய்?

பரிமளதேவன்: அது பேசாத கல்லடா, பெருச்சாளியே! பேசும் கற்களே இதோ பேசாமலிருக்கும் போது, எவனே சிற்பி தன் கைத் திறனைக் காட்டிய கல்தானு பேசப் போகிறது! மன்னனிடம் புளுகிருயே, உன் மகாதேவன் பிரத்தியட்சமாய், வேங்கைப் படையை துரத்துவானென்று — இதோ உன்னை பலியிடுகிறேன், வரச் சொல் அந்த கபாலமூர்த்தியை!

கபாலகேசரி: மன்னு! இன்னுமா மௌனியாகி நிற்கிறீர்! மௌனத்தால் வேதனை தீர்ந்துவிடாது மன்னவனே! மகாதேவன் கருணையையும் அதனுல் பெற்றுவிட முடியாது! நடப்பதை நிறுத்தாமல் செய்! இதோ நானிருக்கிறேன் உன் வெற்றிக்குப் பக்கபலமாக!

வீமதேவன்: (தயக்கமுடன்) பிடியுங்கள் இந்த மூர்க்கனை! காட்டிக்கொடுக்கும் கயவனே! இதே பீடத்தில் உன்னையும் கண்டதுண்டமாக்குகிறேன்.

கபாலகேசரி: ஹஹ்ஹஹ்ஹஹ் ஹா!

[வீரர்கள் நெருங்கியதும்]

பரிமளதேவன்: நெருங்காதீர்! அதோ......

[வேங்கைப் படைகள் நாட்டினுள் நுழைந்து ரணகளப்படுத்துகின்றன. அந்தப் பயத்தின் காரணமாக, பக்கத்தில் மறைந்திருந்த, கபாலகேசரியின் சகாக்கள் — கபாலிகர்கள் — பயங்கர கோஷமுடன் ஓடுகின்றனர். அவர்களைக் கண்ட மன்னர் ஒன்றும் தெரியாமல் விழிக்கின்ருர். கபாலகேசரி, பயந்தே போய்விடுகிருர்.]

பரிமளதேவன்: பார்த்தாயா மன்னு, பார்த்தாய் விட்டதா இந்தப் பாவியின் பட்டாளத்தை! என் பத்மினியின் பச்சைரத்தம் குடிப்பதற்காக வந்த இந்தப் பாத

கனின் கூட்டத்தினர் மன்னவனே இப்பயங்கர வாதிகள். நான் இங்கு ஒளிந்து உமக்குத் துணையாக இல்லையென்றால், இந்நேரம் உன் ரத்தத்தை இந்த உன்மத்தன் உறிஞ்சியிருப்பான்! உதவாக்கரை யுருவமே! உன் போலிச் சூதை அம்பலப்படுத்த இந்தப் போர். இதற்காக, தென்கலிங்கம் ரணகள மாகிறது! எனக்குத் தெரியும் இந் நிலைமை யேற்பட்டாலன்றி முடிவு காண முடியாதென்று! முட்டாளே! எங்கே நழுவப் பார்க்கிறாய்! பிடியுங்கள் இந்த மாமிசப் பிண்டத்தை!

[கபாலகேசரி பிடிபடுகிறார்]

வீமதேவன்: பரிமளதேவா! மன்னித்துவிடு, இந்தப் பாவியின் தீமையை! போரை நிறுத்திவிடு! போ, போ!

பரிமளதேவன்: (எதிரே இருந்த நாகநாதனை நோக்கி) நாகநாதா! போரை நிறுத்து, போ!

வீமதேவன்: (பத்மினியின் கட்டையவிழ்த்து) மகளே! என்னை மன்னித்துவிடம்மா! நான் மடையன். மஹேஸ்வரனை நம்பி, இந்த மதோன்மத்தனின் பேச்சைக் கேட்டேன்.

பத்மினி: (மன்னரையும் சட்டை செய்யாமல்) கண்ணாளா!

[பரிமளதேவனைச் சேர்த்துக் கட்டிக்கொள்கிறாள்.]

வீமதேவன்: இம்...! இந்தப் பாவியை—நரபலிக்காரனைப் பலியிடுங்கள்! வழியும் பச்சைரத்தமாவது, நான் செய்த தீமைக்குப் பரிகார மாக அமையட்டும்!

[கபாலிகேசரி 'ஓ' வென்று கதறுகிறார். அவர் தலை தரையிலே உருளுகிறது. வேங்கை இளவரசன் புன்முறுவலுடன் அங்கு வருகிறான்.]

வீமதேவன்: மன்னிக்க விக்ரமா! உன் நண்பனுக்கு துரோகம் செய்துவிட்டேன்!

விக்ரமன்: துரோகம் செய்யவில்லை மன்னா! தாய்மையான நன்றியை மறந்து விட்டீர்! இனியாவது, இந்நாடு, பரிமளதேவன் பாதுகாப்பிலிருக்கட்டும்!

வீமதேவன்: நிச்சயமாக, எதிர்காலக் கலிங்கம், பரிமளதேவனின் நிழலில்தான்!

[எல்லோரும் வாழ்த்துக் கோஷமுடன் செல்கின்றனர். பத்மினி, கபாலகேசரியின் உருண்ட தலையைப் பார்த்துப் பயந்து பரிமளதேவனைக் கட்டிக் கொள்கிறாள். பரிமளதேவன், அலட்சியமாக, கபாலகேசரியின் தலையைக் காலால் உதைத்து, மன்னரைப் பின் தொடர்கிறான்.]

(முற்றும்)

சீர்திருத்தத் திருமணம்

சோறுச் சமைக்கும் அரிசியைத் தாய்மார்கள் உலையில்போடும் முன்பு அரிசியிலே கலந்திருக்கும் கற்களைப் போக்கி—உமியை அப்புறப்படுத்தி—நெல்லைப் பொறுக்கி எடுத்து விட்டு சுத்தப் படுத்திய பின்னர் உலையிலிட்டுச் சோறாக்குவது போல் வைதீகத் திருமணச் சடங்குகளில் உள்ள அர்த்தமற்ற பயன்தராத சடங்குகளைத் தள்ளிவிட்டு (அதாவது அரிசியிலிருந்து கல்லையும், நெல்லையும் போக்குவது போல) நற் சடங்குகளை மட்டும் வைத்துக் கொள்ளுகிறோம். இதனைத்தான் சீர்திருத்தத் திருமணம் என்று நாங்கள் கூறுகிறோம்.

—சென்னைத் திருமணத்தில்
ஆசிரியர்

ஹெலிகாப்டர்

....புரட்சிப்பித்தன்....

விமானத்தில் ஒரு புரட்சி:

ஆகாய விமானங்களின் சரித்திரத்தில் 'ஹெலி காப்டர்' ஒரு புரட்சியையே உண்டாக்கி விட்டிருக்கிறது. மிகவும் ஆபத்துக் குறைந்த விமானம்தான் இது. இதற்கு உயரப் பறப்பதற்கும், வந்து இறங்குவதற்கும் அதிக அகலமும், விசேஷமான முறையில் அமைக்கப்பட்டதுமான விமான நிலயம் (ஏரோடிராம்) தேவையில்லை. எங்கிருந்தாலும் ஆகாயத்துக்கு நேராக உயர்ந்து செல்லும். மிகவும் குறுகலான இடத்தில்கூட அது இறங்கி நிற்கும். பட்டணத்தின் மத்தியிலும், மலைச் சரிவிலும், கடற்கரையிலும், வயலிலும், வீட்டு முற்றத்திலும், மாளிகையின் நிலாமாடத்திலும் 'ஹெலிகாப்டர்' அநாயாசமாக வந்து இறங்கும். அங்கிருந்து காரியம் முடிந்ததும் சட்டென்று அப்படியே பறந்து, மேலே போகவும் செய்யும். இந்த வசதிதான் மற்ற விமனங்களைவிட இதற்கு முக்கியத்துவம் உண்டாக்குகிறது.

கொரியாவில் சேவை.

'ஹெலிகாப்டரை'ப் பற்றி நாம் இப்போதுதான் கேட்கத் தொடங்கியிருக்கிறோம். உண்மையில் ஹெலிகாப்டரின் அசாதரணமான குணவிசேஷங்களைத் தெரிய வந்து, காலம் அதிகமாகவில்லை.

கொரியா யுத்தம்தான் இப்படி ஒரு ஆகாயப் பறவை உண்டென்றும், அதற்கு அற்புதமான திறமைகள் உண்டென்றும் உலக யுத்திற்குத் தெளிவு படுத்திக் கொடுத்தது. கொரியா யுத்த அரங்கத்தில் இவ்வளவு தூரம் சேவை செய்துள்ள வேறொரு வகை உபசாரணமே இல்லை.

காடும், மேடும், ஆறுகளும், சதுப்புநிலங்களும், கொடிய பனி மலைகளும் நிறைந்த கொரியாவில் 'ஹெலிகாப்டர்' நிறைவேற்றியுள்ள பணி யாரையும் ஆச்சரியமடையச் செய்யப் போதுமானதாகும். காயம்பட்ட 20,000 வீரர்களை 'ஹெலிகாப்டர்' பயங்கரமான யுத்த அரங்கிலிருந்து எடுத்துக்கொண்டு போய்க் காப்பாற்றியிருக்கிறது. ஆயிரத்துக்குப் பக்கம் விமானிகளுக்கு (Pilots) உதவியும், உயிரும் நல்கியது ஹெலிகாப்டர்தான். எதிரிகளின் கூடாரங்களைக் கடந்து எதிரிகளின் நாட்டில் வெகுதூரம் உள்ளே பறந்து சென்று, அங்கிருந்து போர்விமானங்களை ஹெலிகாப்டர் ஏற்றிக்கொண்டு போயிருக்கிறது.

எதற்கும் உதவும்.

கொரியா யுத்தத்தின் அனுபவம்' சண்டைக்குரிய எந்த ஒரு தேவை

யையும் ஹெலிகாப்டரால் நிறை வேற்ற முடியாமற் போகவில்லை என்று தெளிவு படுத்தியது. ஹெலிகாப்டரை, என்ன காரியங்களுக் கெல்லாம் உபயோகிக்கலாம்? நீர்மூழ்கிக் கப்பல்களின் வழியைக் கண்டுபிடிக்க, தந்திக் கம்பிகளை இணைக்க, சுரங்கங்களைத் தாண்டிச் செல்ல, போர் காலத்தில் உதவி செய்ய, பட்டாளத்தை இடம் மாற்ற, ஆயுதங்களும், உணவும் கொண்டு சேர்க்க—எதற்கும் ஹெலிகாப்டரை உபயோகப் படுத்தலாம்.

புதிய அதிசயத்தூதன்.

கொரியா யுத்தத்துக்கு முன்பு வரை ஹெலிகாப்டரின் வாழ்க்கையும் ஒருவித 'தியான'மாயிருந்தது. மிகவும் வேகமாகப் பறந்து செல்கிற பெரிய இறக்கைகளுள்ள விமானங்களின் கீழ், புறக்கடைக் கதவு போல, தணித்து நிற்பதாக விருந்தது ஹெலிகாப்டரின் பணி. சில பிரத்யேக வேலைகளை நிறைவேற்றுவதற்கு மட்டும் ஒரு துணைக்கருவி என்ற நிலையில் ஹெலிகாப்டர் உபயோகப்படுத்தப் பட்டது.

ஆனால், கொரியா யுத்தம் சுற்றிலும் பரவியபோது விமானங்கள் ஒடிந்து விழவும், விமானிகளும் அபயத்துக்கு வேண்டி ஓடிவரவும் செய்த நேரத்தில், ஒரு அற்புதத் தூதனைப்போல ஆகாயத்தினின்றும் மெல்ல மெல்ல இறங்கிச் சென்று அவர்களை யெல்லாம் காப்பாற்றுவது ஹெலிகாப்டரின் கடமையாகிவிட்டது. அந்தச் சேவையின் மதிப்பு எவ்வளவு பெரியது என்பது முன்பு கொடுத்துள்ள கணக்கிலிருந்து தெளிவாகிறதல்லவா?

பட்டாளத்தின் திருப்தி.

அமெரிக்கப் பட்டாளம் இந்த அற்புதப் பறவையின் சேவையினால் அதிக மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்திருக்கிறது. பட்டாளத்துக்கு வேண்டிய மிகவும் பிரதானமான ஒரு கருவியாகவே ஹெலிகாப்டர் இன்று பயன்படுத்தப் படுகிறது. உற்பத்திசாலைகளுக்குக் கூடுதலான ஆர்டர்கள் அனுப்பி, கூடுதலான ஹெலிகாப்டர்கள் வாங்கிக் காப்பற்றி வருவதில் அமெரிக்கப் பட்டாளத்துக்குக் குறிப்பிடத்தக்க ஒரு உற்சாகம் காணப்படுகிறது. 1954-ம் ஆண்டு 'பட்ஜெட்'டில் ஹெலிகாப்டர் வாங்குவதற்காக 150 லட்சம் டாலர் தான் அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றனர். 1955-ல் 2000 லட்சம் இதற்கு வேண்டி பாதுகாப்புப் 'பட்ஜெட்'டில் இடம்பெற்றுள்ளது

ஹெலிகாப்டரின் தேவை பட்டாளத்துக்கு மாத்திரமல்ல. வியாபாரிகளையும் இந்த விசித்திரப் பறவை கவர்ந்திருக்கிறது. அதனுடைய வசதியையும், ஈடும்

இகோர் ஸிகோர்க்ஸி

எடுப்புமற்ற சேவையையும் கண்ட அவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். எந்தக் குறுகலான சந்திலிருந்தும் அதில் ஏறிப்போனுல் தேவையான இடத்தில் இறங்கிக் காரியங்களை நிறைவேற்றலாம் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கின்றது. ஹெலிகாப்டர் பல வகையிலும் ஆதாயமானதென்றும் அவர்கள் கண்டு கொண்டனர்.

பலவிதமான உபயோகங்கள்.

அன்றாட வாழ்க்கையில் ஹெலிகாப்டரைக் கொண்டு பல காரியங்களையும் செய்ய முடியும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 'டெக்ஸாஸ் ஸ்டேட்'டில் ஒரு தோட்ட உரிமையாளர் இருக்கிருர். அவருடைய தோட்டத்தின் விஸ்தீரணம் 50,000 ஏக்கரா. இவர் ஒரு ஹெலிகாப்டரைச் சொந்தத்தில் வாங்கியிருக்கிருர்—3 பேர்கள் பிரயாணம் செய்யக்கூடிய '47 மாடல்' ஒரு ரகம். தனது கன்றுகாலிகளைத் தேடிப் பிடிப்பதற்கும், ஏரில் கட்டி உழுவதற்கும் அவர் ஹெலிகாப்டரை உபயோகிக்கிருர்.

'பிளோரிடா ஸ்டேட்'டில் ஆரஞ்சுத் தோட்டங்களின் சொந்தக்காரர்கள் ஹெலிகாப்டரை வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். குளிர்காலத்தில் பூமியின் மேல் பரப்பு குளிர்ச்சியாகிறபோது, ஒரு விதமான ஆவி பொங்கும என்பது அவர்களுக்குத் தெரியும். அந்த ஆவியும், குளிரும் சேர்ந்தால் ஆரஞ்சுப் பழங்களுக்குக் கெடுதல் உண்டாகும். இரவு நேரங்களில் ஹெலிகாப்டரில் ஏறி இந்த ஆரஞ்சு மரங்களின் உச்சியின்மீது உராய்ந்தபடி தோட்டம் முழுவதும் சுற்றிப் பறப்பார். அப்படி, ஹெலிகாப்டர் தரும் உஷ்ணக் காற்றைக் கொண்டு ஆரஞ்சுப் பழங்களை நாசம் செய்ய விருக்கும் குளிரை அவர்கள் தடுத்து விடுகின்றனர்.

வாஷிங்டனிலுள்ள ஒரு 'செர்ரி' (Cherry) தோட்டக்காரர் ஹெலிகாப்டரைப் பயன் படுத்துகிற முறை ருசிகரமானதாகும்.

காய்கள் பழுக்கிற காலத்தில் தோட்டச் சொந்தக்காரர் மரங்களின் அடியில் 'பிளாங்கெட்' (Blanket) விரிப்பார். பிறகு அவர் ஹெலிகாப்டரில் ஏறுவார். ஹெலிகாப்டர் தோட்டத்தின் மேலாகச் சுழன்று பறக்கும். மரத்தின் கிளைகள் அசையும்போது பழங்கள் எல்லாம் உதிர்ந்துவிழும். ஒரு நிமிஷத்தில் பழம்பறிக்கும் வேலை முடிந்தது—எவ்வளவு எளிது!

ஹெலிகாப்டரின் பிறப்பு.

அமெரிக்காவில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ஒன்று தான் ஹெலிகாப்டர் உற்பத்தி. மேலே விவரித்த முறையில் பல விதத்தில் பயன்படக் கூடிய ஒரு இயந்திரம் உருவாக்கும் தொழில் உடனடியாக வளருவதைப் பற்றி ஆச்சரியப்படக் கூடாதல்லவா? எனினும் ஆச்சரியப்படுவதற்கு வழியுண்டு. காரணம், அவ்வளவு குறைந்த காலம்தான் ஆயிற்று, இப்படிப்பட்ட ஒரு இயந்திரத்தைப் பற்றி எண்ணம் தோன்றி.

1940-ல் தான் அது நடந்தது. ரஷ்யாவில் பிறந்த **இகோர் ஸிகோர்ஸ்கி** தான் இந்த அதியற்புதத்துக்கு விதை தூவியவர். அவர் ஒரு நூதானமான விமானம் செய்தார்—முதலாவது ஹெலி

காப்டர். தனது புதிய பறவையை அவர் ஆகாயத்தில் பறக்கவிட்டார். ஆகாயத்தில் பறந்த இந்தப் புதிய இயந்திரம் அவருடைய விருப்பத்துக் கெல்லாம் இணங்கியது. அது மேலும் கீழும் பறந்தது. இடப்பக்கமும், வலப்பக்கமும் பறந்தது. சலனமின்றி அது ஆகாயததில் தொங்கிக் கிடந்தது! ஆனுல் ஒன்றுமட்டும்—அதுவும் முக்கியமான ஒரு காரியம் மட்டும்-அதனுல் செய்ய இயலவில்லை. இந்த விமானம் முன்னுல் மட்டும் நகரவில்லை. முன்னுல் நீங்குவது அசாததியம் என்றுதான் தோன்றியது. ஆட்கள் கைகொட்டி நகைத்தனர்; "ஓ, இகோரின் முட்டாள்தனம்!"

ஆனுல், 'இகோர்' முயற்சியைக் கைவிடவில்லை. அவர் தன் பணியைத் தொடர்ந்தார். அதிகநாள் ஆகவில்லை, அதற்குள் 'இகோரி'ன் புதிய சிருஷ்டி அமெரிக்காவின் எல்லா விமானங்களுக்கும் அவமதிப்பை ஏற்படுத்திக் கொண்டு ஆகாயத்தில் உயர்ந்து முன்னுல் முன்னுல் பறந்தது சென்றது!

கணக்குகள் பேசுகின்றன.

அதற்குப்பின் இப்போது காலம் எவ்வளவாகி விட்டது? சில ஆண்டுகள் மட்டும், பதினைந்து ஆண்டுகள் அவ்வளவு அதிக காலமோ?...... ஆனுல், ஹேலிகாப்டர் உற்பத்தி இன்று உலகத்தின் மிகப் பெரிய தொழில் உற்பத்திகளில் ஒன்றுக மாறியிருக்கிறது. ஹெலிகாப்டரின் மிகப் பெரிய நிபுணர்கள் பேராசைப்பட்டதைக் காட்டிலும் அதிவேகமாகத்தான் அது வளர்ச்சியடைந்துள்ளது.

நாம் கணக்குகள் வைத்துப் பேசலாம்...

எதிர் பாருங்கள்!
அடுத்த தொடர்கதை
?
விருதை வீரர்
ஆசைத்தம்பி
எழுதுகிருர்!

அமெரிக்காவில் ஒரு கம்பெனி—**'பியாஸெக்கி ஹெலிகாப்டர் கார்ப்பரேஷன்'**, இவர்கள் ஹெலிகாப்டர் செய்து விற்கின்றனர். 1949-ல் அவர்கள் 50 லட்சம் டாலருக்குத் தான் ஹெலிகாப்டர் செய்து விற்றனர். கடந்த ஆண்டு அவர்கள் ஹெலிகாப்டர் விற்றுத் தேடியது 867 லட்சம் டாலராகும். 4 ஆண்டுகளுக்கிடையில் விற்பனை எவ்வளவு வளர்ந்திருக்கின்றது?

'ஹில்லர் ஹெலிகாப்டர்ஸ்' இந்தத் துறையில் பணியாற்றுகிற மற்ருெரு கம்பெனி. 1949-ல்5,57,600 டாலருக்கு ஹெலிகாப்டர் விற்பனை செய்த இவர்கள், 1953-ல் மட்டும் ஹெலிகாப்டர் விற்று 103 லட்சம் அடைந்தனர்.

சிறப்பான வருங்காலம்.

இவ்வளவெல்லாம் பார்த்து முடிந்ததல்லவா? இனி யிருப்பது வருங்காலத்தின் காரியம் தான். ஹெலிகாப்டர் உற்பததிசகு ஒரு வருங்காலம் உண்டா? உண்டு.

அந்த வருங்காலம் சிறப்புடையது என்றுதான் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஹெலிகாப்டர் அன்றாட வாழ்க்கைக் குரிய ஒரு வண்டியாகப் போகிறது. அது சம்பந்தமாக அமெரிக்காவிலுள்ள ஒரு 'ஏர் டிரான்ஸ் போர்ட் அஸோஸியேஷன்'' இவ்விதம் கூறுகிறது: '1960-ல் 60 லட்சம் மக்கள் பட்டணத்தை விட்டு இதர பட்டணங்களுக்குப் பிரயாணம் செய்வர். 1970-ல் பிரயாணிகளின் தொகை 220 லட்சமாய் விடும். அவ்விதம் ஹெலிகாப்டர் மக்களுடைய மிகப் பிரியமான வண்டியாகப் போகிறது. 'மனிதனின் சமாதான கால வாழ்க்கையிலும், அதன் மூலம் ஹெலிகாப்டரின் பொறுப்பு முந்தியதாகவே இருக்கும்.'

சித்திரம் அழகானதுதான். ஆனால் வெறும் கனவுதானா?

தற்போதைக்கு கனவுதான்! மனோகரமான ஒரு கனவு! ஆனால், மிக எளிதில் நனவாக முடியக் கூடிய கனவு. எதனால் என்றால், ஹெலிகாப்டர் ஒரு நிரந்தர பிரயாண சாதனமாக உலகத்தின் பெரிய நகரங்களில் பறக்கத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்காவில் நியூயார்க்கிலும், சிக்காகோவிலும், லாஸ் ஏஞ்சல்ஸிலும்தான் இன்று சர்வீஸ்கள் உள்ளன. அதில் லாஸ் ஏஞ்சல்ஸ்-சிக்காகோ சர்வீஸ்கள் தபாலும், சாமான்களும் மாத்திரம் ஏற்றிக்கொண்டு போகின்றன. நியூயார்க் சர்வீஸோ வென்றால், ஆட்களையே ஏற்றிக்கொண்டு போகிறது.

அனுபவிக்கக் கூடிய சொத்து.

இந்த மூன்று சர்வீஸ்களும் விலைமதிப்புள்ள, அனுபவிக்கக் கூடிய செல்வத்தைத் தந்திருக்கின்றன. லாஸ்ஏஞ்சல்ஸ் சர்வீஸுக்குச் சிறிது நாட்களுக்குள் தபாலும், சரக்குகளும் சேர்ந்து லட்சக் கணக்கான பவுண்டு சாமான்களைக் கொண்டுபோக முடிந்திருக்கிறது. சிக்காகோ கம்பெனிக்காரர்களின் ஹெலிகாப்டர் பறந்திருக்கிற தூரம், பல லட்சம் மைலகளாகும். இவ்வளவு பணி செய்ததற்கிடையிலும் ஒரு ஆபத்துகூட ஏற்படவில்லை என்பதுதான் இதன் சிறப்பு. அதுதான் சாதாரண விமானங்களினின்றும் ஹெலிகாப்டருக்குள்ள முக்கிய வித்தியாசமாகும்.

1954 ஜூலை முதல் **'நியூயார்க் ஏர்வேஸ்'** திட்டமான சர்வீஸ் ஆரம்பித்தது. இதற்கிடையில் ஆயிரக் கணக்கான ஆட்களை ஹெலிகாப்டரில் ஏற்றிக் கொண்டு போயிருக்கிறது இந்த சர்வீஸ். நியூயார்க்கிலுள்ள மூன்று விமான நிலையங்களை இது இணைக்கிறது.

பிரயாணிகளுக்கு மகிழ்ச்சி.

உலகத்தின் முதலாவது ஹெலிகாப்டர் சர்வீஸ் என்ற முறையில் இந்த சர்வீஸைப் பயன்படுத்திப் பார்த்த பிரயாணிகளின் அபிப்பிராயம் குறிப்பிடத் தக்கதல்லவா? நியூயார்க கம்பெனிக்காரர்களே இந்த அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள ஏற்பாடு செய்தனர். ஒரு கேள்வித்தாளை அவர்கள் ஒவ்வொரு பிரயாணிகளுக்கும் கொடுத்தனர். எத்தனையோ பூர்த்தி செய்யப்பட்ட கேள்வித்தாளகள் அவர்களுக்குத் திரும்பக் கிடைத்தன. பிரயாணிகளின் அபிப்பிராயம் மோசமில்லை. பலரும் நன்றி தெரிவிப்பதாக இருந்தன. சரியாகக் குறிப்பிட்ட இடத்தை அடைவதால் குறிப்

பிட்ட காரியங்களைத் தங்கு தடையின்றிச் செய்ய முடிந்ததற்குச் சிலர் நன்றி தெரிவித்திருந்தனர். மிகவும் புதிய ஒரு இன்பம், பிரயாணத்திலுள்ள புதுமை எத்தனை பேர்களையோ கவர்ந்திருக்கின்றன. பலருக்கு, எடுத்துக்கூற மாறுபட்ட கருத்துகளு மிருக்கின்றன. குறையில்லாமலு மில்லை. விமானம் பறக்கும்போதுள் சத்தம் சகிக்க முடியவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

உண்மையில், ஹெலிகாப்டர் பிரயாணத்தின் அனுபவங்கள் என்ன? பயங்கரமான சத்தம் இருக்கிறதென்பது நிச்சயம். அத்துடன் உள்ளூரச் சிறிது நடுக்கமும் இருக்கும். ஹெலிகாப்டரில் ஏறும்போது சிறிது பயம்தோன்றினாலும் தோன்றலாம். ஆனால் உடனே எல்லாம் நீங்கிவிடும். உங்களுக்கு அதுபழக்கமாய்விடும். ஹெலிகாப்டரில பறக்கத் தொடங்கினால், கனம் குறைந்த சிறிய விமானத்தில் பிரயாணம் செய்கிற அனுபவம் மட்டும்தான் ஏற்படும். ஆனால் ஹெலிகாப்டர், இடையில், ஆகாயத்தில் உயரத்தில் நிற்கும்—யாதொரு சலனமுமில்லாமல். ஆகாயத்தில் அப்படித் தொங்கி நிற்பது உங்களுக்கொரு கனவுக் காட்சிபோல் தோன்றும்!

குறைந்த வேகம்.

பிரயாணத்தின் வேகம் குறைவுதான். 'ஜெட் விமானங்களு'க்குச் சமமாகப் பறக்க ஹெலிகாப்டரில் ஏறவேண்டாம். மிகவும் வேகமுள்ள ஹெலிகாப்டர் மணிக்கு 156 மைல்கள் பறந்திருக்கின்றது. ஹெலிகாப்டரிலிருந்து பூமியைப் பார்த்தால் பூமியில் நடப்பவை எல்லாம் தெளிவாகக் காணலாம். வண்டிகள் ஓடுவதும், குழந்தைகள் விளையாடுவதும், மற்றும், மற்றும் உங்களுடைய பார்வையில் படும்.

இந்தக் குறைந்த வேகம் ஹெலிகாப்டரின் ஒரு பெரிய குறைதான். அனேகாயிரம் மைல்கள் பிரயாணம் செய்வதற்கு எப்போதும் வேகமுள்ள விமானம்தான் நல்லது. ஆனால் அப்படிப்பட்ட விமானங்களுக்குக் குறிப்பிடத்தக்க ஒரு தொல்லையிருக்கிறது. பட்டணத்திலிருந்து அனேக மைல்கள் தூரத்தில் விமான நிலையம் இருக்கும். பட்டணத்திலிருந்து விமான நிலையத்துக்கும், அங்கிருந்து மீண்டும் பட்டணத்துக்கும் உள்ள பிரயாணத்துக்கு விமானத்தில் செலவழிக்கிறதைக் காட்டிலும் அதிக நேரம் வேண்டியிருக்கிறது. ஹெலிகாப்டர் இந்த விஷயத்தில்தான் அனுகூலமாயிருக்கிறது. எந்தப் பட்டணத்தின் மத்தியிலும் அது வந்துநிற்கும். மிகவும் குறைவான இடவசதி போதும். ஒரு வீட்டின் மேலிருந்தே, பஸ்—ஸ்டாப்பிலிருந்து பஸ்ஸில் ஏறுகிற மாதிரி உங்களுக்கு ஹெலிகாப்டரில் ஏறிப் போகலாம். உங்களுடைய வீட்டு முற்றத்திலேயே வந்து நிற்கக் கூடிய ஒன்றல்லவென்றாலும், அருகிலுள்ள வயலில் வந்து நின்று உங்களை அழைக்கிற ஒன்றாக இந்த வாகனத்தை உபயோகிக்கலாம். அதில் ஏறும் போதோ ஆபத்தைப் பற்றிப் பயப்படவும் வேண்டியதில்லை. இதனாலெல்லாம் தான், ஹெலிகாப்டர் அற்புத வாகனமாக இருக்கிறது.

செலவு அதிகம்.

ஹெலிகாப்டரின் குறைகளில் ஒன்று அதனுடைய குறைந்த வேகம் என்று சொன்னோமல்

லவா? இதற்குள்ள மற்றொரு குறை, இன்றைய நிலைக்கு இது இலாபகாமானதல்ல என்பதே. எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்தாலும், மற்ற விமானங்களை விட மிகவும் அதிகம் தொல்லை தான் ஹெலிகாப்டரைக் கட்டி வைத்துத் 'தீனிபோடுகிற' காரியம். நியூயார்க் ஹெலிகாப்டர் சர்வீஸ் காரருக்கு இந்த இயந்திரத்தைப் பறக்க வைக்க மைலுக்குச் சராசரி 1. 87 டாலர் செலவாகிறது என்று கணக்குக் காட்டப்பட்டுள்ளது. 28 பேர்களைச் சுமக்கிற டிஸி—3 இரட்டை இஞ்சின் விமானத்துக்கு ஆகிற செலவு, மேலே கூறியதின் நான்கில் ஒரு பாகம் மட்டும்தான்.

இதற்குக் காரணம் என்ன? யுத்த முறைப்படி (**War quality** யாக) தான் ஹெலிகாப்டர்கள் எல்லாம் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இன்று வரையிலும் அது ஒரு யுத்த வாகனமாயிருந்தது. யுத்த அரங்கம்தான் அதனுடைய வேலை செய்யுமிடம். இதுதான் அளவுக்கு மீறிய இந்தச் செலவுக்குக் காரணம். மற்றொரு வகையிலும் செலவு உயர்ந்து நிற்கிறது. செலவைக் குறைப்பதற்குள்ள வழிகள் என்னவென்ற சிந்தனை இன்னமும் எழவில்லை. இந்த விஷயம் முழுவதும் கவனமாகப் படிக்க வேண்டியிருக்கிறது. நியூயார்க் சர்வீஸ் காரர்கள் அந்த வழியில் சிறிது முயன்றனர். அதற்குப் பலனும் கிட்டியது.

சோதனைகள்.

ஹெலிகாப்டருக்கு உபயோகப் படுத்துகிற 'ரோட்டர் ப்ளேடு' கள்—அதனுடைய தலையில் சுற்றுகிற விசிறியின் 'இலை'கள்—1200 மணி நேரம் உபயோகப்படுத்தினால், உடனே மாற்றிவிட வேண்டுமென்பதுதான் சர்க்கார் உத்தரவு. இயந்திரத்தினுடையவும், மனிதனுடையவும் பாதுகாப்பைப் பொறுத்து ஏற்பட்டுள்ள உத்தரவு. ஆனால், சோதனை செய்து பார்த்தபோது அவைகளை 1800 மணிநேரம் வரை உபயோகப்படுத்தலாம் என்று தெளிவாயிற்று. ஒன்றரை 'இலை'யின் ஸ்தானத்தில் ஒன்றுமட்டும் போதும் என்பதும் விளங்கியது. எவ்வளவோ ஆதாயம் உண்டாக்கியது இந்த பரிசோதனை. இத்தகைய சோதனைகளால் ஹெலிகாப்டருக்கு ஏற்படுகிற அளவுக்கு மீறிய செலவைச் சரிக்கட்டுவதற்கும், பிரயாணத்துக்கு உபயோசிக்கிற சாதாரண வண்டிகளோடு போட்டியிடத் தக்க விதம் எளிதான முறையில் வேலை செய்வதற்கும், முடியும். இவ்வளவும் செய்து முடித்தால் மனிதனின் சுகப் பிரயாணத்துக்குள்ள ஒரு சாதாரண வாகனமாகமாறிவிடும் ஹெலிகாப்டர்.

புதிய மாதிரிகள்.

இயந்திரத்தின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கும், செலவைக் குறைப்பதற்கும், வண்டிக்குள்ளே அதிக வசதியுள்ளதான பல மாதிரிகளையும் நிபுணர்கள் செய்திருக்கின்றனர். கூடுதல் வேகமுள்ள ஹெலிகாப்டர்கள் உருவாகி வருகின்றன. 'பியாஸெக்கு'க் கம்பெனிக்காரர்களுடைய மாதிரி எச்—21 ஹெலிகாப்டர் பறக்கத் தொடங்கியிருக்கிறது. 20 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணிக்கு 115 மைல் வேகத்தில் போவதற்கு அதனால் முடியும். ஹெலிகாப்டரின் 'அம்மா—அப்பா'வாகும் உரிமையாளரான மிஸ்டர். இகோர்ஸி

கோர்க்ஸி தனது எஸ்-56. ஹெலிகாப்டரைச் செய்துவருகிறார். அது 32 பிரயாணிகளைச் சுமக்கும். மணிக்கு 150 மைல்கள் பறக்கும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் ஒரு தொல்லை. யுத்தம்! எதைச செய்தாலும் அது யுத்தத்துக்குத் தேவையாகிறது. பட்டாளக்காரர்கள் ஹெலிகாப்டர் முழுவதும் வாங்கிச் சேகரம் செய்து, சமாதானம் நிறைந்த அன்றாட வாழ்க்கையில் அதை ஒரு நாசப் பொருளாக மாற்றி விடுகிறார்கள்.

புதிய சர்வீஸ்கள்

ஆயினும் ஒரு 'சிவிலியன்' வாகனமென்ற நிலைக்கு ஹெலிகாப்டரின் உபயோகம் வளர்ந்து கொண்டுதான் வருகிறது. அமெரிக்காவில அனேகம் கம்பெனிக்காரர்கள் புதிய ஹெலிகாப்டர் சர்வீஸ்கள் ஆரம்பிக்க அனுமதியை வேண்டிக் காத்திருக்கின்றனர். புதிய ஹெலிகாப்டர் 'லைனு'க்கு அனுமதி கோரும் 50 விண்ணப்பங்கள் இப்போது அமெரிக்காவில் '**ஸிவில் ஏரோ நோட்டிக்ஸ் போர்ட்டி**'ன் ஆலோசனையின் கீழ் உள்ளது. '**நாஷனல் ஏர்லைன்ஸ்**' என்ற கம்பெனிக்காரர்களின், (பளோரிடா நகரத்தில் ஒரு ஹெலிகாப்டர் சர்வீஸ் ஆரம்பிக்கும்) முயற்சி முறைப்படி நடந்து வருகின்றது.

அமெரிக்காவில் மிகவும் ஜனநெருக்கமுள்ள நகரங்களின் முக்கிய இடத்தில் ஹெலிகாப்டர் நிலையங்கள் ஏற்பட அதிக நாளாகாது. நிலத்தின் கீழானாலும், உயரத்தில் கட்டடங்களின் மேலானாலும் 'ஹெலிபோர்ட்டு'கள் அதிவிரைவில் தயாராகிவிடும். அந்த வழியில்தான் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நீங்கள் மிகக் குறுகிய வருங்காலத்தில் அமெரிக்காவில் நியூயார்க்கிலோ, வாஷிங்டனிலோ உள்ள கட்டடத்தின் ஏதாவது ஒரு நிலாமுற்றத்திலிருந்தோ, திறந்த மாடியிலிருந்தோ ஒரு ஹெலிகாப்டரில் ஏறி உட்கார முடியும்.

அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் இந்தப் புதிய இயந்திரப் பறவைகள் பறந்துவரும். எல்லா நாடுகளிலும் இந்தப் பறவைக்குப் பறந்துட்காருவதற்குக் கூடுகள்-'ஹெலிபோர்ட்டு'கள் ஏற்பட்டுவிடும்.

பிரிட்டனில் இப்பொழுதே ஹெலிகாப்டர் சர்வீஸ் துவங்கி இருக்கிறது. லண்டன் நகரத்தையும், பிரேஸில்ஸையும் சுற்றிலும் சர்வீஸ் நடத்துவது '**ஸாபேன—பிரிட்டிஷ் யூரோப்பியன் ஏர்வேய்ஸ்**' என்ற கம்பெனிக்காரர்கள்தான்.

ஒரு காரியம் மட்டும் அவ்வளவு விரைவில் நடைமுறைக்கு வராது. சொந்தமாக ஒரு ஹெலிகாப்டர் வாங்கி ஆட்களுடைய உபயோகத்துக்கு 'கேரேஜி'ல பாதுகாப்பதென்பதுதான் அது. காரணம், ஹெலிகாப்டரைப் பறக்க விடுவதற்காக முறைப்படி நிறையப் படிக்க வேண்டியிருக்கிறது. மிகக சிக்கலான காரியம்தான் அது. ஹெலிகாப்டரின் விலையும் அதிகம்தான். இரண்டு பேர்களுக்கு மட்டும் ஏறி உட்கார்ந்து பிரயாணம் செய்யக் கூடிய ஒரு ஹெலிகாப்டரின் இன்றைய விலை என்ன தெரியுமா? 33,000 டாலர்.

அது இன்றைய நிலை. நாளைக்சோ? நாளைக்கு இங்கேயும் ஹெலிகாப்டர் சர்வீஸ்கள் உண்டாகாமல் இராது. இந்த ஹெலிகாப்டர் நமது வாழ்க்கையிலும் பறந்து வருகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை.

(மலையாளக் கட்டுரை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது.)

காட்சி 2

தீஸ்ப், ரொதெல்போ—கரிய ஆடை அணிந்திருக்கின்றனர்.

ஓமோதேய்- தூங்கிக் கொண்டே இருக்கிறான்.

தீஸ்ப்: ரொதெல்போ! ரொதெல்போ! வா—வா—என் உயிரல்ல! உன்னைக் காதலிக்கிறேன்—வா! (ஆன்ழெல்லோ போன பக்கமாகத் திரும்பிப் பார்த்து) கொடியவன்!—என் அண்ணனல்ல! என் காதலன்—என் உயிர்—ரொதெல்போ! வா! வீரம் மிகுந்த போர் வீரனே-வா! என் அழகிய ஆண் சிங்கமே—வா! இப்படி என்னைப் பார்—நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா—நான் உன்னைக் காதலிக்கிறேன்.

ரொதெல்போ: தீஸ்ப்...

தீஸ்ப்: நீ எதற்காகப் பதுவிற்கு வந்தாய்—நாம் இந்தக் கொடியவன் வலையிலல்லவா அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் இப்பொழுது மீண்டுபோக முடியாதே-உன்னை என் அண்ணன் என்றல்லவா சொல்லித்திரிகிறேன்—அது ஒரு சூழ்ச்சிதான். இன்றேல் நீ எங்கும் வரப்போக முடியாது. இந்தச சர்வாதிகாரி உன் தீஸ்பின் மேலல்லவா மோகங்கொண்டு விட்டான்—அவன் பிடியில் நாம் இருக்கிறோம். அவன் நம்மை விடுபவனாகத் தோன்றவில்லை. அவன் உன்னை யார் என்று தெரிந்து கொண்டால்—அதை நினைக்கும்

போதே என் உடல் நடுங்குகிறது—அவன் கிடக்கிறான்—என்னிடத்தில் அவன் எதையும் அடைய முடியாது. நீ உறுதியாக இருக்கலாம். நான் உனக்குத்தான் சொந்தம். ரொதெல்போ! இப்படிப் பார் நீ வேறு விதமாக நினைக்காதே.

ரொதெ: நீ ஒரு சிறந்த பெண். அழகிய பெண்—பெருந்தன்மையானவள்.

தீஸ்ப்: ரொதெல்போ—நான் உன்மேல் எவ்வளவு பெருமையாக இருக்கிறேன் தெரியுமா? ஆம்—உன்மேல் எனக்குப் பொறாமைதான்! ஆம். அவனுங்கூட—அந்தச் சர்வாதிகாரி-வெனிஸ் நாட்டான்-அவனும் பொறாமை கொண்டிருப்பதாகத்தான் கூறுகிறான்—பொறாமை கொண்டவனைக் கற்பனை செய்து கொண்டான்—பொறாமை கொள்வதற்கு என்ன உரிமை இருக்கிறது அவனுக்கு. பொறாமையாம். பொறாமை! உண்மையில் பொறாமையாக இருந்தால் மற்றவைகளைப் பற்றி நினைவு உண்டாகாது. பொறாமை ஒன்றே தலைவிரித்தாடும். பதின்மர் குழு—ஒற்றர்—வெனிஸ் குடியரசு—குளம் குட்டை இவைகள் எல்லாம் தோன்றாது—பொறாமை ஒன்றே முன் நிற்கும்—ரொதெல்போ! நீ மற்ற பெண்களோடு பேசுவதை நான் விரும்ப மாட்டேன். பொறுத்துக் கொள்ள மாட்டேன்-அது எனக்குத் துன்பம் தருகிறது. அவர்கள் உன்னிடம் பேசுவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது—மற்றொருத்தி—ஊஹும்—வேண்டாம். வேண்டவே வேண்டாம். அவளைக் கொன்று விடுவேன்—நீ ஒருவனே இந்த உலகத்தில் எனக்குற்ற செல்வம்-வாழ்வு-மகிழ்ச்சி யாவற்றிலும் சிறந்த ஒன்று. உன்னை யன்றி வேறு யாரையும் என் உள்ளம் தீண்டாது. என் இருண்ட வாழ்விற்கு ஒளிதரும் பரிதி நீ! என் விழியின் ஒளி நீ! மற்றவர்கள் பாழ்படுத்திய என் மனத்திற்கு உன் காதல் மகிழ்வூட்டும் மருந்து. உன்னிடம் தனித்துப் பேசும் ஒவ்வொரு வினாடியும் எவ்வளவு இன்பம் அடைகிறேன் தெரியுமா? நீ எதற்காக இங்கு வந்தாய்! இந்தக் கொடியவனிடையில் நாம் எப்படி வாழ்கிறோம் தெரியுமா? ரொதோல்ப் என் காதலன்! ஆம்! என் அண்ணன்—நான் உன்னிடம் பேசும் போது யாவையும் மறந்து விடுகிறேன். மகிழ்ச்சி வெறி தலைக்கேறி விடுகிறது. நீயே பார். உனக்குத் தெரியவில்லையா—என் பைத்தியக்கார நிலை! ரொதோல்போ! என்னைக் காதலிக்கிறாயா? சொல்—சொல்—ஒரு வார்த்தை—ஊம் என்று சொல்லேன்.

ரொதோ: உன்னைக் காதலிக்காதவர்கள் இருக்க முடியுமா தீஸ்ப்?

தீஸ்ப்: சில நாட்களாக நீ என்னமோ மாதிரி இருக்கிறாய் உன் முகம் கவலையில் தோய்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. உண்மைதானே. ரொதோல்போ! எந்தத் துன்பம் உன்னைப் பிடுங்கித் தின்கிறது. சொல—சொல்லேன்.

ரொ: இல்லை—எனக்கொன்று மில்லை—தீஸ்ப்.

தீஸ்ப்: உனக்கெந்தக் கவலையு மில்லையே? உண்மையைச் சொல்.

ரொ: இல்லை.

தீஸ்ப்: அப்படியானால் என் மேல் பொறாமையும் சந்தேகமும் கொண்டிருக்கிறாயோ?

ரோ: இல்லை.

தீஸ்ப்: எனக்கென்னவோ பயமாகவே இருக்கிறது ரொதோல்போ—நீ என் அண்ணன் அல்ல என்பது இங்கு யாருக்காவது தெரியுமா?—தெரிந்து விட்டால்...

ரோ: வேறு யாருக்கும் தெரியாது. அனாபெஸ்தோவுக்கு மட்டும் தெரியும்.

தீஸ்ப்: யார் உன் தோழனுக்கா

[அனாபெஸ்தோ வருகிறான்]

இதோ அவனும் வருகிறான். அவனோடு நீ சிறிது நேரம் பேசிக்கொண்டிரு (சிரித்துக் கொண்டே) அனாபெஸ்தோ ஐயா! இவர் வேறு எந்தப் பெண்ணோடும் பேசாது கவனித்துக் கொள்ளுங்கள்.

அனாபெஸ்தோ: (சிரித்துக் கொண்டே) உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்—நான் கவனித்துக் கொள்கிறேன்.

(தீஸ்ப் போகிறாள்)

காட்சி 3

ரொதோல்போ-அனாபெஸ்தோ-ஒமோதேய்: தூங்கிக் கொண்டே இருக்கிறான்.

அனாபெஸ்தோ:- (தீஸ்ப் போவதைப் பார்த்துக் கொண்டே) அடடா! என்ன அழகு! என்ன அழகு!! நீதானப்பா கொடுத்து வைத்தவன். அவள் உன்னைத் தன் உயிராகவல்லவா காதலிக்கிறாள்.

ரோ:- அனாபெஸ்தோ - உனக்கு உண்மை தெரியாது. ஏதோ கொடுத்து வைத்தவன் என்றெல்லாம் புகழ்கிறாய் — என்னை விட பாவி இந்த உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது. நான் அவளைக் காதலிக்கவில்லை......

அனா:- என்ன? என்ன சொல்கிறாய்!

ரோ:- (ஒமோதேய் தூங்குவதைப் பார்த்துக்கொண்டே) இது யார் இந்த மனிதன்?

அனா:- அட அவனா! அந்த இசை மீட்டுவோன் ஒமோதேய். அவனைத்தான் உனக்குத் தெரியுமே.

ரோ:- அந்த முண்டமா!

அனா:- அப்படியானால் நீ தீஸ்பைக் காதலிக்கவில்லை! விளையாடுகிறாயா? உண்மைதானா!

ரோ:- நான் தான் சொன்னேனே - நான் அவளைக் காதலிக்கவில்லையென்று. மீண்டும் மீண்டும் கேட்கிறாயே - விடு - அந்தப் பேச்சையே விட்டு விடு. அது எனக்குத் தொல்லையாக இருக்கிறது.

அனா:- தீஸ்ப்! தங்கசிலை அவள்.

ரோ:- உண்மை தான். தங்கச்சிலையென்பதென்ன - தாமரைப் பொய்கை - தன்னை மறந்து இசைக்கும் புள்ளிக்குயில்! மயில்! யாவும் பொருத்தம் தான். ஆனால் என் மனம் அவளை நாடவில்லையே. நான் அதற்கு என்ன செய்வது?

(தீஸ்ப் சிரித்துக் கொண்டே வருகிறாள். ரொதேல்போ சென்று விடாதே. இதே வருகிறேன். எனக்காகச்சிறிதுநேரம்காத்திரு. என்று சொல்லி விட்டு அவன் கன்னத்தைத் தட்டிவிட்டுச் செல்கிறாள்)

அனா:- (அவள் போவதைப் பார்த்துக் கொண்டே) பாவம்... தீஸ்ப் கொடுத்து வைக்காதவள்.

ரோ:- என் வாழ்க்கை இரகசியமானது... ஆம். அதை வேறு யாரிடம் சொல்லி என்ன பயன். என்னோடே மக்கட்டும்.

அனா:- ரொதோல்போ - நீ இன்று மிகக் கவலையாக இருக்கிறாய். என்றோ ஒரு நாள் அந்த

காட்சி 4

ரொதேல்போ - ஒமோதேய்

ஒமோதேய் ரொதேல்போவின்தோளில் கையை வைக்கிருன் - ரொதோல்

இரகசியத்தை உன் தோழனிடம் சொல்லுவாயல்லவா?

ரொ:- ஆம் - சொல்லுவேன் - இப்பொழுது என்னைத் தொந்திரவு செய்யாதே - விட்டுவிடு.

(அஞெபெஸ்தோ போகிருன். அங்கிருந்த நீண்ட இருக்கையில் உட்கார்ந்து தன் கைகளில் முகத்தை மறைத்துக் கொண்டு ஏதேதோ எண்ணமிடுகிருன் ரொதேல்போ. ஒமோதேய் கண்ணைத் திறந்து பார்க்கிருன் - மெல்ல எழுந்து ரொதேல்போவின் பின் சென்று நிற்கிருன்.)

போ திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறான்.

ஓமோ:- ரொமேதோல்போவா! உன் பெயர் ரொமேதோல்போ அல்ல அண்ணே உன் பெயர் ரொமோமோனா! பதுவை பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆண்ட பழைய குடும்பத்தைக் சேர்ந்தவன் நீ. ரொமேதோல்போ என்ற பொய் பெயரோடு, ஒவ்வொரு நகரமாகச் சுற்றித் திரிகிறாய் நீ. வேனீஸில் சில சமயங்கள் வந்து தங்குகிறாய். ஏழாண்டுகளுக்கு முன் வேனீஸில் அப்பொழுது உனக்கு வயது இருபது இருக்கும். மாதாகோவிலில் ஒரு அழகிய கன்னிப் பெண்ணைச் சந்தித்தாய். நீ அவளைத் தொடர்ந்து போகவில்லை. வேனீஸில் ஒரு பெண்ணைத் தொடர்ந்து செல்வது என்பது பிச்சுவாக்குத்தைத் தேடிச் செல்வதாகும். ஆனால் மாதாகோவிலுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தாய்— அந்தக் கன்னிப் பெண்ணும் கோவிலுக்கு வரத் தவறியது கிடையாது. உங்கள் உள்ளம் அங்கே கலந்தன. அவள் யார்? பெயர் என்ன? என்று தெரிந்து கொள்ளாமலே நீ அவளைக் காதலித்தாய். இன்றுவரையில் அவள் யார் என்பதே உனக்குத் தெரியாது' அதன் பெயர் கத்தேரினா என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய்—உனக்கு மட்டும் அவள் கத்தேரினா. இயற்பெயர் அவளுக்கு அதுவல்ல. கடிதம் எழுத வழி கிடைத்தது. எழுதினாய். அவளும் எழுதினாள். செசேலியா என்ற பெயருடைய ஒரு கிழவியின் வீட்டில் நீங்கள் சந்தித்தீர்கள். நீ அவளை உயிராகக் காதலித்தாய். அவள் தன் வாழ்வுக்கு நீ தான் உயிர் என்று எண்ணினாள், உண்மைக் காதல் உங்களிடையே உருப்பெற்றது. நீங்கள் ஒழுங்கு தவறி நடந்து கொள்ளவில்லை. பெருந்தன்மையோடே காதலித்தீர்கள். மாசு மறுவற்றே அவள் இருந்துவந்தாள். சந்திப்பால் எந்தக் களங்கமும் ஏற்படவில்லை. அவள் ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள், என்பதுமட்டும் உனக்குத் தெரியும். வேனீஸில் உள்ளூர்ப் பணக்காரனே ஒரு பணக்காரப் பெண்ணை மணந்து கொள்ள முடியும். அல்லது அவன் அரசனாக இருக்க வேண்டும்' நீ வேனீஸ் நாட்டானுமல்ல- அரசனுமல்ல - மணவாழ்க்கை உங்கள் இருவருக்கும் எட்டாக் கனியாக இருந்தது. அவள் வருவதை நிறுத்தி விட்டாள். அவளுக்குத் திருமணம் நடந்து விட்டது என்று கிழவி கூறினாள். மணந்தவன் யார்? அவள் பெற்றோர் யார்? என்பதை நீ அறிந்து கொள்ளமுடியவில்லை. எங்கெங்கோ தேடிப் பார்த்தாய். வேனீஸை விட்டு வெளியேறினாய். அவளை மறந்துவிட இத்தாலி முழுவதும் ஓடிப்பார்த்தாய். அவள் நினைவு உன்னைத் தொடர்ந்து கொண்டேயிருந்தது. உன் வாழ்க்கையை விளையாட்டில் - கேளிக்கையில் - களியாட்டத்தில் எப்படி எப்படியோ திருப்பிப் பார்த்தாய் - பயனற்றது உன் எண்ணம். வேறு பெண்கள் மீது கூட உன் பார்வையைத் திருப்பினாய். பெண்களிடத்திலே உறவாடிப் பார்த்தாய். அதுவும் பயனற்றதாகவே தோன்றியது. புதுக் காதல் ஏற்பட எற்பட பழையகாதல் நினைவே

மேலோங்கி மேலோங்கி உன்னைத் துன்புறுத்தியது. நீ இங்கு - பதுவுக்கு - அந்த . நடிகை தீஸ்ப்போடு வந்து மூன்று மாதமாகிறது. அவள் உன்னைத் தன் அண்ணன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். சர்வாதிகாரி ஆன்ழெலலோ தீஸ்பைக் கண்டதிலிருந்து மனதைப் பறிகொடுத்து அவள் மீதே நாட்டமாக இருக்கிறான். அதுமட்டுமா - இன்னும் சொல்லுகிறேன் கேள். பிப்ரவரித் திங்கள் பதினாறும் நாள் மாலை, முகத்தை மறைத்துக் கொண்டு ஒரு பெண் மொலினோ பாலத்தின் அருகில் உன்னைச் சந்தித்தாள். உன் முன்னோர்களால் இடித்துப் பாழாக்கப்பட்ட கோட்டையின் அருகில் உன்னை அழைத்துக் கொண்டு போனாள். அது மக்கள் நடமாட்டம் இல்லாத இடம். அங்கு ஒரு குடிசையிருந்தது. அந்தக் குடிசையில் வெனீஸ் காதலியை நீ சந்தித்தாய்; அன்று முதல் வாரத்திற்கு மூன்று தடவை அந்தக் குடிசையிலேயே உன் காதலை - உன் உயிரை - வெனீஸ் அழகுத் தேவதையைச் சந்தித்து வந்தாய். அவள் தன் குடும்பத்திற்கும் - ஒழுக்கத்திற்கும் - கணவனுக்கும் - தன் காதலுக்கும் இழுக்குத் தேடாத வகையில் நாணயமாக - தூய உள்ளத்தோடு சந்தித்து வந்தாள். இதுவரையில் அவள் யார் என்பதை உனக்குக் கூறியது கிடையது. அந்தப் பழைய கத்தேரினாகவே அவள் இருந்தாள். கடந்த திங்கள் உன்னுடைய இன்ப வாழ்வு குலைந்தது. குடிசைக்கு வருவதை நிறுத்திக் கொண்டாள் அவள். ஐந்து

வாரமாக நீ அவளைப் பார்க்கவே இல்லை. நீ அவளைத் தேடிக் கொண்டே இருக்கிறாய். அவள் கணவன் ஐயப்பட்டு அவளை வெளிக்கிளம்பாதவாறு ஏற்பாடு செய்து விட்டான். நீ தேடிக் கொண்டே இருக்கிறாய் - ஆனால் நீ அவளை இனிச் சந்திக்கவே முடியாது. எப்பொழுதும் நீ அவளைப் பார்க்கமுடியாது.

ரொ:- (அவனை ஊடுருவப் பார்த்து) யாரப்பா நீ?

ஓமோ:- வீணான கேள்வி. நானும் அதற்கெல்லாம் விடை கூற மாட்டேன். நீ இன்று அவளைப் பார்க்க விரும்புகிறாயா?

ரொ:- ஆம்! ஆம்! அவளை நான் பார்க்க விரும்புகிறேன். கடவுள் மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். நான் அவளை ஒரு விநாடி பார்த்தால் போதும் - இறப்பதைப் பற்றிக் கவலையில்லை எனக்கு!

ஓமோ:- சரி - ஆகட்டும் - நான் உன்னை அழைத்துப போகிறேன்.

ரொ:- எங்கே?

ஓமோ:- அவள் வீட்டிற்கு. உன் காதலி வீட்டிற்கு.

ரோ:- அவள் யார்? பெயர் என்ன? சொல். சொல்லப்பா.

ஓமோ:- அவள் வீட்டிற்குப் போன பிறகு சொல்லுகிறேன்.

ரோ:- நீ கடவுள் மாதிரி வந்தாய்.

ஓமோ:- அது கிடக்கட்டும். இன்று மாலை - நிலவு எழுந்தவுடன் - பன்னிரெண்டு மணிக்கு சாந்தோ உயிர்பானோ தெருவிலிருக்கிற கோட்டையருகில் இரு. நான் அங்கு இருப்பேன். உன்னை அழைத்துப் போகிறேன். சரியாக பன்னிரெண்டு மணிக்குத் தெரிகிறதா?

ரோ:- நன்றி - நீ யாரென்று கூடச் சொல்ல மாட்டாயா?

ஓமோ:- நானு - நான் ஒரு முண்டம்.

(போகிருன்)

ரோ:- (தனியாக நின்று கொண்டே) யார் இந்த மனிதன் யாராக இருக்கக்கூடும். நமக்கென்ன அதைப் பற்றி - பன்னிரெண்டு மணி - இரவு பன்னிரெண்டு மணி இன்னும் எவ்வளவோ நேரம் இருக்கிறதே. கத்தேரினு! அவன் குறிப்பிட்ட அந்தப் பன்னிரெண்டு மணிக்காக என் உயிரைக் கூடத் தருவேனே.

(தீஸ்ப் வருகிருள்)

காட்சி 5

ரொதோல்போ - தீஸ்ப்

தீஸ்ப்:- நான் தான் ரொதோல் போ-வேறுயாருமில்லை. உன்னைப் பார்க்காமல் நீண்ட நேரம் என்னுல் இருக்க முடியவில்லை. உன்னை எங்கும் நான்தொடருகிறேன். எப்பொழுதும் உன்னையே நினைக்கிறேன். உன்னையே பார்க்கிறேன். நான் உன் உடலின் நிழல் - நீ என் உயிர்.

ரொ:- விழியாய் இரு - தீஸ்ப்! எங்கள் குடும்பம் ஒரு கொலைகாரக் குடும்பம். எங்களுக்குச் சாபக் கட்டளை போல இருக்கிறது பாட்டன் - மகன் - பேரன் வாயிலாக எங்களையும் அறியாமல் அந்தச் சாபம் நிறைவேறி வருகிறது. எங்களை யார் காதலிக்கிருர்களோ அவர்களை நாங்கள் கொன்றுவிடுவோம்.

தீஸ்ப்:- என்னைக் காதலிப்பதாக மட்டும் சொல். அது போதும் - பிறகு நீ என்னைக் கொல்லலாம். தடையில்லை - உன் கையால் இறப்பது உண்மையில் எனக்கு மகிழ்ச்சியே.

ரொ:- தீஸ்ப்......

தீஸ்ப்:- ஒரு வார்த்தை... என்னைக் காதலிப்பதாகச் சொல்.

ரொ:- தீஸ்ப்...நீ ஒரு அழகுக் தேவதை.

(அவள் கையைப் பிடித்து முத்தமிடுகிருன்-மெல்லப் போகிருன்)

தீஸ்ப்:- (தனியாக) ரொதோல்போ! போவதைப் பார்! ஏன் என்னை விட்டுப் போகிருன்? என்ன கவலை அவன் மனதிலிருக்கிறதோ - தெரியவில்லையே! (நீள் இருக்கை பக்கம் பார்த்துக் கொண்டே) ஓமோதேய் விழித்துக் கொண்டாயா?

(ஓமோதேய் அரங்கிற்குளழுந்து வருகிருன்)

—தொடரும்

அக்கினிக் கோபம்

பதினொன்றாம் அத்தியாயம்

சூர்யகாந்தன்

மஞ்சள் வெயில் தரங்கிணியின் மலர் மேனியைத் தடவிக் கொண்டிருந்தது. மாலை வேளையில் 'கம்'மென்று மணம் தரும் சோலை வனத்திலமர்ந்து, காதல் சொப்பனம் கண்டிருந்த சுந்தர முகத்தாள், ஏனோ ரசிப்புத்தன்மைக்கு விரோதியாகிக் கிடந்தாள். அவளை, மாலையோ, அதை வரவழைத்த மஞ்சள் நிறச் சூரியனோ, அவனைக் கண்டு அந்திக் கீதம் பாடும் இயற்கை ஜாலங்களோ, ரசிக்க வைக்க முடியவில்லை. திராட்சை ரசத்தால் போதை காண்பவன், மாம்பழச் சாற்றிலா மனத்தைச் செலுத்துவான்; திருப்தியுமடைவான்? தங்கப் பதுமை போல் காட்சியளித்து கொண்டிருந்த தரங்கிணியும் அப்படித்தான். சாரங்கனின் போதையில் மூழ்கிக் கிடந்ததால், சராசரங்களை ரசிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

எங்கோ புள்ளிக்குயில் தன் காதலியை அழைக்கும் இனிய நாதம் காற்றில் மிதந்து வந்தது. அக்குரல் தரங்கிணியின் தன்னை மறந்த காதுகளில் விழவில்லை. ஆனால், குயில் குரலினூடே இழைந்து வந்த தேன் குரலை மட்டும் அவள் காதுகள் எப்படிச் சுவைத்து விட்டனவோ? ஆம். அந்தக் குரல் அவளுக்குப் பழக்கமான சங்கீதக் குரல்.

சாரங்கனின் அந்தக் குரலில் மிதந்து வந்த வார்த்தைகளை உற்றுக் கேட்டாள் ஒண்டொடியாள் தரங்கிணி. அக்குரலில்மிதந்து வந்த பாடல் இது

கோவி.மணிசேகரன்

தான்:

"உயிர்க் கவிச் சித்திரம் உலக
வெண் திரையில்
உயர் தமிழ் வண்ணத்தால்
உன்னதமாய்த் தீட்டி,
குயிற் குரல் தனைப்பெற்று
குவலயத்தோர் கேட்கக்
கூவுகிறன் மக்கள் குகைமனம்
ஒளிபெற—"

சாரங்கன் பாடிய இந்த முடிப்பை (சரணத்தை)க் கேட்டதும், "ஈதென்ன புதுப் பாடலாக இருக்கிறதே! இதுவரை நாம் கேட்காத பாடலைப் பாடுகிறரே" என்று மனத்துள் எண்ணவே, எடுப்பை (பல்லவியை) உற்றுக் கவனித்தாள். அப்போதுதான், "பாடுகிறன் நம்முள் பாவரசன் வள்ளுவன்" என்று எடுப்பைப் பாடி முடித்தான்.

"ஆஹா! என்ன அருமையான பதசயம்! 'குயிற் குரல்தனைப் பெற்று'—அவன் பெற்றுப் பாடாவிட்டாலும், மக்கள் மனத்துள் பாடுகிறன் என்பதற்காகவே, அந்தக் குரலை குயில் குரலாக்கி விட்டதா, இந்தத் தேன் குரல் திருவுருவம்? வள்ளுவன்—வாயாரப் பாட வேண்டிய வண்டமிழ்த் தாயின் செல்வப் புதல்வன்! அவன்மீது எத்தனை அக்கறையுடன் பாடலியற்றி காம்போதியில் கான முழக்குகிறர்!" என்று தன்னுள் எண்ணிக் கொண்டதும் இன்ப உணர்

ச்சி தரங்கிணியின் கண்களை மூடின. மூடிய கண்கள் மீண்டும் திறக்க எத்தனை நேரம் பிடித்ததோ?, ஆசை ஒரு போதை தானே? அந்தப் போதையில் மயங்கிய தரங்கிணிக்கு நேரத்தைக் குறித்துத் தெரிந்துகொள்ள நேரமேது?

பின்னே யாரோ வந்து தன் கண்களைப் பொத்துவதுபோன்ற உணர்ச்சி எழவே, மயக்கத்திலிருந்து விடுபட்டாள் மங்கை தரங்கிணி. அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஆணழகன் சாரங்கன் அன்பு தவழும் பார்வையுடன் நின்றுகொண்டிருந்தான். அவன் இமைகள் ஏனோ அசைய மறுத்தன. அவைகளைக் கண்ட தரங்கிணியின் இமைகள் மட்டும், வழக்கத்திற்கு மாறாகப் 'படபட'வென்று அடித்துக் கொண்டன, ஆச்சரியத்தின் காரணமாக. சாரங்கன் அழகைத் தரங்கிணி அள்ளி அள்ளிப் பருகினாள். சாரங்கனும் வடிக்காத சிலை ரூபியின் வண்ணத்தை நாவற்ற கண்களால் சுவைக்கத் தொடங்கினான், சில நாழிகைகள்வரை இப்படி மரண அமைதியைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்போது இரு பொன் சிட்டுகள் அவர்களுக்குக் குறுக்கே பறந்து செல்லவே, வீணே நேரத்தை விரையமாக்கி இருக்கிறோம் என்று எண்ணித் தங்களைப் புரிந்துகொண்டார்கள்,

"தரங்கிணி. என் தங்கமே, எத்தனை நேரம் இப்படி ஏக்கமுடன் காத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று சாரங்கன் தன் பேச்சைத் துவங்கினான். அவன் வார்த்தைகள் கரும்புச் சாறில் துவைத்தெடுத்து ஊட்டுவன போலிருந்தன தரங்கிணிக்கு. அவளும், தன் மெல்லிதழ்களை இலேசாக விரித்து முத்துப் பற்களில் காதலனின் முகம் காணத் தூண்டினாள்!

"ஏன் கண்ணே சிரிக்கிறாய்? என் கேள்விக்கு—"

"'விடை சொல்ல வேண்டுமா, விளங்கிக் கொள்ளக்கூடிய இந்த விஷயத்திற்கு'—என்று எண்ணும்போது என்னால் சிரிப்பதைத் தவிரச் சிந்திக்கவா கண்ணாளா, முடியும்?"

"ஜீவனே! சிங்காரச் சொற்களை எப்படித்தான் செதுக்கி வைத்திருக்கிறாயோ, உன் செவ்வாயுள்! சில சமயங்களில் கவிஞனும் பேச முடியாத கதை பேசுகிறாய்; மற்றும் சில சமயங்களில் காதலர் காண முடியாத பாஷையையும் கண்டு வைத்திருக்கிறாய்—கற்பிக்கவும் செய்கி

ருய்! கற்கண்டு மொழிபேசும் கண்மணி! பூச்செண்டு போன்ற உன் பொன்னுடலைத் தொடும் போதெல்லாம் பூரிப்பு என்னைப் போதையில் ஆழ்த்துகிறது!"

"எனக்கு மட்டும் அப்படி இல்லையா, என்னுயிரே?"

"இல்லையென்று யார் சொன்னது இன்பமே! இயற்கை ஜாலங்களைக் காணும் தோறும், உன் இன்முகத்தைக் காணுகின்றேன்! இசையில் மூழ்கித் திளைக்கும்போது, உன் இனிய குரலைக் கேட்கிறேன்! பன்னிரண்டு சுரங்களிலும், பாவையே, உன் பனிப் பார்வையும், பலாச்சுளைப் பேச்சும், பால்வண்ண முகமும் தோன்றித் தோன்றி மறைகின்றன! நேற்று நீலாம்பரி பாடும் போது, நீள் விழியே, நிதான மிழந்தேன்—ஆனால் நித்திரை வரவில்லை! காகலி நிடாதத்தைக் கையாண்டு கைசிகிக்கு வரும் போது, பேதலிக்கும் சுரமாகிப் பெரிதும் துன்பப்பட்டேன்! தரங்கிணி! என் தங்கமே!! என்னுள் நீ வாழ்கிறாய்—"

"உம்முள் நான் வாழ்கிறேன்! உத்தமரே! காதல் சில சமயங்களில் கற்பனைக்கு முகஸ்துதி பேசும்; கண்களுக்கு மயக்கமூட்டும்; கருத்திற்குக் கள்ளூட்டும்! அப்படி இல்லையே அன்பே—"

"என் பேச்சு என்கிறாயா, எந்திழையே? எந்த நேரத்திலும் எட்டி கசக்கும், இலந்தை புளிக்கும், ஆனால் இனிப்பைத் தருவது-மா, பலா, வாழை என்பதை மறவாமல் தான் பேசுவேன் மாணிக்கமே! மயக்கம் இது விஷயத்தில், மனிதனை அடிமைப்படுத்துகிறதென்றால், அது உண்மைக் காதலில்லை உயிரே, உருமாறச் செய்யும் காமம், காமம்! நாம் காமத்திற்காகக் காதலிக்கவில்லை. கலை! இசையிலே நீ இசைந்தாய்; நாட்டியத்தை நான் நாடினேன்; இருவருமே ஒன்றில் ஆழ்ந்தோமென்றால், அது கலை, கலை, கலை கண்ணே, வாழ்வைத் தித்திக்கச் செய்யும் கலை!"

"கலை, கடவுள் தன்மை பொருந்தியதென்கிறார்களே அறிஞர்கள்...நீர் ஏன் வேறு பொருளில் பேசுகிறீர்?"

"நான் மனிதன். அறிஞன் என்ற பட்டயத்தை விரும்பாதவன். எனவேதான் மனிதத் தன்மையில் செங்கோல் செலுத்துவது கலையென்கிறேன். மனிதன், மனிதனாக இருக்கும்போது தான் கண்ணே, மகத்தான எண்ணங்களை மண்டியிடச் செய்கிறான். அவனை மகானாக்கி, அறிஞனாக்கி, வழங்கப்படும் பட்டயத்திற்குப் பிறகுதான் அறிவைப் பணயம் வைத்து விடுகிறான், ஆராயும் தன்மை அகங்காரத்திற்குப் பலியாவதால்! அவன் அந்தச் சமயம் எதைச் சொன்னாலும் அது பொன்மொழியாகப் புலப்படுகிறது பொதுமக்களுக்கு. அப்படிப் புறப்பட்ட வாக்கியங்களில் ஒன்றுதான் "கலை கடவுள் தன்மை" புரிகிறதா பூங்கொடியே?"

"இசை ஞானி பேசும் தத்துவத்தைப் புரிந்துகொள்ள, கண்ணாளா, இன்னும் நான் அனுபவத்தின் பொன்னான கரங்களுக்கு ஆளாகவில்லை!"

"அது சரி தரங்கிணி! சந்திரனை எதிர் நோக்கும் நேரத்தில் சூரியனுக்கு இரங்கற்பா பாடு

கிறோம்! வா, கண்ணே, இன்பத்தின், மொழியற்ற இலக்கியங்களைச் சிருஷ்டிக்கலாம்!"

சாரங்கன் இதைக் கூறியதும், தரங்கிணி அவன்மேல் சாய்ந்தாள் அவள் உடலெங்கும் ஏதோ ஒரு தாக்குதல் ஏற்பட்டதுபோல் தென்பட்டது. சாரங்கனும் தன் தாளம் தட்டும் தளிர்க் கரங்களால் தழுவினான். அந்தத் தழுவுதலில் இருவரும் தங்களை மறக்க ஆயத்தமானார்கள். அப்போது......

"சாரங்கா" என்ற குரல் கேட்கவே, இருவரும் தங்களை விடுவித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தனர். புதிய உருவம் ஒன்று அவர்களை எதிர் நோக்கி வந்து கொண்டிருந்தது.

எதிர் நோக்கி வரும் உருவத்தைக் கண்ட இருவருமே பயந்தேபோய் விட்டனர். ஆம், வந்த உருவம் பார்க்கக் கொஞ்சம் பயங்கரமாகத்தானிருந்தது.

நல்ல உயரம்; உயரத்திற்கேற்ற கம்பீரம் தலையில் அணிந்திருந்த தலைப்பாகை தட்சிண தேசத்துக் குடி மக்களை ஞாபகப் படுத்தியது. நிமிர்ந்து வளைந்த மீசையை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது. அந்த மீசைக்கு நடுவே நீண்ட மூக்கு. மூக்கிற்கு மூத்தாப்பு வைத்தது போலமைந்த கண்களிரண்டையும் நோக்கும்போது, நினைத்ததைச் சாதிக்கும் நிதானம் அவைகளிடமிருப்பதுபோல் காணப்பட்டன.

கால்களிலும், கைகளிலும் அணிந்திருந்த அந்தக் காப்புகள் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களுக்குக் கொஞ்சம் மாறுதலைக் காட்டின.

உங்களுக்குத் தெரியுமா?

1. நடப்பு வருஷத்தில் கோதுமையும் பார்லியும் பயிராகிவரும் பிரதேசத்தின் மொத்த விஸ்தீரணம் 195 -54-ல் இருந்ததைக் காட்டிலும் அதிகமா? குறைவா? எவ்வளவு?

(அ) சுமார் 2 சதவிகிதம் குறைவு
(ஆ) சுமார் 6 சதவிகிதம் அதிகம்
(இ) சுமார் 10 சதவிகிதம் அதிகம்

2. திட்டகமிஷன், ராஜ்ய சர்க்கார்களுக்குச் சமீபத்தில் அனுப்பியுள்ள கடிதத்தில், கிராம அபிவிருத்திக்காக நிர்ணயித்துள்ள புதிய இலக்கு என்ன?

(அ) பத்து வருஷ காலத்தில் உற்பத்தியை இருமடங்காக் பெருக்குவது
(ஆ) பதினைந்து வருஷ காலத்தில் உற்பத்தியை இருமடங்காகப் பெருக்குவது
(இ) பதினைந்து வருஷ காலத்தில் உற்பத்தியை மும்மடங்காகப் பெருக்குவது

3. இந்தியாவின் கால் நடைகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

(அ) சுமார் 15. 5 கோடி
(ஆ) உலகத்தின் கால் நடைகளில் சுமார் நாலில் ஒரு பங்கு
(இ) 20. 0 கோடி

4. இந்தியாவில் 1954-ம் ஆண்டில் உற்பத்தியான இரும்பின் மொத்த அளவு என்ன?

(அ) 50,000 மணங்கு
(ஆ) 75,000 மணங்கு
(இ) 1,00,000 மணங்கு

5. 1955-ம் ஆண்டில், புதுச்சேரி ராஜ்யத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு மொத்தம் எவ்வளவு செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது?

(அ) 50 லட்ச ரூபாய்
(ஆ) 75 லட்ச ரூபாய்
(இ) 80 லட்ச ரூபாய்

சரியான விடைகள்: 1-(இ); 2-(அ); 3-(அ, ஆ இரண்டும் சரி); 4-(இ); 5-(ஆ);

"என்னப்பா சாரங்கா! எப்படி இருக்கிறாய்? எங்களை எல்லாம் இப்போது அடியோடு மறந்துவிட்டாய் என்று எண்ணுகிறேன்!"—இது அந்த மாற்றுருவத்தின் கேள்வி.

சாரங்கன் தன் பெயரைத் தெரிந்து கொண்டிருக்கும் இந்த மனிதன் யாராக இருக்க முடியும் என்ற சிந்தனையிலாழ்ந்தானே யொழிய, பதிலைச் சொன்னானில்லை. தரங்கிணியும் 'திரு திரு'வென விழித்தாள். அவளின் விழிப்பைக் கண்ட அந்த உருவம், "ஏம்மா தரங்கிணி! நீ கூடவா என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை" என்றது. தரங்கிணிக்கும் இப்போது தருமசங்கடமாய் விட்டது. 'யார் இந்த உருவம்' என்ற கேள்வி, இருவர் மனத்திலும் வலுத்தது.

அந்த உருவம் சிரித்துக் கொண்டே சாரங்கனின் வலத் தோளைத் தட்டியது. சாரங்கன உண்மையில் அதிர்ச்சி கண்டவன் போல்தான் விழித்தான். அவன் விழிப்பு தரங்கிணிக்கு ஏதோபோல் இருக்கவே, கோபம் இலேசாக அவளைத் தடவச் செய்தது.

இசைக் கலைஞர்கள் பெரும்பாலோர், முரட்டுத்தன்மைக்குப் பகைவர்களாகத்தானிருக்கிறார்கள். ஒருவேளை, இசை மென்மையானதாக இருப்பதால், அதையண்டுபவர்களும் மென்மைத்தன்மைக்கு நண்பர்களாய் விடுகின்றனர் போலும்.

"யாரய்யா நீர்? இப்படி முன்பின் தெரிந்துகொள்ளாமல் தோளைத் தட்டி நகையாடுவது?" என்றாள் தரங்கிணி, கோபத்தின் சுடுவிரல்கள் தன்னைத் தொட்ட காரணத்தால்.

அந்த உருவம் சிரித்தது. அந்தச் சிரிப்பில் பயங்கரமில்லை. ஆனால், குறும்புத்தனம் குடி கொண்டிருந்தது.

"சாரங்கா என்னை நன்றாக உற்றுப்பார்!"—உருவம் மீண்டும் கூறியது. சாரங்கன் உற்றுக் கவனித்தன் என்றாலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

"உன் பெயரென்ன?"-சாரங்கன் மெல்லிய குரலில் கேட்டான். அவன் இருந்த அந்தத் தனிமையின் காரணமாக, குரல் இலேசாக நடுங்கத் தொடங்கியது.

"என் பெயர்?"—உருவம் ஏன் தானோ இப்போதும் சிரித்தது. சாரங்கனையும், தரங்கிணியையும் மாறி மாறி நோக்கியது. "என் பெயரையா கேட்டாய் சாரங்கா? சொல்லுகிறேன் கேள்...! நான்...நான்... சூர்யகாந்தன்...! புரிகிறதா?" என்று அந்த உருவம் கூறவே, சாரங்கன் ஒன்றும் புரியாமல் "இப்படி ஒரு பெயரை நான் சந்தித்ததே கிடையாதே...!" என்றான். அதற்குள் தரங்கிணி, "ஏன் சந்தித்ததில்லை? சென்ற வாரம் கூட ஆசிரியர் 'சூர்யகாந்தம்' இராகத்தை ஆளத்தி செய்து காட்டிப் புதிய பாடலொன்றிற்கு இசையமைத்தபோது அப் பெயரைச் சந்திக்கவில்லையா?" என்றாள் கோபமாக. அவள் கோபம் அந்த உருவம்—சூர்ய காந்தனுக்குச் சிரிப்பைக் கொண்டு வந்து விட்டது. சாரங்கன் மட்டும்பெரு மூச்சுக்கு ஆளாகி நின்றுகொண்

டிரு..ன். அவன் நிலைமையை யுண..ந்த சூர்யகாந்தன், "சாரங்கா! தரங்கிணி, என்னை நன்ரு க.. பாருங்கள்" என்று கூறி விட்டு, தலைப்பாகையைக் கழற்றி ஞன். என்ன வியப்பு! சாரங்கனும், தரங்கிணியும், "ஆ...! நீங்களா!" என்ருர்கள். சூர்யகாந்தனும், சிரித்துக் கொண்டே, "ஆம், நான்தான். சோணுடு செல்கிறேன். திரும்பும் வரை நீங்கள் கவனக் குறைவில்லாமல் இருக்க வேண்டும்" என்று கூறினுன். சாரங்கன் முகத்தில் ஏதோ சிந்தனை ரேகைப் படர்ந்திருந்ததாகத் தெரிந்தது. குறிப்பாலுணர்ந்து கொண்ட சூர்யகாந்தன், "ஏன் சாரங்கா! வெளிநாட்டு இசைப் போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்திருக்கிருயே, அதற்காகத்தானே யோசிக்கிருய்?" என்ருன். சாரங்கனும் பெருமூச்சுடன் தலையசைத்தான். "கவலைப்படாதே! என் முயற்சி வெற்றி பெற்றதும், அடுத்து உன் முயற்சிக்கு என் பங்குதான்!" என்று கூறி விட்டு, தரங்கிணியை நோக்கிஞன் சூர்யகாந்தன்.

தரங்கிணியை நாணம் இப்போது தழுவிக் கொண்டிருந்தது. அவள் தரையை நோக்கியவளாயிருந்தாள். அவளை அன்புப் பார்வையில் நோக்கிய சூர்யகாந்தன், "தரங்கிணி! என் சகோதரி! நான் சாரங்கனேடுசில விஷயம் பேச வேண்டும். நீ வீடு செல்கிருயா?" என்று கனிவாகக் கூறிஞன். அவளும் தலையசைத்து விட்டுத் தன் காதலனை நோக்கினுள். சாரங்கன் அவள் தாடையை இலேசாக வருடிவிட்டு, சூர்யகாந்தனேடு ..ந்தான்.

சூர்யகாந்தனும், சாரங்கனும் கொஞ்சம் தூரம் சென்றதும், 'கோ' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

தரங்கிணியை ஒரு உருவம் பலாத்காரத்தில் தூக்கிச் செல்ல முயற்சித்துக் கொண்டிருந்தது. அதற்குள் எதிரே இருந்து மற்ெருரு உருவம் ஓடி வந்து தரங்கிணியைக் காப்பாற்ற முயற்சித்தது. இந்தக் கோரக் காட்சியைக் கண்ட சூர்யகாந்தன், உருவிய வாளோடு ஓடிவந்தான்.

(தொடரும்)

பெரிய அதிசயம்

மரணத்தின் கடைசி மூச்சில் ஊசலாடிக்கொண் டிருந்த வக்கீல் ஒருவர், தன் பக்கத்திலமர்ந்திருந்த நண்பரைப் பரிதாபமாக நோக்கினுர். அவர் நண்பர், தனது நண்பரின் பரிதாப நோக்குதலைக் கண்டு, "தாங்கள் இறந்ததற்குப் பினுல், என்னுல் ஏதாகிலும் செய்ய வேண்டியதிருக்கிறதா?" என்று கேட்டார். என்று கேட்டார். அதற்கு வக்கீல், நான் இறந்ததும், கல்லறையில், 'ஒரு யோக்யமான வக்கில்' என்று பொறித்து விடவும்" என்ருர். நண்பர், "ஏன் உம் பெயரைக் குறிப்பிட வேண்டாமா?" என்ருர்.

"அது தேவையில்லை. அப்படிப் போட்டால், வழியே போகிறவர்கள், இது ஒரு பெரிய அதிசயம்தான் என்று கேலி செய்வார்கள்" என்று கூறி முடித்தார்.

—ஃபார்மர்ஸ் வீக்லி.

குந்தவை

மாதவி

இலக்கியப் பெயர்களை வைத்துக் கொள்ள ஆசைப்படும் இக்காலத்தில், பெண்கள் கூட தம் பெயர்களை லட்சுமி, சரஸ்வதி, நாராயணி, பூராயணி என்று வைத்துக் கொள்வதை விட, ஔவை, மங்கையர்க்கரசி, கோப்பெருந்தேவி, பூங்கோதை இப்படி தனித்தமிழ்ப் பெயர்களை வைத்துக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள். இதனால் உண்மையிலேயே, தமிழ் மொழிக்குச் சிறப்பு அமைகிறது — இனி அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

குந்தவையும் அப்படித்தான் தன் ஒரிஜனல் பெயரான மகேஸ்வரி என்பதை மாற்றிக் கொண்டு, 'குந்தவை' என்று வைத்துக் கொண்டாள். அவளுக்கு 'குந்தவை' என்ற பெயரில் தான் என்ன சுவை கண்டாளோ?

குந்தவைக்கு நாவல் படிப்பதென்றால் மிகுந்த ஆசை. அதன் காரணமாக, பிளாட்பாரத்திற்கு வரும் நாவல் புத்தகங்களிலிருந்து, பீரோவில் அடுக்கி வைக்கவேண்டிய நாவல்வரைப் படித்துமுடிப்பாள்.

ஒரு தினம் ஏதோ ஒரு நாவல் வாங்குவதற்காக ஒரு பதிப்பகத்திற்குச் சென்றாள். கையிலே பணப்பை; உடலிலே மஸ்லின் சேலை; காலர் வைத்த சோளி; நீண்டு அடர்ந்த பின்னலில் செறுகிய ஒரு ரோஜா இவைகள்தாம் குந்தவையை அலங்கரித்த பொருட்கள். குந்தவை பார்க்க வசீகரிக்கும் அளவில் காட்சியளித்தாள்.

பதிப்பகத்துள் நுழைந்த குந்தவை, ஒருவருமில்லாமையைக் கண்டு, உள்ளே சென்று புத்தக பீரோக்களைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தாள். அவளுக்கு வேண்டிய புத்தகம் ஏதாவது கிடைக்குமா என்று துருவித் துருவிப் பார்த்தாள். அப்போது, உள்ளேயிருந்து ஒரு வாலிபன் வந்தான்.

வாலிபன் பதிப்பகத்தின் மேற்பார்வையாளன்; கொஞ்சம் பார்ப்பதற்கும் அழகாக இருப்பான்.

நாகரீகப் பாணியில் வந்து நின்ற குந்தவையைக் கண்ட வாலிபன், ஒன்றும் பேசாமல் கவனிக்கத் தொடங்கினான். குந்தவை, அலட்சியமாக புத்தகங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் அடிக்கொருமுறை அடுக்கி வைத்திருந்த புத்தகங்களைக் கலைத்து, பிரித்துப்பிரித்துப் பார்ப்பது, அந்த வாலிபனுக்குக் கோபம் கொஞ்சம் வரத்தான் செய்தது. "வேண்டுமென்கிற புத்தகத்தைக் கேட்டால், எடுத்துத் தருகிறோம். இதற்காக இந்தப் பெண் ஏன் கலைக்க வேண்டும், என்னமோ, இவள் அப்பன் வீட்டுப் பதிப்பகம் போல!" என்று மனத்துள் எண்ணினான்.



மனைவி: இந்தக் குதிரைகளெல்லாம் ஏனிப்படி ஓடி வருகின்றன?

கணவன்: முதலில் வந்து சேரும் குதிரைக்கு வெள்ளிக் கோப்பை பரிசாகக் கிடைக்கும் அதற்காகத்தான்.

மனைவி: மற்றக் குதிரைகளுக்கு என்ன கிடைக்கும்?

கணவன்: ஒன்றும் கிடைக்காது.

மனைவி: பின் அவைகளெல்லாம் ஏன் வீணாக ஓடுகின்றன?

'டைவெல்ட் வோச்' ஜூரிக்.

"புத்தகத்தை அப்படிக் கலைக்க வேண்டாம்மா!" என்றான் எரிச்சலோடு. குந்தவை மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அலட்சியம் எட்டிப் பார்த்ததாகத் தெரிந்தது. மெல்ல அருகே வந்து, ஒரு சோபாவைப் பிடித்துக் கொண்டு வாலிபனை ஒரு முறை நோக்கினாள். அந்த நோக்கல் "நான் ஒரு புத்தகப் புழு" என்று சொல்வது போலிருந்தது.

வாலிபனும் மீண்டும், "நீர் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்றான், ஒருவேளை பெரிய

இட்த்துப் பெண்ணே என்ற பயத்தால்!

குந்தவையும், மெல்ல 'குந்தவை' என்றாள். வாலிபனுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. "என்ன சொன்னீர்" என்றான், "குந்த வை" என்றாள், மீண்டும்.

வாலிபன் சுற்றும் முற்றும் பார்த்தான்; அங்கு ஒருவரையும் காணவில்லை. 'இவளுக்கு எத்தனை திமிர் இருந்தால், பக்கத்தில் சோபாவிருந்தும், 'குந்த வை' என்று தைரியமாகச் சொல்லுவாள்? கொஞ்சம் வெறி பிடித்தவள் போல் தான் தெரிகிறது' என்று உள்ளூர எண்ணிக்கொண்டு துணிந்தவனாய், தன் கரங்களை அவள் தோளங்களின் மீது ஊன்றி, சோபாவில் குந்தவைத்தான்.

குந்தவைக்குக் கோபம் கூத்தாடத் தொடங்கி விடவே, ஓங்கிக் கன்னத்தில் அறைந்து, "எத்தனைத் திமிரடா உனக்கு" என்றாள்.

வாலிபனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தாடையைத் தன் வலக் கரத்தால் தடவிக் கொண்டே, "நீ தானே குந்தவை என்றாய்" என்றான், முகம் சிவந்தவனாய்.

"படித்த முட்டாளே! குந்த வை, என்று என் பெயரைச் சொன்னேனே யொழிய, குந்தவைக்கவா சொன்னேன்? வரட்டும் முதலாளி, சொல்லிப் பார்க்கிறேன்" என்று மிரட்டி உறுமினாள்.

"பெயரென்று இப்போதுதான் புரிகிறது. உண்மையிலேயே நீர் குந்தவைக்கத்தான் சொன்னீர் என்றுதமாஷாகக் கருதி, உம்மைக் குந்தவைத்து விட்டேன். மன்னிக்கவும். முதலாளியிடம் சொல்லி விடாதீர். வேண்டுமானால், மற்றொரு கன்னத்தைத் தருகிறேன்" என்று பரிதாபமாகச் சொன்னான், தனிமையிலிருந்த பெண்ணால் முன்யோசனை யிழந்த அந்த வாலிபன்.

அவளும் பரிதாபத்திற்குரிய அந்த வாலிபனை எண்ணி, "உன் பெயரென்ன?" என்றாள். அவனும், "வேஷசாத்திரி சர்மா" என்றான். குந்தவைக்குச் சிரிப்பு ஒருபக்கம், வெறுப்பு ஒருபக்கம் எழவே, "உன் பெயருக்கேற்ற புத்திதான்" என்று கூறிவிட்டு, எதிரே பீரோவிலிருந்த "சோழநாட்டு வரலாறு" என்ற புத்தகத்தை எடுத்து அவன் முன்னால் போட்டு விட்டுச் சென்றாள். வாலிபனும் வெறித்த கண்களோடு, புத்தகத்தைப் பிரித்துப்பார்த்தான். அதிலே, 'குந்தவை' என்ற வார்த்தைகள் அவன் கண்களிக்குத் தெரிந்தது.

பிடில் ரசிகர்கள்

சுண்டெலிகளுக்குப் பிடில் சங்கீதம் என்றால் மிகவும் பிடிக்குமென்று பலர் சொல்லுகிறார்கள். அதைமெய்ப் பிக்கும்சம்பவமொன்று மேலை நாட்டில் ஒரு பிரபல பிடில் வித்வான் வாழ்க்கையில் நிகழ்ந்தது.

பாகனி என்பவர் மேலை நாட்டிலே ஒரு பிரபல சங்கீத வித்வான். அவருக்கு இருட்டில் பிடில் வாசிப்பதென்றால் மிகவும் பிடிக்கும்.

ஒரு தினம் இரவு பிடிலை எடுத்துக் கொண்டு இருட்டறையில் ரசித்த வண்ணமாக வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் தன்னை மறந்திருந்தார். காலில் ஏதோ குதிப்பது போலிருக்கவே, உடனே விளக்கைப் போட்டுப் பார்த்தார். ஏராளமான சுண்டெலிகள் கூடிக் இருந்தனவாம்.

—வெர்டென் காங்க, ஒஸ்லோ.

அது ஒரு பொல்லாத ஆபீஸ்.

அந்த ஆபீஸ் சட்டங்களுக்குள்ளே, எந்த இதயமும் அடங்காது; அவ்வளவு நுணுக்கமான அறிவுடன் தயார் செய்யப்பட்டவை!

ஆபீஸ் வேலை நேரம் காலை மணி பத்திலிருந்து ஆரம்பம். இரண்டே இரண்டு நிமிஷங்கள் தாமதமாக மேனேஜரே வந்தாலும் சரி, அன்றே, அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவார். அப்பேர்ப்பட்ட ஆபீஸில்தான், நான் ஒரு அற்பமான குமாஸ்தா.

அன்று...?

வீட்டிலேயே தாமதமாகி விட்டது. அவசர அவசரமாக ஓடி ஓடி வந்து, மவுண்ட்ரோடு பஸ் ஸ்டாப்பிங்கில் நின்றேன். என் ஆபீஸ் பக்கம் போகும் 11-ம் நம்பர் மாம்பலம் பஸ்ஸை ஒவ்வொரு விநாடியும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன்.

பஸ் வரவே இல்லை; எல்லா நம்பர் பஸ்களும் வருகின்றன. எனக்குத் தேவைப்படும் அந்த 11-ம் நம்பரை மாத்திரம் காணோம்.

துடித்துக் கொண்டு நின்றேன்.

மணியோ 9-55-ஆகி விட்டது. வேலை போய் விட்டால், அப்புறம், ஒரு நல்ல கோரஸ் பாடலைத் தயார் செய்து கொண்டு, குடும்பத்துடன் கிளம்பிவிட வேண்டியது தான், பிச்சை எடுக்க!

இந்த நேரத்தில்...?

ஒரு பெரியவர், பெரியவர் என்றால் வயதும் அவ்வளவு அதிகமல்ல 40-தானிருக்கும், என் பக்கமாக வந்தார்—நின்றார்—துவக்கினார்.

"மாம்பலத்திற்கு எத்தனைவது நம்பர் பஸ் சார் போகிறது" என்று அன்புடனும், பணிவுடனும் கேட்டார்.

னேன். அந்தப பெரியவரும் என்னிடம் எத்தனை அன்புடன் பழகினார் தெரியுமா?

"அதோ, இதோ" என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த எங்களை நோக்கி, அந்த 11-ம் நம்பர் பஸ்ஸூம் வந்து கொண்டிருந்தது. அது எங்களை நெருங்க நெருங்க, நாங்கள் அதில் ஏற எங்களைத் தயார் செய்து கொண்டிருந்தோம்.

என்னைக் கேட்க வேண்டுமா, நான் தான் கசாப்புக்கடையைப் பார்த்தே புன்னகை புரிபவனாயிற்றே, பூக்கடை கண்ணில் தென்பட்டுவிட்டது, சும்மாவா இருப்பேன்?

"11-ம் நம்பர் பஸ் சார்" என்று, அவருக்கும் மேலான அன்புடனும் பணிவுடனும் சொன்னேன்.

பஸ் இன்னும் வரவில்லை.

எனக்கு இன்னும் நாலே நாலு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

பெரியவரோ...சென்னையில் எந்த எந்த இடங்களுக்கு, எப்படி எப்படிப் போகவேண்டும் என்று கேட்டார். எல்லா விவரங்களும் சொல்லி உதவினேன். எனது ப்தட்டமான நிலைமையைக்கூட, நான் சமாளித்துக்கொண்டு, சென்னைக்குப் புதிதான அவருக்குச் சிரித்த, முகத்துடனேயே மேலும் பல விவரங்களையும் சொல்லி உதவி

புதிய வெளியீடு!

ஜூலியஸ் ஸீஸர்

மூலம்: பெருங்கவி ஷேக்ஸ்பியர்

தமிழ்: கோவி. மணிசேகரன்

மாவீரன் ஸீஸரின் மாண்பு; பெருவீரன் ஆன்ட்டனியின் அனல் தெறிக்கும் பேச்சு; கேஷியஸின் வஞ்சம்; மயக்குமொழிக்கு செவிசாய்த்து அழிந்த புரூட்டஸின் பரிதாபம்; இவ்வளவையும், தேன் நடையில், தித்திக்கும் தமிழில் இதில் இடம்பெற்றிருக்கின்றன. சுவைத்து மகிழுங்கள்.

விலை ரூ. 1—0—0

கலை மன்றம் — சென்னை 1

"நானுவது ஊர் பார்க்க வந்தவன், மெதுவாகக்கூட போகலாம்; நீங்கள் பாவம், ஆபீஸுக்குப் போறவங்க, நேரம் ஆயிட்டுதேன்னு பயந்துக் கிட்டேயிருந்தீங்க; பார்த்தீங்களா அந்தப் பகவானுப் பார்த்து, 11-ம் நம்பரைத் தள்ளிகிட்டு வந்து விட்டான்" என்று வியப்புடன் கூறினுர்.

"ஆமா சார் ஆமா" என்று அன்புடன் அவரிடம் சொல்லியவாறே துடித்துக்கொண்டு நின்றேன், அதில் ஏற!

பஸ் எங்கள் அருகிலேயே வந்துவிட்டது! நல்ல கூட்டம் அதிலே!

நின்றது!

ஒரு ஆளும் அதிலிருந்து இறங்கவில்லை.

கண்டக்டரோ, "ஒரு ஆள் ஒரு ஆள், ஒரே ஒரு ஆள்தான்—ஏறலாம்" என்று பலங்கொண்ட மட்டுக்கும் கத்தினுர்.

நான் கம்பியைப் பிடித்துத் துடியாகத் துடித்த வண்ணம் ஏறிக்கொண்டிருந்தேன்.

ஆனுல்...?

ஒரே பிடியாகப் பிடித்துக் கீழே தள்ளப்பட்டேன்—கீழே என்னைத் தள்ளியவர் அந்தப் பெரியவர் தான்—தாம் ஏறிக்கொண்டார்!!!

கண்டக்டர் விசில் ஊதினுர்—பஸ்ஸும் போய் விட்டது!

உதவிய நான் ஏமாந்தேன், எவருக்கு உதவி செய்தேனே அவரால்!

இனிமேல்...?

நித்தமும் நான் படித்துப் பின்பற்றிவரும் அந்தப் பட்டே பட்டே பகவத் கீதைகளையெல்லாம், இந்தப் "பஸ் ஸ்டாப்பிங்"கில்கொண்டு வந்து போட்டுக் கொளுத்தி விடுவதுதானடே, சுத்த சன்மார்க்கம்?

அடுத்த இதழில்...

❀ **"பர்மிய கலாச்சாரத்தில் ஒரு கண்ணேட்டம்"**—ஏ. என். எஸ். ஹஸ்புல்லாகான் தரும் ஆராய்ச்சிக் கட்டுரை.

❀ **"அவனும் கணவன்"**—இந்த நகைச்சுவை சிறுகதையை மணிசேகரன் எழுதுகிறுர்.

❀ **"வசந்தத்தில் காஷ்மீரம்!"**—படிக்க பரவச மூட்டும் வசந்த காலக்கட்டுரை.

❀ **"பாசம்"**—தாகூரின் சிறுகதை.

❀ **"அத்தை மகள் பி. ஏ."**—'இதயன்' தரும் சிறுகதை.

❀ **"புழுதி"**—இச்சிறு கதை. ஆனந்தன் பி. ஏ. எழுதியது.

❀ **"தயிர்ச் சாதம்"**—நகைச்சுவை ஓரங்க நாடகம். கே. கே. சாமி எழுதியது.

❀ **"இளநீர் குளம்"**—செல்வராசனின் சரித்திரச் சிறுகதை.

இன்னும் பல பகுதிகள் வழக்கம் போல் இடம் பெறுகின்றன.

“என்னுங்க கலாநிதி இது?

“தெரியவில்லையா பாலு?

“தெரிகிறது—நீங்கள்தான் சொல்லுங்களேன்!”

“பாலு! சொல்கிறேன்! இதுதான் தற்போது பாண்டிச்சேரித் தாய், தமிழ் நாட்டு மக்களுக்குத் தரும் பால்! — இப்போதாவது தெரிகிறதா?”

11

பாலு :

என்னைத் தொடர்ந்து அந்தப் போலீஸ்காரனும், சப்-இன்ஸ்பெக்டரும் ஏன் வந்தார்கள் என்பதை என்னால் யூகித்துக்கொள்ளவே முடியவில்லை.

நடந்துகொண்டேயிருந்தேன்.

சந்திரா என்னிடம் சொல்லியனுப்பியபடியே “எதிரொலி” அச்சாகும் இடத்தைக் கண்டேன், அந்த அச்சகத்துக்குள்ளே போய்க் கலாநிதியைப் பார்க்கவேண்டும் என்றேன்.

பார்க்க ஏற்பாடு செய்தார்கள். கலாநிதி ஏதோ தமது தனியறையிலிருந்து எழுதிக்கொண்டிருந்தார்.

வணங்கினேன்.

வணங்கினார்—உட்காரச் சொன்னார், நாற்காலியில்! உட்கார்ந்தேன். புன்னகை புரிந்தார். நானும் புன்னகை புரிந்தேன்.

“உங்களை எங்கோ இதற்கு முன் பார்த்ததாக ஞாபகம்” என்றார்.

ஒரு தடவை சந்திராவின் உடல் நிலை கவலைக்கிடமாக இருந்த போது அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வாடகை வண்டி அமர்த்தப் போயிருந்தேனல்லவா, அப்போது வண்டிக்காரனிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் போது, என்னைக் காறி உமிழ்ந்து விட்டு, வண்டியில் தாம் ஏறிப் போன கலாநிதிதான், அதற்குள் இவ்வளவு பெரிய செல்வாக்குடன் வளர்ந்துவிட்டார் என்பதை யூகித்துக் கொண்டேன், அவரைப் பார்த்த உடனேயே! அப்படியிருந்தும் எனக்கு அந்தச் சம்பவத்தை அவரிடம் இப்போது நினைவு கூற என் மனம் விரும்பவில்லை.

என்னை யார் என்று, சந்திரா சொல்லச் சொன்ன வண்ணமாகவே சொல்லி அறிமுகம் செய்து கொண்டேன்.

அன்பாகப் பேசினர். இது வரையிலும் நான் அவர்மேல் வைத்திருந்த விமர்சனத்தை மாற்றிக்கொண்டேன். மேடையில் ஒன்று, வாழ்வில் ஒன்று என்ற தீய நிலையை மாற்றிக்கொண்டார் என்பதை உணர்ந்து மகிழ்ந்தேன்.

"சந்திரா என் தங்கை நேரில் சொல்லியது போலவே தங்களை இங்கு அனுப்பியதுபற்றி நான் ரொம்ப சந்தோஷப படுகிறேன். ஒரு நாள் அப்படியே படம் எடுக்கிற விஷயமாக வெளியிலே இயற்கைக் காட்சிகளில் நல்லது களைத் தேர்ந்தெடுக்க நான் என் நண்பர் நல்லமுத்துவுடன் அந்தப் பக்கமாக காரில் போயிருந்தேன். தங்கையைச் சந்திக்க நேர்ந்தது. கதைகளைக் கேட்கத் தோன்றியது. கேட்டேன். கண்ணீர்விட்டேன். அப்பவே சொல்லிவிட்டேன், தங்கையே என் மைத்துனர் வந்ததும் அனுப்பிவை என்று" என்பதாக தமது பேச்சை முடித்தார்—அவரது குறுகிய வாக்கியங்களிலேயே அவரது பெருகிய அன்பினை உணர்ந்து கொண்டேன்.

சொல்லும், செயலும் இந்த நாட்டில் இணைந்துவிட்டது—இனிமேல் சுவர்க்கமும் பூலோகமும் கூட இணைந்துவிடும் என்று என் மனம் தனக்குள் கூறி மகிழ்ந்து கொண்டது.

"இன்றிலிருந்து நீங்கள் என் 'எதிரொலி' பத்திரிகையின் உதவி யாசிரியர்" என்றார்.

" உங்களை வணங்குகிறேன்—வாழ்த்துகிறேன்" என்றேன்.

"நன்றி" என்று முகமலர்ந்தார்.

"நான் பாக்யசாலி" என்றேன்.

"இன்றிலிருந்தே நீங்கள் இங்கே வேலை துவக்க வேண்டுமென்பது கூட அல்ல, என் தங்கை சந்திரா ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குக் குணம் பெற்று போன பிறகே நீங்கள் இங்கு வந்து வேலை துவக்கினாலும் போதும்" என்றார்,. கனிவுடன்.

புறப்பட்டேன்.

"மானேஜர்" என்றார்.

வந்தார், அவர்.

"இனிமேல் இவர்தான் நமது "எதிரொலி"யின் உதவியாசிரியர். அட்வான்ஸாக ஒரு 100-ரூபாய் கொடுங்கள்" என்றார். மானேஜர் என்னை அழைத்தார். கலாநிதியை வணங்கிவிட்டு மானேஜரிடம் அவரது அறைக்குள் போனேன். பணம் தந்தார். புறப்பட்டேன்.

இரண்டு வாரங்கள் கழிந்தன

சந்திரா பூரண குணம் பெற்றாள். வீட்டிற்குக் கூட்டி வந்தேன். ஆசிர்வாதத் தாத்தா அருகிருந்து, தாய்போல, சந்திராவின் உடல் தேற, பக்குவங்கள் செய்து கொடுத்தார்.

"அத்தான்! என் உடல் சுகமாகிவிட்டது. நீங்கள் இன்று முதல் கூட ஆபீசுக்குப் போய் வரலாம். என்று நினைக்கிறேன்" என்று அன்று நானும் சந்திராவும் தனிமையில் பேசிக்கொண்டிருக்கும் போது சந்திரா என்னிடம் கூறினாள். மறுநாளே வேலைக்குப் புறப்படுவதாகத் திட்டமிட்டேன்.

மறுநாள்.

காலையில் சிற்றுண்டி தயார் செய்து தந்தாள். மதியத்திற்காக உணவை ஒரு சிறு பாத்திரத்தில்

வைத்து அழகுறக் கட்டித் தந்தாள். இன்று, தாத்தாவும் மிகுந்த பூரிப்புடன் காணப்பட்டார்.

"சந்திரா போய் வருகிறேன்" என்று வழியனுப்பினேன், மலர்ந்த முகத்துடன்!

அடுக்களையில் நின்று கொண்டிருந்தவாறே என்னைச் சைகை காட்டிக் கூப்பிட்டாள். போனேன். தாத்தா விலகித் திண்ணைப் பக்கமாக வந்துவிட்டார்.

அடுக்களையிலே......

சந்திரா என்னென்னமோ சொன்னாள்—நானும் என்னென்னமோ சொன்னேன் — அத்தனையும் மழலை — அத்தனையும் காதல்— அத்தனையும் இன்பம்! சில விநாடிகள்தான் அப்படி!

'போய் வருகிறேன்' என்று செல்லமாக அவளது கன்னத்தில் தட்டிவிட்டுப் புறப்பட்டேன், அடுக்களையிலிருந்து! அவளும் என்னுடன் தாத்தா நிற்கும் திண்ணைப் பக்கமாக வந்தாள்.

தாத்தா ஏதோ ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பது போல், கூரையையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்.

"என்ன தாத்தா கூரையிலே" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை, பாலு! இச்! இச்!! என்று பல்லியின் சப்தம் போல கேட்டது. கூரையைப் பார்த்தால், பல்லியையும் காணோம்."— என்றார் ஒருவித குறும்புச் சிரிப்புடன்!

புரிந்துகொண்டோம், நானும் சந்திராவும்!

"பல்லி வெட்கப்பட்டு மறைந்திருக்கும் தாத்தா" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, நாணிய முகத்துடன் சந்திரா அடுக்களைக்குள் போய் விட்டாள்.

"நீங்கள் இருவரும் ஏன் வெட்கப் படுகிறீர்கள்; நான் பல்லியைத் தானே சொன்னேன்" என்று மீண்டும் மீண்டும் குறும்பு வார்த்தைகளைத் தொடர்ந்தார், தாத்தா!

"போங்கள் தாத்தா — உங்களுக்கு வேறு வேலை என்ன" என்ற அன்புக் கோபத்துடன், தாத்தாவை வணங்கிவிட்டு, அப்போதே, வேலைக்குப் புறப்பட்டேன்.

"எதிரொலி" காரியாலயத்தில்... எனக்குத் தனியறை, தனி மேசை, தனி நாற்காலி, தனி மரியாதையும் கூட! இத்தனை வசதிகள் அங்கே பாக்கித் தொழிலாளிகளுக்கும் இல்லையே என்று கவலைப் பட்டேன். போகப்போக கலாநிதியிடமே மன்றாடி எல்லாத் தொழிலாளிகளுமே வசதிபெறச் செய்து விடலாம் என்ற மனச் சமாதானத்தில், எனது தனி வசதிகளை ஒப்புக்கொண்டு அனுபவித்து வந்தேன். அடிக்கொருதரம் இந்த நல்லமுத்து என்பவன்தான் வந்து என்னை ஏதாவது கிண்டல் செய்து கொண்டிருப்பான். அவன் கிடக்கிறான் என்று நான் மௌனமாகவே இருந்துவிடுவேன்.

"தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் போய் பேசிவந்தேன். பேச்சை, "எதிரொலி"யில் போடுங்கள்" என்றார், கலாநிதி! போட்டேன். பத்திரிகையின் விற்பனை அதிகரித்தது. எனக்குச் செல்வாக்கு, நாளுக்கு நாள், "எதிரொலி" காரியாலயத்தில் வளர்ந்து வந்தது.

அன்று...?

என்னைத் தனது அறையிலிருந்த வாறே அழைத்தார், கலாநிதி.

போனேன். அங்கே அவருடன் நல்லமுத்துவும் இருந்தான்.

பேசிக்கொண்டிருந்தோம்.

பேச்சுவாக்கில், "என் தங்கை சந்திரா, எப்படி, உங்களுக்கு முறைப் பெண்ணு" என்று ஒரு கேள்வியைக் கேட்டார், கலாநிதி.

"தெரியாதது போலவே கேட்கிறீர்களே" என்றேன்.

"நிஜமாகவே எனக்குத் தெரியாது! பாலு! சொ்ல்லப் பிரியம் என்றால் சொல்லுங்கள்—இல்லாவிட்டால் வேண்டாம்" என்றார்.

"சந்திராவை, அவளது சாகக் கிடந்த கணவனை மோகன் என்னும் என் நண்பன்தான், எனக்கு மறுமணம் செய்து வைத்தான்".

"பாலு! நான் ரொம்ப வெளிப்படையாகக் கேட்கிறேன்-கோபிக்க மாட்டீர்களே!

"சும்மா கேளுங்க".

"நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்துதான் மோகனை கொன்று விட்டதாக.........ஒரு வதந்தி—எப்பவோ.........எங்கேயோ என் காதில் விழுந்ததாக ஞாபகம்."

"ஐயோ!...அது எங்களுக்குத் தெரியாது. சத்தியத்திடம் கேளுங்கள் அதற்குத்தான் தெரியும்."

"அந்தச் சத்தியம் எங்கேயிருக்குது என்ற ரகசியமும் யாருக்கும் தெரிய மாட்டேங்குதே" என்று இடைமறித்தான், நல்லமுத்து!

"தயவு செய்து உங்களுடன் பேச விரும்பவில்லை நல்லமுத்து—கலாநிதி சார் இவரை தயவு செய்து என்னிடம் பேசாமல் இருக்க ஏற்பாடு செய்யுங்கள்."

"பாலு! நீங்கள் நம்ம நல்லமுத்துவை அப்படி ஒன்றும் நினைத்து விடாதீர்கள். கடகட-ன்னு ரயில் மாதிரிதான் பேசுவாரே தவிர, அவர் அன்பு என்னமோ தென்றல் காற்றை மாதிரித்தான் மெதுவா அப்படியே உலாவும்" என்று சிபார்சு பேசினர் கலாநிதி.

பதில் சொல்லவில்லை, நான்.

"சரி! இஷ்டமிருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம். நான் ஒண்ணும் அவரோடு உங்களைப் பேசச் சொல்லிக் கட்டாயப்படுத்தவில்லை" என்றார்.

அதற்கும் மௌனமாகவே இருந்தேன். நல்லமுத்து வெளியே எழுந்து போனான், சீட்டியடித்து ஒரு சினிமாப் பாட்டைப் பாடிக் கொண்டே!

அப்புறம் நானும் கலாநிதியும் பேசிக்கொண்டிருந்தோம்!

"சம்பளம்தான் அதிகமாக தருகிறேனே, இன்னும் ஏன் அந்தக் குடிசை வீட்டிலேயே கிடந்து நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். ஊர்க்குள்ளே ஒரு நல்ல மாடிவீடாகப் பார்த்து வந்துவிடுங்களேன்" என்று யோசனை சொன்னார் கலாநிதி.

"வேண்டாம் சார். அதை அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளலாம் என்றிருக்கிறேன்."

"ஏன், இந்த வருஷம் வாங்குகிற சம்பளங்களை என்ன செய்கிறீர்கள்?"

"பக்கத்துக் கிராமத் தொழிலாளர் சங்கத்துக்கு இப்போது போதிய நிதியில்லாமல் ரொம்ப கஷ்டப் படுகிறார்கள—பணக்காரர்களிடம் போய் கேட்டால், எங்கள் தலையில் நாங்களே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதா என்று கேட்கிறார்கள்—ஆகையால், என் சம்பளத்திலே எங்க வீட்டுச் செலவுரூபாய் ஐம்பது போக, பாக்கியை அப்படியே மிச்சம் பிடித்து, வருகிற தொகையைக் கொண்டு ஒரு தியேட்டர் வாடகைக்கு அமர்த்தி கலைவாணர் **N. S.** கிருஷ்ணன் அவர்களைக் கூப்பிட்டால், அவர் சந்தோஷமாக வந்து நிதி நாடகம் நடத்தி தருவார். அதன் மூலமாக ஆயிரக்கணக்கான ரூபாய் சங்கத்துக்கு நிதியாகக் கிடைக்கும் என்று நானும் சந்திராவும் சேர்ந்தே முடிவு பண்ணித்தான், இப்படிச் சேமித்து வருகிறோம்" என்றேன்!

"வேண்டுமானால் அதிகச் சம்பளம் தருகிறேன்—வீடு, ஊர்க்குள்ளேயே பார்த்து வந்துவிடுங்களேன்" என்று மேல் யோசனை கூறினார், கலாநிதி!

"வேண்டாம்! உழைப்புக்கு அதிகமாக ஊதியம் பெறுவது, உழைப்புக்குக் குறைவாக ஊதியம்

பெறுவதைவிட ஆபத்தான விஷயம் என்பது என் அபிப்ராயம் கலாநிதி" என்று சற்று காரமான குரலிலேயே சொன்னேன்,

"உங்களை மெச்சுகிறேன்" என்ருர், மலர்ந்த முகத்துடன்.

"இப்படி நமது நட்பு வளர ஆசைப் படுகிறேன்" என்றேன், மகிழ்வுடன்.

டேபிளில் உள்ள மணியைத் தட்டினர். ஆபீஸ் பையன் வந்தான்.

"கொண்டுவா" என்ருர்.

கொண்டு வந்து, அவர் முன்பிலும் என் முன்பிலும் வைத்தான் கையில் எடுத்து 'மள மள' வென்று குடித்தார். நானும் கையில் எடுத்தேன். ஆனல்......ஒரு மாதிரியான கெட்ட நாற்றம் வீசியது.

"என்னுங்க கலாநிதி இது?"

"தெரியவில்லையா பாலு!"

"தெரிகிறது — நீங்கள்தான் சொல்லுங்களேன்!"

"பாலு! சொல்கிறேன்! இதுதான் தற்போது பாண்டிச்சேரித் தாய் தமிழ் நாட்டு மக்களுக்குத் தரும் பால்!— இப்போதாவது தெரிகிறதா?"

"தெரிகிறது" என்று வெறுப்புடன் சொன்னேன். "உங்களுக்கு வேண்டாம் என்ருல், பசுவின் பால் வேறு தனியாகத் தருகிறேன்......அதற்காக ஏன் சீறுகிறீர்கள் பாலு!......டேய் பயலே! பாலுவுக்கு பால் கொண்டுவாடா, பால்" என்ருர் உளறலுடன்.

அதற்குள் நல்லமுத்து வந்து "தொலைந்தது நமது பத்திரிகை" என்ருன். "என்ன நல்லமுத்து" என்று அவசரத்துடன் கேட்டார், கலாநிதி.

"தாழ்த்தப் பட்டோர் மாநாட்டிலே ஏதோ சர்க்காரைத் தாக்கி, அளவுக்கு மீறி பாலு பேசிவிட்டாராம். அதுக்காக அரெஸ்ட் பண்ண இங்கே வரப்போகிருர்களாம் — விஷயத்தை ஸப்-இன்ஸ்பெக்டர் சந்தானம் ஐயர் கிட்டே போன் பண்ணி கிரஹித்தேன்"— என்று சொல்லிக்கொண்டே என் முன்னிருக்கும் பிராந்தியை எடுத்துக் குடித்தான்.

சிகரட் புகை! மதுநாற்றம்! கலாநிதி நல்லமுத்து — இவர்களின் ஆட்டம்! சகிக்கவில்லை!

சந்திரா குடிசையின் வாசல் நடையில் நின்ற வண்ணமே ஒவ்வொரு நாள் மாலையிலும் என்னை அடங்காத ஆசையுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் அழகுக் காட்சி, என் மனத்திரையில் வந்து வந்து மறைந்தது—இதற்கிடையே போலீஸார்கள் என்னை விலங்கிட்டு அழைத்துச் செல்வது போன்ற காட்சியும் மனத்திரையில் வந்து வந்து மறைந்தது.

இதே நேரத்தில்...?

காரியாலயத்தின் முன்னே ஏதோ ஒரு 'வேன்' வந்து நின்று, கதவைத் திறந்து ஆட்கள் இறங்கும் சப்தம் கேட்டது!

இங்கே...

கலாநிதியும், நல்லமுத்துவும் 'கிளாஸ்'களை எடுத்து மறைத்து வைத்து விட்டு, சிகரெட்டுகளை ஸ்டெயிலாக ஊதிக்கொண்டிருந்தனர்—எங்களது அறையின் பக்கமாக பூட்ஸ்களின் சப்தம் கேட்டது. போலீஸ்காரர்களாகத்தான் இருக்கலாம் என்று உறுதியே செய்து கொண்டேன். நல்லமுத்துப் பயல், "சிறைச்சாலை இதென்ன செய்யும்" என்ற சுந்தராம்பாளின் பாடலை முனங்கிக்கொண்டேயிருந்தான்!

(தொடரும்)

சரியான பரீட்சை

டி. சின்னத்தம்பி

நீங்களே சொல்லுங்கள் அரை மணி நேரத்திற்கு முன்புதான் என்னை இழுத்து வந்து இலை போட்டு என்மேல் இருந்த பாசத்தாலோ, அல்லது ஞாபக மறதியாலோ, மோர்சாதத்தில் கூட ஒரு கிண்ணம் நெய்யைத் தலை கீழாகச் சாய்த்துப் பரிமாறிய அத்தை, இரண்டாம் தரம், அதுவும் கற்பகம் பரிமாற நான் சர்ப்பிடுவதைப் பற்றி என்ன நினைப்பாள். கற்பகம் தான் விஷயமறிந்தால் என் வயிற்றைப் பற்றி என்ன நினைப்பாள் என்று வெட்கமும் வேதனையும் பட்டுக் கொண்டிருந்தேன். நான் எதை விரும்பவில்லையோ அது நடந்து விட்டது! அத்தை விளக்கை எடுத்து வந்து "யார் அந்தப் பிள்ளை? இத்தனை நேரம் எங்கேயப்பா போய் இருந்தாய்?" என்று கனிவோடு விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்.

"சரிதான்! நான் அப்பவே நினைந்தேன், நீ சரியாகச் சாப்பிட வில்லை யென்று. அது சரியாய் போயிற்று! மெதுவாகச் சாப்பிடு. ஒன்றும் அவசரமில்லை. கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போய் விடாது. அதுவும் கற்பகம் பரிமாறுகிறாள். வயிறும் நிறைய எற்றுக் கொள்ளும்" என்றாள் அத்தை. கற்பகம் விழுந்து விழுந்து சிரித்தாள். "நன்றாய்த்தான் இருக்குது அத்தை! இரண்டாம் முறை சாப்பாடா?" என்றாள். முகூர்த்தத்தில் நலிங்கின் போது பாடினார்களே 'மாப்பிள்ளை சமர்த்தரடி சாப்பிடுவதில்' என்ற அந்தப்பாட்டைப் பாடிக்காட்டி "அது இவருக்கு ரொம்பவும் பொருத்தம்" என்றாள். என் அசட்டுத்தனத்தை மறைக்க வேறு வழியின்றி மீண்

டும் அவர்கள் சிரித்த சிரிப்பிலே கலந்துக் கொண்டேன். அத்தை போய்விட்டாள். சாப்பாட்டு அறை ரகளையில் நானும் புத்தகத்தைப் போட்டு விட்டு மாடி வராண்டாவிற்கு வந்து விட்டேன்.

சற்று நேரத்தில் புத்தகம் ஏந்திய வாணியாகக் கற்பகம் என்முன் நின்றாள். இது என்ன புத்தகம் என்றாள் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்குப் படிக்கிறீர்களா என்றாள். படித்துப் பாரேன் என்றேன். அண்ணா நாளைக்கே இந்த இரவைப்பற்றி ஒரு புத்தகம் எழுது விடுவார் என்றாள். அவர் இன்னும் பார்க்கக் கூட இல்லையே என்றேன். உண்மையும் உயிரும் உள்ள மதனி 'முதல் இரவுப் புத்தகமாக' அவர் பக்கத்திலே இருக்க, பொய்யும் போலியுமான இந்தப் புத்தகத்தைக் கட்டிக் கொண்டு அழ அவர் என்ன புத்தகப்புழுவா? அவர் 'அட்வகேட்' என்றாள்.

அப்போது தான் நான் மாப்பிள்ளை சட்டப் புத்தகத்தைக் கொடுக்கும் சாக்கில் மாடி ஏறப் போட்டத் திட்டமும், அவசரத்தில் வேறு புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் இருப்பதும் தெரிந்தது. என் மௌனத்தைக் குலைத்து 'இன்று பூரண சந்திரன்' என்று வான வெளியை நோக்கினாள். நான் அவள் வதனத்தையே நோக்கினேன். அவள் என்னைக் கவனித்தாள். சந்திரனை இங்கே எங்கே பார்க்கிறீர்கள் என்றாள் தன் உடையைச் சரி செய்து கொண்டு. உண்மையும் உயிருமுள்ள சந்திரனைப் பழிக்கும் பிம்பம் எதிரே நிற்க வான வெளியை நோக்க நான் என்ன பைத்தியமா? நான் இலக்கிய பி. ஏ. என்றேன், அவள் முகமென்னும் பூங்காவில் ஒரு முல்லைச் சிரிப்புத் தோன்றி மறைந்தது. அவளும் மறைந்தாள். நானும் படுக்கையில் சாய்ந்தேன். வள்ளுவனுடைய களவொழுக்கத்தைக் கௌரவிக்க அந்தக் கட்டத்தைத் தாண்டக் கூடாதல்லவா?

மறுநாள் வீடே வெறிச் சென்றிருந்தது. நான் எங்கள் வீட்டிலேயே நளன் ஆகிவிட்டேன். எதோ ஒரு சூறாவளி என்னைக் கப்பற்படையில் சேர்த்தது. ஆறு மாதந் தான் கடிதத் தொடர்பு. நான் வெளிநாடு போனபின் அதுவும் நின்றது. பின்பு நான் நாஜிகளின் கைதி. ஆறு ஆண்டுகள் உருண்டு விட்டன. என் குடும்பம் கற்பகம் உட்பட எனக்கு எதுவுமே தெரியாது. அவர்களுக்கும் அப்படித்தான். மீண்டும் விடுதலை பெற்றேன். ஆறுமாத விடுமுறையுடன் சொந்த நாட்டுக்கு விரைந்தேன். கல்கத்தாவரைக் கவலையின்றிவந்தேன். கல்கத்தா வந்த பின்தான் வகுப்புக் கலவரம் என் கலவரத்துக்கு வித்திட்டது. அந்த ஒரு நாள் ஒரு யுகமாகி விட்டது. என்னை எந்த நிலை வரவேற்றாலும் சரி அவளைக்காண வேண்டும். இப்படிப்பட்ட இன்ப நினைவுகளில் அந்தத் துன்பச் சூழ்நிலையை மறந்து இருந்தேன்.

வண்டி நின்று புறப்படுவதும், யாரோ அந்தப் பெட்டியில் ஏறுவதையும் உணர்ந்தேன். திடுக்கிட்டேன். இனி எல்லாம் திடுக்கிடும் விஷயங்கள் தான் என்பதை என்னால் அப்போது எப்படி உணர முடியும்? போர்வீரனாகக் கிளம்பியவன் போலீஸ் 'லாக்கப்' அறையின் உறவினன் ஆகிவிட்டேன்.

இன்ஸ்பெக்டர் இமயவரம்பன்.

அன்றுகாலை 7-மணிக்கு நான் வழக்கம் போல் 'மோட்டார்பைக்கில்' போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன். அங்குள்ள மூன்று "இன்ஸ்பெக்டர்களில்" நான்தான் முதல்வன். என் சாகக்கள் எனக்கு மரியாதை செய்துவிட்டு என்னை லாக்கப் அறைக்கு அழைத்துச் சென்று ஒரு முகமதிய வாலிபனைக் காட்டி அவன் மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டின் மனுவையும் தந்தனர். நான் ரிப்போர்ட்டை கெட்டோட்டமாகப் பார்த்துவிட்டு அவனையும் ஒரு நோட்டம் பார்த்தேன். உடனே என் மைத்துனர் பாண்டியனுக்கு போன் மூலம் என் அனுதாபத்தைத் தெரிவித்து உடனே வருவதாயும் சொன்னேன். இந்தக் கேஸினால் பாதிக்கப் பட்டது என்மைத்துனர் தங்கை கற்பகம். ஆதலால் என் சகாக்கள் அதைப்பற்றி என்னிடம் விவாதிக்காமல் மௌனம் சாதித்தனர். என் கோபத்திற்கு எல்லையே இல்லை. உடனே அவனை இழுத்து வரும்படி கர்ஜித்தேன். பிறகு எங்கள் போலீஸ் தோரணையில் விசாரணை ஆரம்பமாயிற்று.

என் கோபத்தைக் கண்ட என் சகாக்கள் அவனை எமலோகத்திற்கும் அனுப்பத் தயாராய் விட்டார்கள். அவன் மட்டும் எதற்கும் அஞ்சியதாகத் தெரியவில்லை. கையில் விலங்குடன் கம்பீரமாக என் முன் நின்றான். அவன் தந்த வாக்குமூலங்கள் எனக்குப் பூரண நம்பிக்கையளிக்க வில்லை, என்றாலும் சிந்திக்க வேண்டியதாய் இருந்தது. அவனைப் பற்றிய உண்மையை அறியத் துருவித்துருவிப் பல கேள்விகள் கேட்டேன். அவன் விடைகளை ஒன்று சேர்த்துப் பார்த்ததில் அவன் சொந்த ஊர் திருச்சி என்றும், பெயர் விமலன், அவன் அண்ணன் ஒரு ஹெட்கான்ஸ்டேபிள், அவன் பெயர் இமயவரம்பன் என்பதைத் தெரிந்து கொண்டபின் இமய மலையே ஆட்டம் கொடுத்த மாதிரி இருந்தது.

என் மனம் ஆறு ஆண்டுகளுக்கு முன் நோக்கிச் சென்றது. என் கண்கள் அடிக்க முடியாத ஆவலோடு காமிராவொடு தன்னை விஞ்ஞானி ஒப்பிட்டதை நிரூபித்தன. ஆம் இவன் உண்மையில் என் தம்பி விமலன் தான்! என் மனம் உலைக்களமாகி விட்டது. என் வாய் பேசமறுத்து விட்டது. ஆனால் சகோதரபாசம் என்னையும் மீறிச் சூழ்நிலையையும் மறந்து என் வாயை "விமல்!" என்று வீரிடச் செய்து விட்டது. என் உடல் அவனை அணைத்துக் கொண்டது.

அவன் கண்ணீர் பட்டு உணர்ச்சி பெற்றேன். என் பதவி என்னைப் பார்த்துப் பரிகசித்தது. விடுவித்துக் கொண்டு வெளியேறினேன். நடக்க வேண்டியவைகள்

வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!
எஸ். எஸ். வாஸன்
எழுதிய
தம்பதிகள்
சுகமாய் வாழ்வதெப்படி?
குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய கிளேஸ் பதிப்பு
விலை 3-12-0
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது
ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

நடக்கட்டும் எனும் உத்தரவை என் வாய் கூறத்தவர வில்லை. என் வீட்டின் சாய்வு நாற்காலியில் கண்ணைத் திறக்க மனமின்றிக்கற்பனைச் சிற்பியாகக் கிடந்தேன். நான் எண்ண மென்னும் உளி கொண்டு செதுக்கிய உருப்படியான சித்திரங்கள் தான் கீழே வருவன.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு உரிமையோடு கண்டித்ததற்காக என்னைக் கலங்கவிட்டு வெளியேறிய பிறகு இன்றுதான் அவனை நான் கண்டேன். எந்தத் தம்பியை இனிப் பார்க்க முடியுமா என்று ஏங்கினேனே, அதே தம்பியைத்தான் கண்டேன். ஆனல் சந்தர்ப்பம் அவனைச் சுமூகமாகவரவேற்க முடியாமல் சதி செய்துவிட்டதை நினைக்கும் போது என் எஃகு உள்ளமும் உருகி விட்டது. ஆறு ஆண்டிற்குள் நான் எவ்வளவு மாறியிருக்கிறேன். என்ருலும் என் இதயத்தில் அவன் ஒரு குழந்தை தானே! அந்த அன்புதான் என் முன் இன்று விலங்கிடப்பட்டு நிற்கும் அதுவும் அவனை மணக்க எந்த அணங்கு அருந்தவ மிருந்தாளோ, அவளிடமே தகாத முறையில் நடந்து கொண்ட குற்றம் சாட்டப்பட்டு நின்ற அந்த நிலையை நினைக்கவே பயங்கர ாக இருந்தது.

நான் நேர்மையின் அவதாரம் என்பதற்காகத்தானே, 'இன்ஸ்பெக்டர்' பதவிக்கு உயர்த்தினர்கள் மேல் அதிகாரிகள். சென்னை நகரிலேயே இன்ஸ்பெக்டர் இமயவரம்பன் என்ருல் படா படா போலீஸ் அதிகாரிகள் கூட யோசிக்க வேண்டிய விஷயம் என்ற அளவுக்கு சட்டத்தின் பிரதிநிதியாக இருந்து விட்டு, நெருப்பு என்ற சிறப்புப் பெயர் பெற்று விட்டு, சகோதரபாசம் என்ற மாரியால் கரியாகி விட்டான் என்ற அவச் சொல்லை ஏற்பதா? என் கீழ் வேலை செய்யும் இதரர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்க• உபதேசம் செய்து விட்டு, என் தம்பி என்று தெரிந்த பின் அந்த உபதேசத்தை நிறுத்திக் கொள்வதா? கற்பகம் விமலன் வருங்கால வாழ்வு நம் நேர்மைக்குப் பலியாகி விட்டால் என்று நினைத்தவுடன் என் நெஞ்சமே வெடித்து விட்டால் கூடத் தேவலை என்றுதான் நினைத்தேன். இப்படியாகக் குழம்பிக் கிடந்த நேரத்தில் என் மைத்துனர் குடும்பமே திரண்டு என் வீட்டிற்கு வந்தனர். நான் சமாளித்துக் கொண்டு வந்தவர்களை ஒருவாறு வரவேற்றேன். விமலனும் அவர்களுடன் வந்திருந்தது தான் என் ஆச்சரியத்தை அதிகப்படுத்தின. விமலன் வேதனையுடனின்றி அனைவருடன் குதூகலமாகவே இருந்தான். பிண மேடையின் மீது யுத்த நாடகம் நடத்தியவன் அவன். இது அவன் இராணுவ அனுபவம் போலும்.

நான் என்னதான் போலீஸ்புலி என்ருலும், கொலை நடந்தபின் குற்றப்பத்திரிக்கை தயாரிப்பதிலும், கொள்ளை போனபின் சேதத்தின புள்ளி விபரங்களைச் சேகரிப்பதிலும், களவு என்ருல் பழைய கள்வர்கள் ஜாபிதாவைப் புரட்டிப் பார்ப்பதிலும், கலவரம் என்று முன்பே தெரிந்தால் அவசரப்பட்டுக் கண்ணீர் புகையையும், தோட்டாவையும் செலவழித்து விட்டுக் கோர்ட்டில் சாட்சிக் கூண்டில் நிற்பதிலும், அறியாமல்

நடந்த கலவரத்திற்கு ஆம்புலன்ஸ் வண்டியுடன் விரைந்து செல்வதி லும், பக்காத்திருடன் என்றால் பிடித்துத் தருபவர்களுக்கு ரொக் கப் பரிசு என்று விளம்பரப் படுத் துவதிலும், பழக்கப் பட்டவன் தானே! தாக்கப்பட்ட இதயம் சமா தானம் அடையவில்லை. எப்ப டியோ அவன் தற்காலிக விடுதலை பெற்றான். அதுவரை திருப்தி. அடுத்த நாள் கடமைக்கும் இதற் கும் சம்மந்த மில்லை என்ற முடி வோடு, அவனுடன் மகிழ்வோடு பழகினேன். இழந்து விட்ட சகோ தரபாசம் புத்துயிர் பெற்று விட்ட தல்லவா? ஆனால் சமயம் வந்த போதெல்லாம் கடமையும், சகோ தர வாஞ்சையும், கிங்காங்கும், தாராசிங்குமாகி என் மனத்தினை 'ஹோவா' வாக்கிக் கொள்ளத் தவறவில்லை. கடமையே பெரிது என்னும் முடிவில் குற்றவாளியைக் கோர்ட்டில் ஆஜர்ப் படுத்தினேன். என் கடமை தீர்ந்தது. இனித் தீர்ப்பு கூறுவது நீதி மன்றம்.

நீதிபதிபாண்டியன்:

அன்று காலை 11-மணி. நான் கோர்ட்டில் ஆ ஜ ரா னே ன். கோர்ட் மரியாதைகள் என்னை வர வேற்றன. முதலாவதாக நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வழக்கு ஒரு பெண்ணைப் பலாத்கா ரம் செய்ததாக சென்னை 'சிடி போலீஸாரால்' தொடரப் பட்ட வழக்கு தான். சர்க்கார் வக்கீல் வாதி, பிரதிவாதிகளையும் சாட்சி களையும் விசாரித்தார். நான் வழக் கின் சாராம்சங்களைக் குறித்துக் கொண்டு வந்தேன். நான் தீர்ப் புக் கூறும் கட்டம் வந்தது. ஜூரி களும் பிரதிவாதியைக் குற்றவாளி எனக்கருத இடமுண்டு என ஏக மனதாக அபிப்பிராயம் கூறினார் கள்.

இந்தக் கட்டத்தில் மேற்படி வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதி தரப்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட் டது. காதலர்கள் ஒருவரை ஒரு வர் புரிந்து கொள்ள முடியாத நிலையில் மேற்படி வழக்கு புகார் செய்யப் பட்டதாகவும், மேற்படி புகாரைக் கொண்டு கோர்ட் பூரண நடவடிக்கைகள் எடுத்தால், தங்கள் வாழ்க்கையே பாதிக்கப் படலாம் என்றும், ஆகையால் மேற்படி வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுக் கேட்டும், சர்க்காருக்கு இதுவரை வீண் தொந்தரவு கொடுத்ததற்காக மன் னிப்புக் கோரியும் அதன் சாராம் சங்கள் தெளிவு படுத்தின.

நான் மனுவை ஆமோதித்து மீண்டும் விசாரிக்க நிமிர்ந்தேன். என் குடும்பம் அங்குக் காட்சியளித் தது. என் தங்கை கற்பகம் வாதி யாக என் எதிரே நின்றாள். என் மைத்துனர் விமலன் குற்றவாளிக் கூண்டில் நின்றான். எனக்கு என் னவோ மாதிரிதான் இருந்தது. சற்று நேரம் சென்றது. நான் நீதி பதி என்ற நினைப்பு வர; என் வாய் மௌன விரதத்தை மேற் கொண் டது. கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தேன். வாதியைப் பார்த் தேன்.

நான்: வ ழ க் கை வா ப ஸ் பெறுவது அவசியமென்று கருது கிறீர்களா?

வாதி: ஆமாம்......

நான்: மனுவிற்கு ஆ தா ர மான வழக்கில் எதிரி பலாத்காரம் செய்ததாகத் தானே நம்பினீர்கள்?

வாதி: அந்நிலையில் அப்படித் தான் நம்பினேன்.

நான்: பிரதிவாதி உங்கள் காதலர் அன்றி வேறு ஒரு அந்நி யர் என்று இருந்தாலும் வழக்கை வாபீஸ் பெற்றுக் கொள்வீரா?

வாதி மௌனம் சாதித்தார். நான் மீண்டும் விஷயத்தை விளக் னேன்.

மேற்கொண்டு நான் அவளை விசாரிக்க பிரியப்பட வில்லை. பிறகு என்னுடைய 'ஜட்ஜ் மெண்ட்' ஆரம்பமாயிற்று. பிரஸ்தாப வழக் கில் இந்து முஸ்லீம் கலவரத்தால் மாறு வேடம் பூண்டு ரயில் பிரயா ணம் செய்த வாதி பிரதிவாதி களின் வாக்கு மூலம் பலாத் காரம் நடந்திருப்பதாகவே ஒத்துக் கொள்ளுகின்றன. பிரதிவாதியின் கைக்காயமும் கன்னத் தழும்பும், வாதியின் கன்னத்தில் உள்ள அடித்தழும்பும், பலாத்காரம் நடந் தது என்பதற்கு அசைக்க முடி யாத சாட்சியங்களாக இருக்கின் றன. ஜூரர்களின் அபிப்பிராய மும் பிரதிவாதி குற்றவாளி என் பதே! மேலும் கப்பற்படையின் 'கேப்டன்' என்ற முறையில் இரா ணுவக் கட்டுப்பாட்டை மீறி ஆபத் தில் அடைக்கலம் புகுந்ததாகப் பாவிக்க வேண்டிய பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண் டது மன்னிக்க முடியாத குற்றம். இதற்குச் சட்டப்படி ஒரு வருடக் கடுங்காவலும் ரூ 1000ம் அபரா தம் விதிக்கபபட வேண்டும். ஆனல் வாதியின் வழக்கின் வாபஸ் பெறும் மனுவின் சாராம்சங்கள் உண்மை என்பதைக் கோர்ட்டார் அறிந்திருப்பதால், மனுவை அனு மதித்தாலும் சட்டம் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், நீதி மன்னிக் கக் கூடியதும் அல்ல பலாத்காரம். மேலும், குற்றத்தின் பூரண தண் டனையையும் அளித்தால் காதலன் தன்னைப் புறக்கணிக்கக் கூடும் என்பதே வழக்கை வாபஸ் பெறு வதின் முக்கிய நோக்கம். பலாத் காரம் செய்தவர் அந்நியர் என்றால் வாழ்க்கை வாபஸ் பெறப் போவ தில்லை என்பதை வாதி சற்றுமுன் தெளிவு படுத்திவிட்டார். அன்னி யன் செய்த பலாத்காரம், காதலன் செய்த பலாத்காரம் என்று பிரி வினை செய்து பார்ப்பது நீதி மன் றத்தைப் பொறுத்தவரை சட் டத்தை அவமதிப்பதாகும். மேலும் உண்மைக் காதல் என்பது அசம்பாவிதமாக ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களால் கைவிடக்கூடியது அல்ல என்பதே கோர்ட்டின் விளக்கம். ஆகவே சட்டத்தைக் கௌரவிக்கத் தள்ளுபடி மனுவை ஏற்றுக் கொண்டாலும் வழக்கைப் பூரணமாகத் தள்ளுபடி செய்யச சட்டம் இடந்தரவில்லை. ஆனல் தள்ளுபடி மனுவின் சாராம்சங்கள் உண்மையெனக் கோர்ட்டார் நம்பு வதால் காதலர்கள் மேல் கருணை காட்டிப் பிரதிவாதி குற்றவாளி யெனவேத் தீர்மானித்து அதிகத்

விருதை ந. இராமசாமி

இன்ப நிலா	1 0
வழுக்கி விழுந்தவள்	1 0
மலர்புரி ராணி	1 0
தளபதி	1 0
தாமஸ் மசாரிக்	1 0
இலட்சியப் பெண்	1 0
என் மகள்	0 8

கலைமன்றம் — சென்னை-1

தண்டனையைக் குறைத்து ஒருவார சிறை தண்டனையும் ரூ 100 அபராதமும் விதிக்கிறேன்.

ஜட்ஜ்மெண்டை முடித்தேன். நான் இப்பொழுது சாதாரணப் பாண்டியன். அந்த இடத்தை விட்டு எழவே சக்தியில்லை. மது வருந்திய நாகரிக மனிதன் போல் தள்ளாடிக் கொண்டு கீழே இறங்கினேன். ஒரு மனிதன் மிருகமாகி வீடு சேர்ந்தான். படுக்கையில் விழுந்தேன்.

என் அனுபவத்தில் எத்தனையோ வழக்குகளை விசாரித்திருக்கிறேன். மரண தண்டனை கூட விதித்திருக்கிறேன். அவைகள் எதுவும் கோர்ட் வாசலைத்தாண்டி என்னைத் தொடர்ந்ததில்லை. இந்த வழக்கு என் இதயத்தை வட்டமிட்டவாறே இருந்தது. நான் இன்று கூறிய தீர்ப்பு என் தங்கையின் வாழ்க்கைத் தீர்ப்பல்லவா? அவள் மனுவில் கண்டபடி தான் அவமானப் படக்காரணமான அவளை அவன் ஏற்றுக் கொள்வான் என எப்படி நம்புவது? நானே நீதி கூறியபின் எங்கள் உறவு பற்றி யெப்படிக் கற்பனை செய்வது? முதல் நாள் 8-மணிக்குப் பலாத்காரக் குற்றம் சாட்டப்பட்டவன் என் மைத்துனன் என்பதை உதவி சப்-இன்ஸ்பெக்டர்மூலம்அறிந்ததும்ஆத்திரம் அன்பாக மாறி எப்படியோ ஆறு ஆண்டுகளுக்குப்பின் மைத்துனன் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சியில் அசுரவேகத்தில் நான்தானே என் நண்பர் மூலம் ஜாமீனில் அவனை விடுதலை செய்தேன். கோர்ட்டுக்குப் போகச் சற்று முன் கூட என் தங்கை, மனைவி இருவரின் கண்ணீரைக் கண்டு தாளாமல் வழக்கைத் தள்ளி விடுவதாகத் தான் சொல்லிச் சென்றேன். என்றாலும் நீதியைத்தவறித்தீர்ப்பளிக்க என் மனம் எப்படிச் சம்மதிக்கும்? கதவழித்த குற்றத்திற்காகத் தன் கையைத் துண்டித்துக் கொண்ட பொற்கைப் பாண்டியனும், தன் தம்பியே யாயினும் பிறன் மனைவியைப் பலாத்காரம் செய்ததற்காக மலையின்றும் உருட்டித் தள்ளிக் கொலை செய்ய உத்தர விட்ட இராணி மங்கம்மாளும் வீற்றிருந்த நீதிமன்றமல்லவா தமிழ் நாட்டு நீதிமன்றம். பலருக்கு மரண தண்டனை யளித்து எமலோகத்திற்கு அனுப்பியதற்காகவோ, அல்லது உண்மையில் தருமத்தின்படி நீதி கூறுவதாலோ, நீதியில் நான் எமதருமன் என்று உரைக்கும் உலகம், என் தங்கையின் நலத்திற்கும், என் மைத்துனன் என்பதற்கும், நான் நீதியில் தவறி விட்டால் என்னைப்பற்றி என்ன நினைக்கும்? தமிழர்கள் நீதிக்கே என் மூலம் கறை படிவதா? எனக்குச் சிந்திக்கவே முடியவில்லை. எப்படியோ நீதி பிழைத்து விட்டது என்று ஒருவகையில் நிம்மதியடைந்தேன். என்றாலும் தங்கையின் வாழ்க்கையின் முடிவைப்பற்றி எண்ணிய போது கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியுமா?

கற்பகம்:

நான் வண்டியில் நிகழ்ந்த அக்கிரமச் செயலுக்காக அழுது தீர்த்தேன். அதற்குள் இன்னொரு பேரிடி என் தலையில் விழுமென்று நான் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அதுதான் அன்று போலீஸ் ஸ்டேஷனில் நடந்த விபரத்தை உதவி இன்ஸ்பெக்டர் என் அண்ணாவிடம் கூறினது.

அவன், அவராகி விட்டால் எனக்கு எப்படியிருக்கும்? அவரா என்று ஆச்சரிய மேலீட்டால் கூவினேன். என் அண்ணனையும் மதனியையும் தழுவிக் கொண்டேன். ஆனந்தக் கண்ணீர் என்பதை அப்போது தான் என் கண்கள் பெற்றுப் பாக்கியமடைந்தன. அடுத்த கணம் அண்ணுவும் மதனியும் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தனர்.

நான் தோட்டத்தின் ஒரு மரத்தடியை நோக்கி நகர்ந்தேன். அந்த நிகழ்ச்சிகள் என் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றன. எனக்கே வெட்கமாக இருந்தது. அவசரப்பட்டுப் புகார் செய்து விட்டதற்கு வருந்தினேன். இனி அவர் முகத்தில் எப்படி விழிப்பது? ஆறு ஆண்டு காலம் கன்னி விரதமிருந்தது இப்படி அவர் மனம் குன்றும்படிச் செய்யத் தானு?

அவர் பலாத்காரம் செய்தார் என்று எப்படித்தான் துணிந்து தீர்மானித்தேனே? தீர்க்கமாக யோசித்தால் குற்ற மனைத்தும் என்மேல் தானே இருக்கிறது. நான் அன்னிய இளைஞன் ஒருவன் இருக்கிருன் என அறிந்திருந்தும் அலட்சியமாகப் படுத்துக் கொண்டு அத்தான் நினைவால் ஆனந்த புரியில் உலாவும் போது, அவர் மடியில் தலையை வைத்துப் படுத்திருந்ததாகக் கனவு கண்டேனே! அந்த நினைவில் நானே அவர் மடியை ஆக்ரமித்து இருக்க முடியாது என்று எப்படி நிச்சயமாகக் கூற முடியும்? நானே அப்படிச் செய்திருப்பின் அவர் என் கன்னத்தை வருடியது எப்படித் தவருகும்? அவர் மட்டுமென்ன! அந்நிலையில் எந்த ஆண்மகனும் அப்படித் தானே நடந்திருப்பான்! எளிதில் உணர்ச்சி யெல்லையைப் பெண்கள் எட்டுவதில்லை எனும் இயற்கை நியதியைக் கூட மீறி எனக்கே அன்று சமாளிக்க முடியவில்லை என்ருல், பாலன் வாயில் பாதாம் அல்வாவைப் போட்டுவிட்டு அவன் அதை விளக்கெண்ணெய் என்று வெறுத்துத் தள்ள வில்லையே என்று வீண் கோபம் கொண்ட என் செய்கை என் உளநூல் அறிவுக் குறைவைத் தெளிவு படுத்தின. என்ருலும் அவர் எவ்வளவு கட்டுப்பாடாக என் கன்னத்தளவிலே நின்றிருக்கிருர் என்பதை எண்ணி ஒரு பெருமூச்சு விட்டேன்.

நான் "லேடி டாக்டர்" என்ற திரையில் எத்தனை வாலிபர்களின் களின் சரீரத்தைத் தொட்டு சிகிச்சை செய்துள்ளேன். அவர்கள் அனைவரும் என் பரிசத்தால் உணர்ச்சிவயப்பட்டு என் அழகைப் பற்றிச் சிந்தித்திருக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூற இயலுமா? நோயாளி எனும் தலைப்பில் தானே அத்தனையும் மறைக்கப் படுகின்றன. நானும் அதற்குத் தொண்டு எனத்தானே அர்த்தம் செய்து வந்தேன். ஏன் அந்த ரயில் நிகழ்ச்சியிலும் ஒரு நோயாளி நம் உடலைத் தொடுகிருன் என்று இருக்க முடியவில்லை. அப்படி இருந்திருந்தால் அவன் அவராகி விட்ட இப்பொழுது இவ்வளவு துன்பமில்லையல்லவா? அவரும் அந்த நிலையில் காமநோய்க் காரராகத்தானே இருந்திருக்க வேண்டும்!

—அடுத்த இதழில் முடியும்

★ அறிவிப்பு ★

கோயம்புத்தூர் சுற்று வட்டாரத்திலுள்ள வாடிக்கைக் காரர்களின் சௌகரியங்களுக்காக, சென்னை ஸ்ரீமகள் கம்பெனியின் கிளைநிலையத்தைக் கீழ்கண்ட இடத்தில் **1-4-55** முதல் திறக்கப்படுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வடுவூர் துரைசாமி அய்யங்காரின் நாவல்களும், கலைமன்ற வெளியீடுகளும், மூவர்ணப் படங்களும், சினிமா வசனங்களும், பாட்டுப் புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும், சென்னை விலைக்கே கொடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஸ்ரீமகள் கம்பெனி
15/402, வெரைட்டி ஹால் ரோடு,
கோயம்புத்தூர்.

தலைமை ஆபீஸ் :
ஸ்ரீமகள் கம்பெனி,
122, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1

மதுரைக் கிளை :
ஸ்ரீமகள் கம்பெனி,
150, நேதாஜி ரோடு,
மதுரை

என்று ஆரம்பிக்கும் முதல் பாடல் நம்மை ரசிக்க வைக்கிறது. அதை விட ரசிக்கச் செய்வது, என். எஸ். கே. பாடும் 'ஒண்ணுலே இருந்து' என்ற அறிவு செறிந்த பாடல். இசையமைப்பு, படத்தின் பாணிக்கேற்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

நடிப்பு:

சிவாஜி கணேசனுக்கு, இப் படத்தில் ஒரு புதிய பாத்திரம் தரப்பட்டிருக்கிறது. பாத்திரத்தை அறிந்து உயர்ந்த முறையில் நடித்திருக்கிறார். கனவுக் காட்சியின்போதுதான், நமக்கு சிவாஜி கணேசன் என்று தெரிகிறதே யொழிய, மற்ற சம்பவங்களில் ஒரு குணச் சித்ர நடிகராகவே மாறி விட்டார். சிவாஜி கணேசனையும் ஒரு, ஏன் நல்ல—குணச் சித்ர நடிகர் என்று தாராளமாகக் கூறலாம். அஞ்சலிதேவி ஏ, ஒன்! என். எஸ். கே., டி. ஏ. எம். எந்தவிதத்தில் மக்களைத் திருத்தலாமோ, அந்த விதத்தில் சம்பவங்களை உற்பத்தி செய்துகொண்டு நடித்து வெற்றி பெற்று விட்டனர். ஏனையோர் நன்றாக நடித்திருக்கிறார்கள். காட்சிக்கு நடுவே, தயாரிப்பாளர் பி. ஆர். பந்துலு வந்து போவது, என்னமோ மாதிரியிருக்கிறது. 'பூட் பாலி'ஷில் ராஜகபூர், தன்னை ஆல்பர்ட் ஹிட்ச்காக் என்று எண்ணிக் கொண்டு, ரயிலில் காட்சியளித்தது போல், பந்துலு நடைபாதையில் காட்சியளிப்பது நம்மைச் சிரிக்க வைக்கிறது.

டைரக்ஷன்

ப. நீலகண்டன் படத்தை, நன்றாகவும், தெளிவாகவும டைரக்ட் செய்திருக்கிறார். கனவுக் காட்சியை மிக மிக அழகாகச் சித்தரித்து இருக்கிறார். வறுமை வந்தபோது கோயில் சென்று கடவுளை வணங்க வேண்டுமென்ற அவசியம் அவ்வளவுத் தேவையில்லை. பொதுவாக, ப. நீலகண்டன் இப் படத்தின் மூலம் நன்கு வெற்றி பெற்றிருக்கிறார். தேசிகர் பாட்டின்போது, ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தி நன்றாக தன் திறமையைக் காமிராவின் மூலம் காட்டியிருக்கிறார். 'முதல் தேதி' எல்லோரும் குடும்பத்துடன், பலமுறை பார்த்து, ரசிக்க வேண்டிய உயர்ந்த திரைக் காவியம்!

—"எம்"

மீண்டும் 'கண்ணகி'

ஜூபிடர் பிக்சர்ஸார் முன்பு வெளியிட்ட 'கண்ணகி' படம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அக்கதையை '**சிலம்பு**' என்ற பெயரில் மீண்டும் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் தயாரிக்கப்படும். மேலும் ஒரு வியக்கத் தக்க செய்தி, இப்படம் 'கேவா' கலரில் உருவாகுமாம். நடிகர்கள் பட்டியல் இன்னும் தயாரிக்கப் படவில்லை.

என் அக்காள்

'வில்லன் டி. எஸ். நடராஜன் என்பவர் 'என் தங்கை' எழுதியவர் என்றும், அக்கதையின் நாடகத்தில் நடித்துப் புகழ்பெற்றவர் என்பதையும் அறிந்திருப்பீர்கள். தற்போது அவர் எழுதிய 'என் அக்காள்' என்ற கதையை கிரேட் இந்தியா பிக்சர்ஸார் படமாக்க முன் வந்துள்ளனர்.

கழகச் செய்திகள்

பரிசீலனைக் குழு

6. 3, 55 ஞாயிறன்று மாலை 2 மணிக்கு பிளாக்பள்ளி தி. மு. க. கட்டடத்தில் கூடிய மாநாட்டு வரவு-செலவு பரிசீலனைக்குழு கீழ்க் கண்ட வரவு-செலவுக் கணக்குகளை நுணுக்கமாகப் பரிசீலித்து ஏற்றுக் கொண்டது. வரவு-செலவு ஏற்கப் பட்டதன் அறிகுறியாகக் குழுவின ரின் கையொப்பம் பெறப்பட்டன. இத்துடன் மாநாட்டு வரவேற்புக் குழு கலைக்கப்பட்டது. செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

வரவுகள்

1. டிககட் விற்ற வரவு-	ரூ 3877-8-0
2. நன்கொடை	ரூ 591-8-0
3. மாநாட்டில்கடை கள்ஏலம்	ரூ 156-0-6
4. கைவசமிருப்பது	ரூ 100-1-0
மொத்த வரவு	ரூ 4725-1-6

செலவுகள்

1. பந்தல் அமைப்பு	ரூ 1942-9-6
2. விளம்பரம்	ரூ 655-8-0
3. பிரயாணச் செலவு	ரூ 1230-3-6
4. தபால், தந்தி	ரூ 103-9-6
5. பொதுச் செலவு	ரூ 1605-12-9
மொத்தச் செலவு	ரூ 5537-11-3
மொத்த வரவு	ரூ 4725-1-6
நட்டம்	ரூ 812-9-9

ஏ. டி. பிரான்சிஸ், (க.தி.மு.க. மாநாட்டுச் செயலாளர்)

எம். ஆர். பெருமாள், (க.தி.மு. க. மாநாட்டுப் பொருளாளர்)

திருமணம்

கலைமன்ற ஏஜண்டுமான திரு. அப்துல்லா, திருமதி. உசேன்பீ அவர்களை வாழ்க்கைத்துணைவியாக (20-2-55)ல் ஏற்றுக்கொண்டார். அதுசமயம் திரு. எம். பான்சிலால் தலைமையில் தி. மு. தசரதனும், மு. ரங்கநாதனும் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். திரு.டி. எம். ரத்தினம் நன்றி கூற வைபவம் இனிது முடிந்தது.

கலப்புத் திருமணம்

ஆரணி ராவ்சாகேப் சீனிவாச முதலியார் சத்திரத்தில் 2. 3. 55 புதன் காலை 9 மணிக்குத் தோழர் போளூர் கே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கலப்புத் திருமணம் நடைபெற்றது. மண மகன், தோழர் இராதா கிருட்டினன் (கருணீகர் வகுப்பு) மணமகள் தோழியர் சகுந்தலாதேவி (வள்ளு வர் வகுப்பு) என்பது குறிப்பிடத் தக்கதாகும். மணமக்களுக்கு ஏராள மான வாழ்த்துக் கடிதங்களும் மலர் மாலைகளும் மரியாதை செய்த பிறகு, தோழர், ஆ. மணிஎழிலன் சொற்பொழிவு ஆற்றினர். ஆரணி யில் இந்தப் புரட்சித் திருமணம் ஒரே பரபரப்பாக இருந்தது. பின்பு மணமகன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

உலக அரங்கம்

நீக்ரோவுக்குப் பத்திரிகைச் சங்கத்தின் பாராட்டு

நியூயார்க், மார்ச்: 17—

பொதுப் பணத்தால் நடக்கும் பள்ளிக்கூடங்களில் இன ஒதுககல் முறையைக் கையாளுவது அமெரிக்க அரசியற் சட்டத்துக்கு மாறுனது என்று அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்படி பெருமுயற்சி செய்த நீக்ரோ வழக்கறிஞர் தர்குட் மார்ஷலுக்கு நியூயார்க் பத்திரிகைச் சங்கம் 1955-ம் ஆண்டு தேசீயப் பொது விவகாரப் பரிசை வழங்கியிருக்கிறது.

மேல் ஜெர்மன் வர்த்தகக் கோஷ்டி இந்தியா வருகிறது

போன், மார்ச்: 17—

இந்தியா, பாகிஸ்தான், இலங்கையுடன் புது வ்ர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் நிமித்தம் மேற்கு ஜெர்மனி தூதுகோஷ்டியொன்று இன்று தொலை கிழக்குக்குப் பயணமாகியது.

துருக்கி-ஈராக்குடன் பிரான்ஸும் சேரும்?

பாரீஸ், மார்ச்: 17—

துருக்கி-ஈராக் ராணுவக் கூட்டு ஏற்பாட்டில் பிரான்ஸும் சேருவதைத் துருக்கி ஆதரிப்பதாயுள்ளது என்று பிரான்ஸ் வெளி விவகார மந்திரி பினே தேசீய அசெம்பிளி வெளி விவகாரக் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மரண தண்டனைக்குப் பதில் ஆயுட்சிட்சை

கொழும்பு, மார்ச்: 17—

மரண தண்டனையை ஒழிப்பதற்கு, இலங்கைப் பிரதிநிதிகள் சபை நேற்றுக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டது. பதவி வகிக்கும் கட்சியைச் சேர்ந்த ஒருவரால் பிரேரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட இந்தப் பிரேரணை சர்க்காருக்குச் சிபார்சு செய்வதாகும். மரண தண்டனைக்குப் பதில் ஆயுட்சிட்சை விதிக்கப்பட வேண்டுமென்று அந்தப் பிரேரணை கோருகின்றது.

சாதிப் பள்ளி

பம்பாய், மார்ச்: 16—

பம்பாய் அரசாங்கம், இனிச் சாதி வகுப்புப் பள்ளிக்கு உதவி செய்வதை நிறுத்திக் கொள்ளும் என்று தெரிகிறது.

அந்தப் பள்ளிகள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும்கூட, ஏற்கெனவே அவை சர்க்காரிடமிருந்து எவ்வித மானியத் தொகையும் பெறவில்லை. இனி அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு, சர்க்கார் பங்கு தராது என்று தெரிகிறது.

கேள்விகள்

கே: சில கடவுள் பக்தர்கள் பணத்தின் திமிரால் வயது முதிர்ந்தும் பல பெண்களுடைய கற்பைச் சூறையாடுகிறார்களே இதைப்பற்றித் தாங்கள் நினைப்பது யாது?

வி. எம். சுப்ரமணியன்
ஓலவக்கோடு

ப: முருகன் கிழவனாக வந்து வள்ளியை மணக்கவில்லையா? நளாயினி நாதனைக் கூடையிலே சுமந்துகொண்டு போய் வேசையிடம் விடவில்லையா? சிவபெருமான் கிழவனாக வந்து இயற்பகையார் மனைவியைக் கேட்கவில்லையா? அதைத் தானே நானும் செய்கிறேன் என்று கூறித் தப்பித்துக் கொள்வார். ஆகவே இதுபோன்ற அர்த்தமற்ற ஆபாசங்கள் நிறைந்த புராண மதங்களை ஒழித்துக் கட்டினால் நல்ல நிலைமைகள் நாட்டிலே நிலவும்.

கே: தற்போது உண்மையான பௌத்தமதம் எந்த நாட்டில் தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறது?

த. மு. குருசாமி
ஏழூர்.

ப: உண்மையான பௌத்தம் எங்குமே இல்லை. பௌத்தம் ஒரு மதமல்ல—பௌத்த நெறி அன்பு நெறி. இதனை எந்த நாடும் இன்று வரையில் **உண்மையாகக்** கடைபிடிக்க வில்லை.

கே: அண்ணா, அடிக்கும் கை அணைக்கும். இரகசியம் என்ன?

ப. கிருஷ்ணன்
ஏழூர், கிணத்துக்கடவு.

ப: அன்புள்ள கரங்கள் அணைப்பதிலும் அடிப்பதிலும் நன்மைகள் உண்டு. அன்பற்ற கரங்கள் அணைப்பதாலும், நன்மைஇல்லை—அடிப்பதாலும் நன்மைஇல்லை இதுதான் இரகசியம்.

கே: இங்கு பட்டப்பகலிலே காரிருள் சூழ்ந்து கிடக்கிறது என்று கூறினாரே காண்டேகர், எதைப் பற்றி கூறினார்?

எம். ராமசாமி
செலக்கரிச்சல்

ப: கண்ணிருந்தும் குருடர்களாக இருப்பவர் தம்மைக் கண்டும், அறிவிருந்தும் முட்டாள்களாக இருப்பவரைக் கண்டும் கூறியிருப்பார்.

கே: கோயில்கள் இருப்பது எதைக் காட்டுகிறது?

ராதைமணாளன்
K. G. F.

ப: நாட்டில் அறியாமை இன்னும் நிலைத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது!

கலைஞர் கருணாநிதியின்

கருத்தோவியங்கள்

தூக்குமேடை	1	8	0
பள்ளி வாழ்க்கை	1	0	0
களத்தில் கருணாநிதி	1	0	0
பெருமூச்சு	1	0	0
சிந்தனை ஆழி	1	0	0
இரத்தச் சுவடு	1	0	0
புராண போதை	1	0	0
பலிபீடம் நோக்கி	1	0	0
இனமுழக்கம்	1	0	0
நச்சுக்கோப்பை	0	12	0
வாழ முடியாதவர்கள்	0	12	0
கொலைக்களம்	0	8	0
பெரிய இடத்துப் பெண்	0	8	0
உணர்ச்சி மாலை	0	8	0
கருணாநிதியின் கருத்துரைகள்	0	8	0
தப்பிவிட்டார்கள்	0	6	0

★

விபரங்களுக்கு:

கலைமன்றம்

த. பெ. எண். 275 - சென்னை-1

Printed and Published by S. Francis, at Srimagal Press, 122, Varada-